Registered No. M-4483

Madras War Review { TAMIL 31-12-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV | 1943-௵ டிசம்பர்௴ 31௳, வெள்ளிக்கிழமை | இதழ் 17

வெற்றியடைகிறவரை நமக்கு ஓய்வில்லை

மாட்சிமை தங்கிய மன்னர் பிரான்

இந்த வருஷம் ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. கடவுளின் கட்டளைப்படி இதற்குள் பல நற்சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதற்காக, நாம் அவருக்கு நன்றி செலுத்துவோமாக!

தாராளமாகப் பயன்படக் கூடிய பலத்தை அமெரிக்கா நமக்கு அளித்திருக்கிறது. ரஷ்யாவோ மகா தீரச் செயல்களைச் செய்திருக்கிறது. சீனாவோ நெடுங்காலமாகப் பெருந் துன்பங்களைச் சகித்துக் கொண்டு போராடி வருகிறது. புத்துயிர் பெற்ற பிரான்சின் போர் உணர்ச்சி, அதிகப்பட்டிருக்கிறது. நமது முன்னேற்றத்தில் பெரும் பொறுப்புக்களை வகிக்க, பல நாடுகளிலிருந்தும், ஆண்களும் பெண்களும் முன் வந்திருக்கிறார்கள். இவர்கள் அந் நாடுகளின் புது மலர் போன்றவர்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து தான், கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் நமக்கு வெற்றி தேடித் தந்தார்கள்

சென்ற முறை நான் உங்களுக்குப் பிரசங்கம் செய்த பிறகு, பல விஷயங்கள் மாறுதலடைந்து விட்டன. ஆனால், நம் மக்களின் உணர்ச்சி மட்டும் மாறவில்லை. தோல்விகள் ஏற்பட்டபோது நாம் மனத் தளர்ச்சி யடையவில்லை. அது போலவே, வெற்றிகள் கிடைக்கும் போது பெருமிதம் கொள்ளவு மில்லை

எதிர் காலத்தில் இன்பம் நிலவு மென்று நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்தாற் போல், நமக்கு ஏற்படப் போகும் இன்ப வாழ்வு பற்றிய கனவுகள் காண்கிறோம். வெற்றி பெற வேண்டுமானால், இதுவரை உழைத்ததை விட, கஷ்டப்பட்டதை விட, அதிகமாக உழைக்க வேண்டுமென்றும் கஷ்டப்பட வேண்டுமென்றும் நமக்குத் தெரியும். கண்ணியமான முறையில் வெற்றியடைகிற வரையில், நாம் ஓய்ந்திருத்தலாகாது

மாட்சிமை தங்கிய மன்னர் பிரான், கிருஸ்மஸ் விழாவன்று செய்த
வானொலிப் பிரசங்கம்

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மாட்சிமை தங்கிய மன்னர் பிரான்	1
"வெற்றி யடைகிற வரை நமக்கு ஓய்வில்லை".	1
மன்னர்பிரான் கிருஸ்மஸ் வாழ்த்து	2
தலையங்கம் : அற்புதமான ஆண்டு	3
பாட்டு : வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களுக்கு வாழ்த்து	4
ஒன்பது விதிகள்	4
யுத்தத்தின் ஐந்தாவது புது வருஷ விழா	5
கொலையாளியும் உளவாளியும்	6
போருக்குப் பின் மக்கள் நிலைமை	7
பாட்டு : "வீறுகொண்டெழுவோம்"	8
செஞ்சிலுவையும் செண்ட் ஜான்ஸ் ஆம்புலென்சும்	9
போரும் பொருளாதாரமும்	11
போர்க் கோலமும் இந்தியப் பெண்களும்	12
யுத்தமும் கைத்தொழிலும்	13
பாட்டு : வெற்றி ஆண்டு 1944	13
யுத்தமும் தொழிலாளரும்	14
பங்கீடு முறை	15
பாட்டு : பாவையர் சேவையைப் பாராட்டுதல்	15
ஜப்பானியக் கொடுங்கோல்	16
இந்தியா, அன்றும், இன்றும், என்றும்	17
பழங்கணக்கும் புதுக்கணக்கும்	18
பாட்டு : ஹிட்லர் துயரம்	19
யுத்தமும் ஜனநாயகமும்	20
விளம்பரம் : விடுதலை	20

மன்னர்பிரான் கிருஸ்மஸ் வாழ்த்து

கிருஸ்மஸ் விழாவை முன்னிட்டு, மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் வானொலிப் பிரசங்கம் செய்த போது கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

மீண்டும், நானும் என் அரசியாரும் இங்கிலாந்திலுள்ள எங்கள் வீட்டிலிருந்து உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமுள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் கிருஸ்மஸ் விழாவை முன்னிட்டு வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் அனுப்புகிறோம். நான் பேசுவதை உங்களிற் சிலர் விமானங்களி லிருந்து கேட்கலாம்; சிலர் கப்பல்களிலிருந்து கேட்கலாம். பசிபிக் மகா சமுத்திரத்திலே யுள்ள ஒரு தீவிலேயோ, இத்தாலிய மலையுச்சிலேயோ யுள்ள காடுகளில் உட்கார்ந்து கொண்டு, போர் முனைக்குப் போவதற்குக் காத்துக் கொண்டிருக்கும் சிலரும் கேட்கலாம். உழைத்து அலுத்து ஓய்ந்திருக்கிறவர்களில் சிலரும் கேட்கலாம். காயப்பட்டோ, நோயாகவோ வைத்திய சாலைகளில் படுத்திருக்கிறவர்களும் கேட்கலாம்.

இன்றையத் தினம் நீங்கள் எங்கிருந்தாலும், உங்களுடைய எண்ணமெல்லாம் வெகு தூரத்தி லிருக்கும் உங்கள் அன்பிற்குப் பாத்திர மானவர்களிடந் தான் இருக்கும். இந்த கிருஸ்மஸ் விழாவன்று உங்களுக்கும் அவர்களுக்கும் நான் கூறும் மொழிகள், நம் அனைவரையும் ஒன்று படுத்தத் தக்கனவா யிருக்கு மென்று எதிர் பார்க்கிறேன்.

இந்த எண்ணத் தோடு, படைகளையும் உத்தியோகங்களையும் சேர்ந்த அனைவருக்கும் நல்லதிர்ஷ்டமும், மனோ பலமும் பெருக வேண்டு மென்று வாழ்த்துகிறேன். படைகளி லிருந்தும் உத்தியோகங்களி லிருந்தும் எப்போது திரும்பி வருவார்கள் என்று எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் அவர்களுடைய உறவினர்கள், தம் பழைய நினைவுகளைக் கொண்டு பெருமை யடையலாம். அவை பற்றி அவர்கள் பெரும் நம்பிக்கைகள் கொள்ளலாம். இவற்றால், அவர்களுடைய மனம் பலப்படும்.

நேச நாடுகளுக்கு வாழ்த்து

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் வசிக்கும் அனைவருக்கும் இந்த கிருஸ்மஸ் வாழ்த்துச் செய்தியை நான் அனுப்புகிறேன். நமது வீரத் தோழர்களான மற்ற நேச நாட்டினருக்கும் நான் வாழ்த்துச் செய்தி யனுப்ப வேண்டு மென்று நீங்கள் விரும்புவீர்க ளென்று எனக்குத் தெரியும். அவர்கள் போர்க் களத்தில் நம்முடனிருந்து போராடுகிறார்கள்.

இந்த வருஷம், ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. கடவுளின் கட்டளைப்படி இதற்குள் பல சம்பவங்கள் நிகழ்ந் திருக்கின்றன. அவருடைய அருட் செயல்கள் பற்றி அவருக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

தாராளமாகப் பயன் படக் கூடிய பலம் அமெரிக்காவுக்கு உண்டு. ரஷ்யாவோ மகா தீரச் செயல்களைச் செய்திருக்கிறது. சீனாவோ நெடுங் காலமாகப் பெருந் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறது. மறு மலர்ச்சி பெற்ற பிரான்சின் போர் உணர்ச்சி மிகுந்து விட்டது. நமது முன்னேற்றத்தில் பெரும் பொறுப்புக்களை வகிக்க பல நாடுகளிலிருந்தும் ஆண்களும் பெண்களும் முன் வந்திருக்கிறார்கள். இவர்கள் அந் நாடுகளின் புது மலர் போன்றவர்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து தான் கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும், நமக்கு வெற்றி தேடித் தந்தார்கள்.

சென்ற முறை நான் உங்களுக்குப் பிரசங்கம் செய்ததி லிருந்து, பல விஷயங்கள் மாறுத லடைந்து விட்டன. ஆனால் நம் மக்களின் உணர்ச்சி மட்டும் மாற வில்லை. தோல்விகள் ஏற்பட்ட போது நாம் மனத் தளர்ச்சி யடையவில்லை. அது போலவே, வெற்றிகள் கிடைக்கும் போது பெருமிதம் கொள்ளவு மில்லை.

எதிர் காலத்தில் இன்பம் நிலவும் என்று நாம் எதிர் பார்க்கிறோம். அடுத்தாற் போல், நமக்கு ஏற்படப் போகும் இன்ப வாழ்வு பற்றிய கனவுகள் காண்கிறோம். வெற்றி பெற வேண்டுமானால், இது வரை உழைத்ததை விட, கஷ்டப் பட்டதை விட, அதிகமாக உழைக்க வேண்டு மென்றும் கஷ்டப்பட வேண்டு மென்றும் நமக்குத் தெரியும். கண்ணியமான முறையில் வெற்றியடைகிற வரையில், இந்த வேலையினின்று நாம் ஓய்ந்திருத்த லாகாது.

மன உறுதியும் வீரமும்

இதற்கிடையே, இந்தத் தீவுகளுக்குள்ளே, நம் முன்னோர்களின் கண்ணியத்தைக் காப்பாற்ற முயன்றோம். இருள் சூழ்ந்த பருவத்தில் தனித்திருந்து சமாளித்த நாம், ஒளி தோன்றும் பருவத்திலும் விடா முயற்சியோடும் வீரத்தோடும் போராடிக் கொண்டு வருகிறோம். நாம் எப்படி முன்னேற்ற மடைந்தோம் என்பது பற்றி, படிப்படியாகக் குறிப்பிடுவதற்கு, இது வல்ல சமயம்.

தம் கடமையை நிறை வேற்றும் பொருட்டு நமது ஆண்களும் பெண்களும், எங்கே போனபோதிலும் புதிய நண்பர்களைத் தேடிக் கொள்ளுவது மட்டு மன்றி, பழைய நண்பர்களுடன் மேலும் நெருக்கங் கொள்ளுகிறார்கள். அவர்கள் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவும், பிறருடைய உள்ளங்களை உணர்ந்து கொள்ளவும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல நாடுகளுக்குள்ளாகவும் புதிய நேயம் உண்டாக அடிகோலினார்கள். நெடு நாடுகளுக்கு முன்னதாகவே பிற நாடுகளோடு ஏற்பட்ட நேயத்தைப் பலப்படுத்தினார்கள்.

புதிய நம்பிக்கை

இதன் பயனாக ஒவ்வொரு நாட்டிலும் புதிய தோர் நம்பிக்கை முளைக்கிறது. தியாகத்தில் ஒன்றுபட் டிருக்கிறவர்களுக்கு நாடுகளை மீட்கவும் புதிதாக அமைக்கவும் திறமை யுண்டாகும் என்பது தான் அந்த நம்பிக்கை. சென்ற கோடை காலத்தில் நான் வடாப்பிரிக்காவுக்குப் போனபோது, இதற்குச் சான்று கண்டேன்.

நேச நாடுகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் மனோ வாக்குக் காயத்தினால் ஒன்றுபட் டிருப்பதைக் கண்டேன். தம் நோக்கத்தை நிறைவேற்றுவதில் தான், அவர்களுக்குள் போட்டி யிருந்தது. எதிரியைத் தோற்கடிக்க வேண்டு மென்னும் ஒரே நோக்கந் தான் அவர்களுக் கிருந்தது.

பல வகை இனங்களைச் சேர்ந்தவர்களும் இதே உணர்ச்சியோடு தான் சபா மண்டபத்தில் கூடினார்கள்; மகா நாட்டு மேசையைச் சுற்றி உட்கார்ந்தார்கள். யுத்தத்திற்கு உடனடியாக என்னென்ன தேவை என்பது பற்றி, ஒரு சிலர் விவாதித்தனர். உலக மக்களுக்கு யுத்தத்தினால் ஏற்படும் சேதத்தை எப்படி குணப் படுத்துவது என்பது பற்றி யோசித்தார்கள். பசித்தவர்களுக்கு உணவளிப்பது, இருக்க இடமில்லாதவர்களுக்கு விடுதியளிப்பது, சேதப்பட்ட வற்றைப் பழுது பார்ப்பது, ஏழைகளுக்கு உதவுவது முதலியவை பற்றியும் அம் மகா நாட்டில் ஆலோசித்தார்கள்.

கிருஸ்மஸ் நாளாகிய இன்றையத் தினம், யுத்த மேகங்கள் கலைவதைக் காண்கிறோம். கடும் மனச் சோர்வினின்று ஒரு புதிய ஊக்கம் பிறக்கும். போராட்டத்தினின்று ஒரு புதிய சகோதரத்துவம் முளைக்கும். இதில் நமக்கு நம்பிக்கை யுண்டு; ஆகவே இதினின்று நாம் ஆறுதல் கொள்ளுவோம்.

இன்று நாம் கொண்டாடும் பழைமையான நம் அன்பிற்குரிய விழாவிலிருந்து, நாம் புது பலம் பெறுவோம். உலகத்தைத் திக்குமுக்காடச் செயயும் இந்தப் போர்ப் புயலை எதிர்த்து நிற்க, நமக்கு எதிர் காலத்தில் இந்தப் பலம் உதவும். இப்படிப் பட்ட போர்ப் புயல் இது வரை ஏற்பட்டதே கிடையாது.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-௵ டிசம்பர்௴ 31௳, வெள்ளிக்கிழமை | இதழ் 17

அற்புதமான ஆண்டு.

1918-ம் வருஷத்தில், லண்டன் பிஷப் அவர்களைப் பார்த்து, ஒருவர் ''பிஷப் சாமி! இக்காலத்தில் உலகத்தில் உயிர் வாழ்வது மிகவும் உன்னதமானது'' என்று கூறினார். காம்ரேயை நாம் கடுமையாக பெரும் சேதத்திற்குள்ளாகிக் கொண்டு தாக்கிய நாளை யடுத்துத் தான், அவர் அப்படிக் கூறினார், அப்போது ஹிண்டன்பர்க் அரண் வரிசை தகர்க்க முடியாததாகக் காட்சி யளித்தது. நாம் ஊக்க மிழந்திருந்தோம். இருந்தபோதிலும், உலகத்தில் இன்று மரணமும், நாசமும், கொடுமையும், அவமானமும், கவலையும் துன்பமும் மேவி வந்த போதிலும், இந்தச் சமயத்தில் நாம் உயிர் வாழ்வது ஒரு நல்லதிர்ஷ்டமென்று தான் சொல்ல வேண்டும். சென்ற வருஷம் எப்படிப்பட்டது! என்று கூறி வியக்கிறவர்கள், இந்த வருஷம் எப்படிப் பட்டதோ என்று நன்மைகளை எதிர்பார்க்கத் தான் செய்வார்கள்.

1943-ம் வருஷத்தில் பல சம்பவங்கள் கோர்வையாக நிகழ்ந்தன. இவை உலக சரித்திரத்தில் கொட்டை எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டும். இவற்றால் இனி ஏற்படக் கூடிய நல்ல பலன்கள் ஏராளம்; என்றாலும், அவை இன்று உருவின்றிக் கிடக்கின்றன, அந்த மகா சிறந்த நன்மைகளால் பேருக்கம் தோன்றுகிறது உண்மையிலேயே இவை காலச் சக்கரத்தின் அதிர்ஷ்ட மாதங்களாகும். ஒன்றைக் குறித்து சுருக்கமாக விமரிசனம் செய்வோம்; மற்றொன்றைக் குறித்துத் திட்டமிடுவோம்.

ஸ்டாலின்க்ராட், கார்கோப், ஓரல், கியெப், நிவில், பார்டியா, திரிபோலி, மெசினா, நேபில்ஸ், ஓர்டோனா, பெர்லின், ப்ரெமென், கொலோன், டசல்டார்ப் முதலிய டஜன் கணக்கான கைத்தொழில் கோட்டைகளில், அட்லாண்டிக் கடல் முழுதிலும் நேச நாட்டு விமானங்களின் கை ஓங்கியே யிருக்கிறது. ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் போராட்டத்தில், நாம் வெற்றி யடைந்து விட்டோம் என்று சொல்லலாம். பாசிசம் அலட்சியப் படுத்தப்பட்டு அவமதிக்கப்பட்டு விட்டது. அதே கதி தான் அதைத் தோற்றுவித்தவருக்கும் ஏற்பட்டது. அலூஷியன் தீவுகளும் கிஸ்கா தீவுகளும் மீண்டும் நம் வசமாயின. நியூ கினியைப் போலவே நியூ பிரிட்டனும் நேர்மையான முறையில் கை மாறிக் கொண்டிருக்கிறது. மாஸ்கோவிலும், கெய்ரோவிலும், டேரானிலும் நேச நாட்டுத் தலைவர்கள் சந்தித்துப் பேசினார்கள். ரஷ்யாவில் 'காமின்டர்ன்' கலைக்கப் பட்டு விட்டது. ஒரு புதிய சோவியத் தேசிய வாழ்த்துப் பாட்டு ஏற்பட்டிருக்கிறது. பிவிரிட்ஜ் திட்டம் அமைந்தது. ஹாட் ஸ்பிரிங்ஸ் என்னுமிடத்தில் ஒரு மகா நாடு நடை பெற்றது. பிரான்சிலும் செர்பியாவிலும், க்ரீசிலும் செக்கோஸ்லோவேகியாவிலும் போலந்திலும் கிளம்பியுள்ள கலகத் தீ மிகவும் நியாயமானது. இதினின்று புதிய நம்பிக்கை முளைக்கிறது. போதாக் குறைக்கு ஜெர்மன் யுத்தக் கப்பலான ''ஸ்கார்ன்ஹார்ஸ்ட்'' என்னும் பிசாசுக்கு பிரிட்டிஷ் கப்பற் படை, ஒரு 'கிருஸ்மஸ் இனாம்' கொடுத்திருக்கிறது. ஆகவே, உண்மையாகவே, இது எப்பேர்பட்ட வருஷம்!

அச்சு நாடுகள் மகா பாதகமாக வெற்றிகள் பெற்று ஓங்கிக் கொண்டிருந்தபோது, பிரிட்டன் அதைத் தன்னந்தனியாக எதிர்த்து நின்றது. அந்த இன உணர்ச்சி அதன் தலைவரான மிஸ்டர் சர்ச்சிலிடம் துலங்கியது. தர்க்க ரீதியான ஆலோசனையின் முடிவு எப்படிப் பட்டதாக விருந்த போதிலும், இந்த யுத்தத்தை வெல்லத் தான் வேண்டுமென்று அவர் அப்போதே பிரகடனம் செய்தார். இதற்கு மாபெரும் முயற்சி செய்யப்பட வேண்டுமென்று அவர் கோரினார். நாடும் அதற்கு இசைந்து முயற்சித்தது. எகிப்தை நாம் ஏறக்குறைய இழந்து விட்டோம் என்று தான் சொல்லவேண்டும். கிரீசைக் காப்பாற்றத் தவறிவிட்டோம். மலேயாவையும் பர்மாவையுங் கூட நாம் இழந்து விட்டோம். நாம் ரஷ்யாவுக்கு அனுப்பி யிருக்கும் யுத்தத் தளவாடங்களில் ஐந்தில் ஒரு பங்குத் தளவாடத்தைக் கொண்டு, இவற்றை நாம் காப்பாற்றி யிருக்கக் கூடும். கடைசியில் மிஸ்டர் சர்ச்சில் கூறிய சோதிடம் பலித்தது. கிருஸ்மஸ் விழாவன்று நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டது போல, "நம் முன் முன்னோர்களின் நற் பெயரைக் காப்பாற்ற நாம் முயல வேண்டும்.'' ஸ்டாலின் கிராடில் தான் நிலைமை மாறத் தலைப்பட்டது. 1943-ம் வருஷம் வெற்றி தோன்றியது. இது எப்பேர்ப்பட்ட வருஷம்!

இந்தியாவைப் பற்றியோ? ஒரு அறிஞர்; நேர்மையானவர்; வீர முள்ளவர்; நல்ல அதிர்ஷ்டசாலி; பொருள் வேட்டைக்காரப் பேராசைக் காரர்களால் பெரிதும் புண்பட்டவர்; இவர் சில மாதங்களுக்கு முன்பு தான் இந்தியாவை விட்டுக் கப்பலேறினார். இவர் மகா கடுமையான வேலையை ஏழு வருஷ காலம் செய்து கொண்டிருந்தார். அவர் செய்த தியாகம் மகத்தானது. மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபு இச் சென்னை நகருக்குக் கடைசியாக விஜயம் செய்த போது, அவருக்கு ஒரு விருந்தளிக்கப் பட்டது. அப்போது அவர் ஒரு பிரசங்கம் செய்தார். பலரும், பல கட்சிகளும், மாறுபட்ட பலவகைக் காரியங்களுக்காகக் கிளர்ச்சி செய்து, இந்தியாவின் யுத்தப் போக்கைத் தடைப் படுத்திக் கொண்டு வந்தார்கள். மேன்மை தங்கிய

லின்லித்கோ பிரபுவின் பிரசங்கங்களோடு, இவர்களுடைய பிரசங்கங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், இவை எவ்வளவு அற்பமானவை என்றும், அவை எவ்வளவு பெருந் தன்மையானவை என்றும் விளங்கும். தனக்குப் பிறகு ராஜப் பிரதிநிதியாக வரப் போகும் மேன்மை தங்கிய வேவல் பிரபுவைப் பற்றியும் குறிப்பிட்டார். அக்குறிப்புக்கள் அவருடைய உள்ளத்தினின்று எழுந்தவை. ஆகவே, அங்கே கூடியிருந்த அனைவருடைய உள்ளங்களிலும் அது தைத்தது. வேவல் பிரபு ஒரு பெரும் வீரர். மகா கண்ணியமானவர். உலகமே நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் இந்தச் சமயத்தில், அரசியல் அமைப்புப் பற்றிய சிக்கல்களில் அதன் வாக்கிய அமைப்புக்கள் எப்படியிருக்க வேண்டுமென்று முடிவு கட்டுவது, தமது கடமை யல்ல வென்றும், ஆனால், நாடு முழுதும் யுத்த முயற்சியைப் பெருக்க வேண்டியது தான், தான் இந்தியாவிற்கும் உலகத்திற்கும் செய்யவேண்டிய முக்கியமான கடமை என்றும் தாம் கருதுவதாக மெய்ப்பித்து விட்டார். இதன் பொருட்டு இந்தியாவின் கஷ்டங்களையும் குறைபாடுகளையும் ஒரே பிரச்சினையாகப் பரிசீலனை செய்கிறார்; மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலுமுள்ள இனத்தவர்களுக்கும் கட்சியினருக்கும் சதா பெருகிக் கொண்டேயிருக்கும் குறைபாடுகளை அவர் பொருட்படுத்துவ தில்லை. இவ்வாறாக, இந்நாட்டில் ஒற்றுமைக்கு அடிகோலப்படுவதைக் காண்கிறோம். இந்த ஒற்றுமை மகா முக்கியமானது; அனைவரும் விரும்புவதும் அது தான். தன் மூல பலத்தினாலும் பூகோள நிலையினாலும் இந்தியாவுக்குரிய நிலைமையை, ஒற்றுமை யில்லை யென்னும் காரணத்தினால், அது இழந்து விடலாமா? எல்லையற்ற புதுயுக வாழ்விலே, ஆதிக்கம் வகிக்கப் போகும் கர்த்தாக்கள் இந்தியாவைப் பற்றி எந்த அளவிற்கு அக்கரை கொள்ளுவார்கள் இந்தியாவோ, வேற்றுமைகளுக்கும் கட்சிப் பிரதி கட்சிகளுக்கும் இன்னும் ஆளா யிருக்கிறது. முட்டாள் தனமாகவும் அற்பத் தனமாகவும் அரசியல் பேரம் பேசுகிறார்கள். கையாட்களைக் கொண்டு கிளர்ச்சிகள் செய்கிறார்கள். கடவுளின் அருட்செயல்களை அரசியல் அருஞ்செயல்களாகத் திரித்துக் கூறுகின்றனர். தக்க சமயத்தில் வாயாடுகிறவர்களுக்குத் தான் செல்வாக்கும் வெற்றியும் கிடைக்கிறது. இந்தக் குறைபாடுகளையும் ஆபத்துக்களையும் இந்திய ஆராய்ச்சியாளர்கள் உணர்ந்திருப்பது போல, இந்திய பொதுமக்களும் நன்கு உணருவார்களானால், 1943-ம் வருஷம் ஒரு மகத்தான வருஷமாகத் தான் விளங்கும்.

இன்று பிறக்கும் வருஷத்தைப் பற்றி, யாரும் தெளிவாக எதையும் சொல்ல முடியாது; எழுதவும் முடியாது. அந்த வார்த்தைகள் பொய்த்துப் போனாலும் போகலாம். அடுத்தாற்போல நிகழக்கூடிய சம்பவங்கள் உலக சரித்திரத்திலேயே மகா முக்கியமானவையா யிருக்கக் கூடும். அவை பற்றி நினைக்க நினைக்க மனம் கொதிப்படைகிறது. இப்படியாகுமோ, அப்படியாகுமோ வென்று யோசிக்க யோசிக்க தலை கிறுகிறுக்கிறது. சென்ற 4-வருஷங்களாக ஐரோப்பாவைச் சூறையாடிக் கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத்தாரைத் தக்கப்படி தண்டிக்க, லட்சக் கணக்கான படையினரும் ஏராளமான தளவாடங்களும் இங்கிலாந்திலும், நடுக்கடலிலும் திரண்டிருக்கின்றன. தம் கோட்டை மதில்கள் சீக்கிரத்தில் நொறுங்கப் போகின்றன வென்பது பற்றி, ஜெர்மானியர்களுக்குக் கூட நன்றாகத் தெரியும். தம் கையிருப்புக்க ளெல்லாம் நாசமாவதை நாள்தோறும் அவர்கள் பார்க்கிறார்கள். மேற்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் என்ன செய்தி வருமோ வென்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் நாஜிகளுக்கு, அவர்களுக்கும் தெரியாமலேயே உள்ளத்தில் ஒரு நோய் பற்றுகிறது. அப்போதுங் கூட அவர்கள் மகா கடுமையான போராட்டத்தில் சுழன்று கொண்டிருக்கின்றனர்.

ஜப்பானும் இந்தப் புதுவருஷத்தில் என்ன குறைபாடுகள் நேருமோ வென்று ஏங்கித் தான் இருக்கிறது. தம் கஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகப்படுவதாகவும், இப்போது தம்மில் மிகச் சிறந்தவர் செய்யும் வேலையைப் போல் ஐந்து பங்கு வேலை ஒவ்வொருவரும் செய்ய வேண்டுமென்றும், ஜப்பானியத் தலைவர்கள் கூறுகிறார்கள். இது ஜப்பானிய பைத்தியக்காரத்தனம். இதற்குக் காரணம் நேசநாட்டுப் படைகள் மெதுவாகவும் ஆனால் பலமாகவும் அவர்களுடைய நாட்டை தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் வளைத்துகொண்டு வருவது தான். சமுத்திரத்தில் ஆயிரக் கணக்கான மைல் தூரத்திற்கு குடியேற்ற நாடுகளிலிருந்தும் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்தும் கப்பற் படைகள் வந்து திரண்டு நிற்கின்றன. இவற்றோடு போராட ஜப்பானியக் கப்பல்களால் இயல வில்லை. ஆகவே, நம் கப்பல்கள், போர்னியா, பிலிப்பைன்ஸ், மலேயா, சைனா ஆகிய நாடுகளையும் ஜப்பானையுங்கூட நெருங்கிக் கொண்டிருக்கின்றன. ஜப்பானியர்கள் தான் இப்போது ஆட்டங் காட்டி பதுங்கிப் பின் வாங்கி, ஒவ்வொரு தீவாகவும் ஒவ்வொரு விமானக் கூடமாகவும் விட்டுக் கொடுக்கிறார்கள். அன்றியும் க்ரூய்சர் கப்பல், நாசக்காரிக் கப்பல், போக்கு வரவு கப்பல் ஆகியவற்றையும் விட்டு விட்டு ஓடுகிறார்கள். நமது 10 விமானங்களைச் சுட்டால், 100 விமானங்களை இழக்கிறார்கள். 1944-ம் வருஷம் ஆரம்பமான இன்று உள்ள நிலைமைக்கும், இதற்கு முந்திய வருஷங்களின் ஆரம்ப நாட்களி லிருந்த நிலைமைக்கும் வேற்றுமை யுண்டு. இந்த வருஷம் என்ன நேருமோ என்று நாம் கவலை கொள்ள வில்லை. இந்த வருஷத்தை வரவேற்க நாம் முந்துகிறோம். ஏனென்றால், மிகச் சிறந்த நலன்கள் ஏற்படப் போகின்றன வென்று நமக்குத் தெரியும்.

வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களுக்கு வாழ்த்து

(மறைவாய்ப் புதைத்து வைத்த என்ற மெட்டு)

பல்லவி

மிகுந்த ஆற்றல் நிறைந்த வின்ஸ்டன் சர்ச்சில் என்னும்
வீரா நீடூழி வாழ்கவே—வெற்றி பெறவே (மி)

அனுபல்லவி

தகுந்த சிங்கம்போல்பவர் நாஜிச் சம்மட்டியென்று
சாற்றவே நடுங்கிடும் ஜர்மனி ஜப்பான் இன்று (மி)

சரணம்

நேசப்படைகளுடன் நேர்மையான தந்திரி
நீக்கமின்றிவீரருக் கூக்கந்தரும் யந்திரி
பேசும்புகழ்க்கெம்பீரன் பின்வாங்கான் சுதந்திரி
பிரிட்டிஷ்ராஜ்ஜிய யுத்தப் பிரதம மந்திரி(மதி) (மி)
(தந்திரி=சேனைத்தலைவர்)

ஒன்பது விதிகள்

செலவைச் சுருக்கு.

தேவைகளைக் குறைத்துக் கொள்.

பணத்தை வீணாக்காமல் சேமித்து வை.

பொருள்களைச் சேர்த்துப் பயனின்றிப் புதைத்து வைக்காதே.

கடன் படாதே.

உணவுப் பொருள்களை மிகுதியாகப் பயிர் செய்.

போரின் வெற்றி விரைவில் கிடைப்பதற்கான வழியைத் தேடுவதில் ஈடுபடு.

உணவுப் பொருள்களைக் குடும்பச் செலவிற்கு வேண்டியதற்கு மேல சேர்த்து வைக்காதே.

பேருதியம் அடைய வேண்டி, மிக உயர்ந்த விலைக்கு விற்கப் பேராசைப் படாதே.

யுத்தத்தின் ஐந்தாவது புது வருஷ விழா

மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்கள் வாழ்த்து

எமது வேண்டுகோளுக் கிணங்கி "மெட்ராஸ் வார் ரிவ்யூ" பத்திரிகையின் புது வருஷ விசேஷ மலருக்கு கீழ்க்கண்ட வாழ்த்துச் செய்தியை, மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்கள் அன்பு கூர்ந்து அனுப்பி யுள்ளார்கள் :—

இந்த 1944-ம் வருஷத்திய ஜனவரி மாதம் 1-ம் தேதி இந்த உலக யுத்தத்தில் 5-வது புது வருஷ விழாவாகும்.

1943-ம் வருஷம் நடைபெற்றவை பற்றி நாம் சிந்திக்கும் போது, நாம் மகிழ்ச்சியடையக் காரணங்க ளுண்டு.

அந்த வருஷத்தில், நேச நாடுகளின் எதிரிகளுக்குக் கடுமை யான தோல்வி ஏற்பட்டு, தம்மை தற்காத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது.

மத்தியதரைக் கடற்பகுதியில் ஆப்பிரிக்காக் கண்டத்தி லிருந்து எதிரிகள் அடியோடு விரட்டப்பட்டனர். நம்மிடம் கைதி களா யிருப்பவர்கள் தவிர, வேறு ஒரு ஜெர்மன் படையினனுவது, இத்தாலியப் படையினனுவது இப்போது ஆப்பிரிக்காவில் கிடை யாது. முஸோலினி வீழ்ச்சி யடைந்தார். அக்கிரமப் போராட இத்தாலியர்களுக்கு மனமே கிடையாது. பாசிச முறைகளிலும் அவர்களுக்கு அனுதாபமில்லை. இதை அவர்கள் வெகு தெளி வாக வெளிப்படுத்தி விட்டார்கள். இது நெடுநாட்களாகவே வெளிப்பட்டுக் கொண்டு வந்தது. எவ்விதமான காரணமுமின்றித் தான், பாசிஸ்டுகள் வேண்டு மென்றே போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இத்தாலியின் மூன்றி லொரு பகுதி நேசநாட்டுப் படைகள் வசமிருக்கின்றது. மற்றப் பகுதியிலுள்ள ஜெர்மானியர்களை மெதுவாக, ஆனால் நிச்சய மாக விரட்டிக் கொண்டு வருகின்றோம்.

நமது நேச நாடான ரஷ்யாவின் திறமை, வீரம், மன உறுதி ஆகியவற்றிற்கு ஒப்பு உயர் வில்லை. ஜெர்மானியர் வசமிருந்து ஜெர்மனி நாடளவுள்ள பூமியை இவர்கள் மீண்டும் பிடித்து விட்டார்கள். இப்போது ஜெர்மனியைச் சாகடிக்கத்தக்கபடி ஊடுருவிப் பாய்ந்து போராடுகிறார்கள். பால்கன் நாடுகள் ஜெர்மனிக்கு வேண்டா வெறுப்போடு துணையாயிருக்கின்றன. அவற்றின் மீதும் ஊடுருவிப் பாய்ந்து தாக்குகிறார்கள்.

ஜப்பானின் உச்ச காலம் முந்தியே கடந்து விட்டது. இப்போது தற்காப்புப் போராட்டத்தை கடுமையாக நடத்திக் கொண்டிருக்கிறது. அதன் போக்கு வரவுப் பாதைகள் மகா பலவீன மான வை. ஆகவே, அது மேலும் மேலும் கடுமையாகப் போராட வேண்டி யிருக்கிறது. அதன் வெளிப் பாதுகாப்புக்கள் சில இடங்களில் துளைக்கப்பட்டன. உட் பாதுகாப்புக்கான அரண்களும் விரைவில் ஆபத்திற்குள்ளாகும் எனத் தக்க அறிகுறிகள் தோன்றுகின்றன.

1944-ம் வருஷம் என்னென்ன ஏற்படும் என்று யாரும் சொல்ல முடியாது. இதுபற்றி ஜோஷ் யம் கூற முற்படுவதும் முட்டாள் தனமாகும். இந்த வருஷத்தில் ஐரோப்பிய யுத்தம் முடிவடையு மென்றும், கீழ் நாடுகளின் யுத்தம் வெற்றி தரத்தக்க நிலைமையை யடையுமென்றும் நம்புகிறோம்.

ஒரு வருஷத்திற்கு முன்னதாக, எதிரிகள் பிடித்துவிடக் கூடும் என்ற அச்சத்திற்குள்ளாகி யிருந்த ஊர்களான கெய்ரோவிலும் டெஹரானிலும் சமீபத்தில் நேசநாட்டுத் தலைவர்கள் சந்தித்து, நாஜிப் படைகளையும் ஜப்பானியப் படைகளையும் அடியோடு அழிப்பதற்கு, முடிவான திட்டங்களை வகுத்திருக்கிறார்கள்.

சந்தர்ப்பம் நேரும் போது, நமது முழு பலத்தையுங் கொண்டு, நாம் தாக்க வேண்டு மென்று நமக்குத் தெரியும். நமது முயற்சியில் கொஞ்சமும் தளர்ச்சி கூடாது. "உண்மையிலும், உணர்ச் சியிலும், நோக்கத்திலும் தோழர்களே" என்று நமது தலைவர்கள் கூறியது போல, யுத்தத்தில் வென்று சமாதானத்தை நிலை நாட்டுகிறவரை நாம் தொடர்ந்து போராட வேண்டும். அப்போது நாஜி இராணுவத்துவமும் ஜப்பானியக் கொடுமைகளும் அடியோடு அழியும். அன்றியும் யுத்தம் என்ற பதமே உலக வழக்கத்தினின்று அழிந்தே போகும்

ஆர்தர் ஹோப்,

சென்னை கவர்னர்.

கொலையாளியும் உளவாளியும்.

(மிஸ்டர் எஸ். குருசாமி.)

கொலை வழக்கு

"ராமனே அப்பெண்ணைக் கொலை செய்தான். நான் கொலை செய்ய வில்லை. வெளியே நின்று பார்த்துக் கொண்டிருந்தேன், 'யாராவது வருகிறார்களா?' என்று கேட்டான். 'ஒருவரும் வரவில்லை,' யென்றேன். 'உன் இடுப்பில் இருக்கும் அரிவாளைக் கொடு' என்றான். எடுத்துக் கொடுத்தேன். வேலையை முடித்தான். 'கோணிப்பை கொண்டு வா' என்றான். கொண்டுபோய் கொடுத்தேன். கட்டி முடிந்ததும் வண்டியில் ஏற்றச் சொன்னான். இருவரும் ஏற்றினோம். அவ்வளவு தான். பிறகு நடந்தது எனக் கொன்றும் தெரியாது. நீதிபதி யவர்களே! நான் நிரபராதி. அப்பெண்ணை நான் கொலை செய்ய வில்லை. என்னைத் தண்டிக்க வேண்டாம்," என்று சுப்பன் மன்றாடுகிறான். நீதிபதி என்ன தீர்ப்பளிக்கிறார்? ராமன் கொலையாளியே என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. ஆனால் சுப்பன் உதவி யில்லா திருந்தால் ராமன் அப்பெண்ணைக் கொல்ல முடியாமலே போயிருந்தாலும் போயிருக்கலாம். முடிவு என்ன? கொலை செய்தவனை விட, அதற்கு உளவாயும் உதவியாயுமிருந்தவனுக்கே அதிகக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டியதே நியாயம். ஆனாலும் இருவருக்கும் ஒரே தண்டனை. மரண தண்டனையோ ஆயுட் சிறை வாசமோ விதிக்கப் படுகிறது. இத்தீர்ப்பை உலக நீதி மன்றம் ஒப்புக் கொள்கிறது.

* * * *

வைக்கோற் போருக்குத் தீவைத்த வழக்கு

பெரியவர்கள் விஷயத்தில் மட்டு மல்ல இந்த நீதி முறை; சிறுவர்கள் விஷயத்தில் கூடத் தான். பெரிய விஷயங்களில் மட்டுமல்ல; சிறு விஷயங்களில் கூடத்தான். ரமணி 5 வயதுப் பையன். ராணி 10 வயதுப் பெண். வீட்டிலிருந்தவர்கள் வெளியே போயிருந்த சமயம். கொல்லையில் பெரிய வைக்கோல் போர். அதைக் கொளுத்திவிட்டால் எவ்வளவு உயரத்தில் தீ எழும்பும் என்பதைக் காண வேண்டு மென்ற ஆசை இருவருக்கும் ஏக காலத்தில் ஏற்பட்டு விட்டது. "தீப் பெட்டி மட்டும் கிடைத்தால் இப்போதே கொளுத்தி விடுவேன்," என்றான் ரமணி. "ஐயையோ நான் மாட்டேன், அம்மா அடிக்கும்," என்றாள் ராணி. "எனக்குப் பயமில்லை; கிருஷ்ணன் மாதிரி நான் எதற்கும் அஞ்ச மாட்டேன்," என்றான் ரமணி. தீப் பெட்டி உயரமான மாடத்தி லிருந்தது. எடுக்க முயன்றான். எட்டவில்லை. கூடத்திலிருந்த படம் காட்சி யளித்தது ரமணிக்கு. பலராமன் குனிந்து நிற்க கிருஷ்ணன் முதுகி லேறி வெண்ணெய் திருடுகிறார். "அக்கா, சற்றுக் குனிந்து கொள்," என்றான் ரமணி. குனிந்து நின்றாள் ராணி. தீப்பெட்டி ரமணிக்கு கிடைத்தது. குதித்தான். குதூகல மடைந்தான். கொல்லைப் பக்கம் ஓடினான். குச்சியைக் கிழித்தான். வைக்கோலில் எறிந்தான். இச்சம்பவத்தில் ராணி குற்றவாளியா? இல்லையா? பாவம்! சிறு பெண். வைக்கோல் தீப்பற்றியதற்கு இவளென்ன செய்வாள்?" என்று எண்ணி ராணியை முழு நிரபராதியாக்க மனம் வருகிறதா? இல்லை. ஏன்?

* * * *

இன்று நடை பெறுவது உலகப் போர். நம் எதிரிகள் மூவர். ஒருவர் இடுப்பு முறிந்தது. மற்றவரின் முதுகெலும்பு நொறுக்கப் படுகிறது. மூன்றாவது எதிரியின் கைவிரல்கள் ஒவ்வொன்றாய்ச் சிதைக்கப் படுகின்றன. இரண்டாவது எதிரியும் மூன்றாவது எதிரியும் முறி யடிக்கப் பட்டாலொழிய இந்தியாவுக்குச் சமாதான மில்லை; உரிமை வாழ் வில்லை; சுயேச்சை யில்லை. இதை யாவரும் ஒப்புக் கொண்டு விட்டனர். வரப் போகும் மகத்தான போருக்கு, இந்தியா ஒரு பெரிய படைக் களம். இந்நிலையில் நமது மக்களிற் சிலர் என்ன செய்கின்றனர்?

* * * *

அரிசிச் சேமிப்பவர் குற்றவாளியா?

"நான் 120 மூட்டை அரிசி வைத்திருந்தது உண்மையே. அரிசிப் பங்கீடு வருவதற்கு முந்தியே சிறிது சிறிதாய் வாங்கிச் சேர்த்தேன். பங்கீடு முறை வந்த பிறகும் சில வழிகள் மூலம் தினம் ஒரு மூட்டையாக வாங்கினேன். என் ஹோட்டலுக்குப் போதுமான அரிசி கொடுக்கப்படுவது உண்மையே. ஆனாலும் ஆபத்துக் காலத்தில் உதவுமே என்பதற்காகவே இவ்வளவு மூட்டைகள் கை யிருப்பில் வைத்துக் கொண்டேன். நான் போர் முயற்சிக்கு எதிரி யல்ல. ஜப்பானைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் ஊக்க முடையவன். நான் நிரபராதி. நீதிபதி யவர்கள் மன்னிக்கவேண்டும்," என்று ஸ்ரீமான் தப்பய்யர் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார்.

"ஸ்ரீமான் தப்பய்யரே! 'தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்,' என்பதைக் குறிக்கோளாய் வைத்து, நேச நாடுகள் போரிடுகின்றன. இக்குறிக் கோளைக் கொள்கையாக வைத்து இந்திய சர்க்கார் நடத்தப் படுகிறது. சென்னை மாகாணத்தில் மற்றொரு 'வங்காளம்' ஏற்பட விடமாட்டோம். பட்டினி என்னும் புலி, மனித இறைச்சி கேட்கிறது. அதன் கூண்டின் மேல் மறைந்து கொண்டு ஒவ்வொரு கம்பியாகக் கழற்றி விடுகிறார்கள் சிலர். அதில் நீர் ஒருவர். உமக்கு 3 மாதக் கடுங்காவலும் 500 ரூபா அபராதமும் குறைந்த பட்ச தண்டனையாக விதிக்கிறேன்," என்று கூறி நீதிபதி தீர்ப்பளிக்கிறார். உலக நீதி மன்றம் ஒப்புக் கொள்கிறது இத்தீர்ப்பை.

* * * *

லஞ்சமும் கொள்ளை லாபமும்

மளிகைக் கடை பகற் கொள்ளைப் பிள்ளையும், ஜவுளிக் கடை ஜாப் சேட்டும், ஸ்டேஷனரிக் கடை சுரண்டல் கானும், எண்ணெய்க் கடை கலப்புச் செட்டியும், ஓராண்டிற்குள் அரை லட்சம் ஒரு லட்சம் ரூபாய் சம்பாதித்து திடீரெனப் பணக்காரர்கள் ஆன விதம் எப்படி? ஒரு ரூபாய்க்கு வாங்கின சரக்கை $8\frac{3}{4}$ ரூபாய்க்கு விற்றும், ஒரு ரூபாய்க்கு $4\frac{1}{4}$ படி விற்ற சரக்கை $\frac{1}{2}$ படியாக விற்றும், பொது மக்களிட மிருந்து பணத்தைச் சுரண்டியதால். இவர்களாவது முதல் போட்டு வியாபாரம் செய்து பகற் கொள்ளை யடித்துப் பணஞ் சேர்த்தவர்கள். முதலே போட்டு வியாபாரம் செய்யாதவர்கள் ஒரு சிலர் உண்டு. இவர்கள் சர்க்கார் உத்தியோகங்களிலும், ரயில்வே நிலையங்களிலும் இதர பொது ஸ்தாபனங்களிலும் உள்ளவர்களிற் சிலர். அவர்களாகவே பணம் கொடுத்தார்கள்; நான் வாங்கினேன். எவர் வீட்டுக்காவது போய்ப் பணங் கேட்டேனா? நான் இருக்குமிடந் தேடிக் கொண்டு வந்தார்கள்; வாங்கிக் கொண்டேன். நான் செய்ததில் தவறு ஒன்றுமில்லை," யென்று இத்திருக் கூட்டத்தினர் கூறுகின்றனர்; ஆனால் என்ன தீர்ப்பு அளிக்கப்படுகிறது? குழந்தையின் கழுத்துச் சங்கிலியைக் கத்தரித்தவனுக்கு இடப்படும் தண்டனையே, இவர்களுக்கும். "இம் மகானுபாவர்கள் அகப்பட்டுக் கொள்வதில்லையே!" என்று சிலர் கேட்கலாம். அதற்கு நாமல்லவா பொறுப்பாளிகள்?

மிஸ்டர் எஸ். குருசாமி.

சில பிரகிருதிகளின் சரடுகள்

மற்றொரு கூட்டத்தினர் இருக்கின்றனர். "சிங்கப்பூர் போரில் வேவல் படுகாயப் பட்டு விட்டார். நம்மூர் ஜனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். இன்றைக்கு இறந்து போய் விட்டார். செண்ட்ரல் ஸ்டேஷன் பக்கம் ஒரே கூட்டம்; ட்ராம், பஸ் ஒன்றுமே போக முடிய வில்லை. சர்க்கார் இவ்விஷயத்தை ரொம்ப ரகசியமாய் வைத்திருக்கிறார்கள். எங்கள் ஆபீசில் இந்தத் தகவல் கிடைத்தது," என்று ஸ்ரீமான் புளுகய்யர் கயிறு திரித்து விடுவார். அவ்வளவு தான். காட்டுத் தீ பரவுவது மாதிரி இவ் வதந்தி நெடுகப் பரவி விடும். 10 நாட்களில் சேனாதிபதி வேவல் டில்லிக்கு வந்து சேர்ந்தார்," என்ற செய்தி வந்து விடும். ஸ்ரீமான் புளுகய்யர் கோஷ்டிகள் 'இஞ்சி தின்ற குரங்கு' மாதிரிக்காட்சி யளிப்பார்கள்.

"ஓய் உப்பு சாஸ்திரி, விஷயம் தெரியுமோன்னோ? மெட்ராஸ்லே அக்டோபர் மாதம் 11-ம் தேதி யன்று ஜப்பான்காரன் குண்டு போட்டானே; அப்போ பொருள் சேதம் எதுவுமே யில்லேண்ணு ஸர்க்கார்லே அறிக்கை விட்டாளே! அதெல்லாம் சுத்தப் பொய்ங்காணும்! எனக்கு நன்னாத் தெரியும். செண்ட்ரல் ஸ்டேஷன் தரை மட்டமாப் போயிடுத்தாம். எக்மோர் ஸ்டேஷன்லே ஒரே ஒரு இரும்புத் தூண் தவிர பாக்கி யெல்லாம் சாம்பலாப் போயிடுத்தாம். ஹைகோர்ட் இருந்த எடமே தெரியலியாம்; அந்த எடத்திலே ஒரே பள்ளமா யிருக்காம்," என்று இந்த மாதிரி கும்பகோணம் குறும்பய்யங்கார் தஞ்சாவூர் வரையில் தம்பட்ட மடித்துக் கூறிக் கொண்டிருப்பார். "நிஜமாகவா? என்று கேட்பார் உப்பு சாஸ்திரி. "ஆமாம் ஸ்வாமி; ஆமாம். மதராஸிலே யிருந்து வந்தவாளே என்னிடம் சொன்னா," என்று பதில் கூறுவார் குறும்பய்யங்கார். இச் செய்தியை உப்பு சாஸ்திரி முப்பது பேருக்குக் கூறுவார்.

"நவம்பர் மாதம் 12-ம் தேதி ஜப்பான்காரன் நம்ப ஊர்லே கட்டாயம் குண்டு போடப் போறான். அன்னிக்கிப் பௌர்ணமியோ இல்லியோ? என் அத்திம்பேர் ரேடியோவிலே கேட்டதாச் சொன்னார். பாருமே, நடக்கிறதா இல்லையான்னு!" என்று கப்ஸா ராவ் கடைத் தெருவிலே உதறுவார், தம் மூட்டையை. நவம்பர் மாதம் 12-ம் தேதி போய் விடும். இவருடைய புளுகுக் குண்டு தான் மிச்சம். ஆனாலும் விடுவாரா? "டிசம்பர் மாதம் 11-ம் தேதி யன்று பௌர்ணமி யோன்னோ! அன்னிக்குக் கட்டாயம் போடப் போறானும், எனக்கு நன்னாத் தெரியும்; ஆபீசிலே பேசிண்டா, நம்பாட்டாப் போங்கோ!" என்று போடுவார் இரண்டாவது குண்டு. டிசம்பர் மாதம் 11-ம் தேதியும் போய் விடும். "விஷயம் தெரியுமோ ஸார்? கிருஸ்ட்மஸ் அன்னிக்கு ஜப்பான்காரன் கட்டாயமா குண்டு போடப் போறானும்! நானே ரேடியோவில் கேட்டேன். கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருங்கோ!" என்று ட்ராமில் உட்கார்ந்து கொண்டு விடுவார் சரடு. பிறகு கிருஸ்மசும் போய் விடும். இந்த மாதிரிப் பிரகிருதிகள் சில இருக்கின்றன.

* * * *

ராமனின் கொலைக்கு உடந்தையா யிருந்த சுப்பனைக் குற்றவாளி யென்கிறோம். ரமணியின் விஷமத்திற்குத் துணையா யிருந்த ராணியை நாம் மெச்சிக் கொள்வதில்லை. ஏன்? குற்றத்திற்கு உளவாளியா யிருப்பவர் குற்றவாளியை விட மோசமானவர் என்பதனால்.

ஜெர்மனியும் ஜப்பானும் நமது எதிரிகள். இவர்களைத் தோற்கடிப்பதில் முதலாளி நாடு–தொழிலாளி நாடு, ஜனநாயக நாடு–குடியரசு நாடு, சுயேச்சை நாடு–சாம்ராஜ்ய நாடு ஆகிய பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஐக்கியப் பட்டிருக்கின்றன. இந்த நிலையில், தெரிந்தோ தெரியாமலோ, உணவுப் பொருள்களைப் பதுக்கி வைக்கும் தப்பய்யர்களும், கொள்ளை இலாபம் அடிக்கும் பகற் கொள்ளைப் பிள்ளைகளும், ஜாப் சேட்களும், சுரண்டல் கான்களும், கலப்புச் செட்டிகளும், பொய் வதந்தி புளுகய்யர்களும், குறும்பய்யங்கார்களும், கப்ஸா ராவ்களும், நம்மவர்களிற் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அறியாமையினாலோ, குறும்புத் தனத்தினாலோ, பிறர் தூண்டுதலினாலோ, துரோக சிந்தனையினாலோ செய்யும் காரியங்கள் போர் முயற்சிகளைப் பாதிக்கின்றன. எதிரிக்குப் பேருதவிகளா யிருக்கின்றன.

நிரபராதிகளல்ல இவர்கள். எதிரிக்கு உதவி செய்பவர்கள் அல்லது உளவாளிகள். இவர்களைத் திருத்த வேண்டும் பொது மக்கள். திருத்த முடியாதவர்களை அவ்வப்போது சர்க்கார் கையில் ஒப்படைக்க வேண்டும். இதனால் நம் போர் முயற்சி துரிதப்படும், வெற்றி விரைந்து வரும்.

போருக்குப் பின் மக்கள் நிலைமை

(ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்)

உலகத்தில் இன்பமும் துன்பமும் உண்டு. துன்பத்தை நீக்கி இன்பத்தை நுகரவேண்டும் என்பது மக்களுடைய அவா. அந்த நோக்கத்தைக் கொண்டே பண்டைக் காலம் முதல் கொண்டு மக்கள் பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். கல்லாதாரும் கற்றவர்களும், அறியாதாரும் அறிந்தவர்களும், மெலியாரும் வலியாரும் ஆகிய எவ்வெத் திறத்தினரும் உலக வாழ்விலே இதே நோக்கத்தைத் தம்தம் வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இதனை வற்புறுத்தி யன்றோ தாயுமானப் பெருந்தகையாரும்

> ''எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே—அல்லாமல்
> வேறொன்றறியேன் பராபரமே''

என்று அருளிச் செய்துள்ளார்கள்.

இன்பமும் துன்பமும்

மனிதனுக்குக் கண், வாய், மூக்கு, செவி, மெய் என்ற ஐம் பொறிகள் உண்டு. அவைகள் பார்த்தல், தின்னல், முகர்த்தல், கேட்டல், தொடுதல் முதலிய பல செயல்களைச் செய்கின்றன. இச்செயல்களுக்குப் பல பொருள்கள் தேவைகளாக இருக்கின்றன. அவ்வாறு தேவைகளாக இருக்கும் பொருள்கள் கிடைக்கா விட்டாலும், போதுமான அளவையில் கிடைக்கா விட்டாலும் மக்களுக்குத் துன்பம் வருகின்றது. அப்பொருள் சரிவரக் கிடைக்குமாயின் உயிரானது இன்பம் அடைகிறது. இவ்வின்ப துன்பங்களைப் பொறிகளின் வழியாக மனம் அறிகிறது. மனத்தின் தன்மையை இங்கே விவரிக்க வேண்டியதில்லை. துன்பத்தை நீக்கி இன்பத்தைபெற வேண்டியதற்காகப் பொருள்களைச் சம்பாதிக்கும் முயற்சியிலே மக்களுக்குள் அடிக்கடி போட்டி ஏற்படுகிறது. இப்போட்டி, தனி மனிதர்களுக்குள் ஏற்பட்டால், சண்டை என்று பெயர். சிறு தொகுதிகளுக்குள் ஏற்பட்டால் சச்சரவு அல்லது கலகம் என்று பெயர். பெரிய தொகுதி அல்லது நாடுகளுக்குள் ஏற்பட்டால் போர் அல்லது யுத்தம் என்று பெயர். பெயர் மாறுபட்டாலும் காரணம் ஒன்றே தான். உலகில் பொருட்களைக் கவரும் வழக்கில் பல பெரும் போர்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது ஏற்பட்டிருக்கும் பெரும் போர், அவைகளுள் ஒன்று. இவ்விதம் ஏற்படும் போர்களினால், தாம் கொண்ட நோக்கங்கள் நிறைவேறுவது இல்லை. துன்பம் தொலைத்து இன்பம் பெறவேண்டிப் போர் இடுகிறவர்கள், துன்பத்தைத் தமக்கும் பிறருக்கும் விளைவிக்கிறார்களே ஒழிய, இன்பத்தை அடைவதில்லை. இக்காரிய முடிவைச் சென்ற பெரும் போரிலும் இப்போரிலும் கண்டு வருகிறோம். இந்தப் போரினாலே வரும் துன்பங்கள் எவை, அவைகளை எப்படி நீக்குதல் முடியும், அவ்வாறு துன்பத்தை நீக்கி இன்பம் மக்கள் அடையுமாறு செய்வதற்கு நாம் என்னென்ன வகையில் பாடுபட வேண்டும் என்பதே, இக்கட்டுரையின் கருத்து ஆகும்.

இருவகைத் துன்பங்கள்

போரினால் ஏற்படக்கூடிய துன்பம் இருவகைப்படும். போர் நடக்கையிலே ஏற்படும் துன்பம் ஒன்று; போர் முடிந்த பிறகு ஏற்படக் கூடிய துன்பம் மற்றொன்று. போர் நடக்கும் போது ஏற்பட்டு வரும் துன்பத்தை நாம் நேரில் கண்டு சகித்துக் கொண்டிருக்கிறோம். அத் துன்பத்தினுடைய கூர்மையைச் சிறிதளவு மழுங்கச் செய்தும் வருகிறோம். அத்துன்பங்கள் மீண்டும் தொடராமல் இருக்கும் பொருட்டு, நாம் பாடுபட வேண்டும். போர் முடிந்த பிறகு, பலவிதத் துன்பங்கள் ஏற்படக் கூடும். முந்திய போர்களின் அனுபவங்களாலே அவைகளை அறியலாகும். அவைகள் வராமல் இருக்கச் செய்வது, அறிஞர்களுடைய கடமை. அதனை உத்தேசித்தே, தக்க அறிஞர்கள், இப்போதிருந்தே ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள்.

பண்டைக் காலங்களிலே இரண்டு நாடுகளுக்குள் போர் ஏற்படுமாயின், அதனால் விளையும் தீங்கு அந்நாடுகளுக்கே சேரும். ஏனைய நாடுகளுக்கு அத்தீங்குகள் எட்டுவது இல்லை. இக்காலத்தில் உலகில் போக்கு வரத்து நெருங்கியும் அதிகரித்தும் இருப்பதால் எவ்விதப் போரும் எல்லா நாடுகளையும் பீடிக்கிறது. அந்தக் காரணத்தினால் தான், இந்திய நாட்டில் போர் நேரில் வந்திரா விட்டாலும் போருக்குரிய துன்பங்கள் முற்றிலும் இங்கே வந்திருக்கின்றன. இப்போது நாம் நேரில் அனுபவிக்கும் துன்பங்களாவன. அரிசி முதலிய உணவுப் பொருள் கிடையாமை, உடை முதலிய அவசியப் பொருள்கள் அரிதாதல், நாகரிக வாழ்விற்கு வேண்டிய பிற பொருள்கள் இல்லாமை, என்பனவாம். உணவுப் பொருள், உடை முதலிய அவசியப் பொருள்கள், நகை, துணிகள் முதலியன எல்லாருக்கும் வேண்டியவை. இவைகள் அரிதாவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளை அறிந்து நீக்கிக் கொண்டு வருகிறோம். அத்தொழிலில் அரசியலா செய்து வரும் செயலில் எல்லாரும் ஈடுபடுவது அவசியம். நாகரிக வாழ்விற்கு வேண்டிய பொருள் வசதி ஏழைகட்கு அவசியமில்லை. தனிகர்களுக்கும் படித்தவர்களுக்குமே வேண்டும். அவைகளைப் பெறவேண்டிய முறைகள் நாகரிகத்திற்கு அவசியமாகும்.

துன்பங்களுக்குக் காரணங்கள் எவை ?

உணவு முதலிய அவசியப் பொருள்கள் அரிதாக ஏற்படுவதில் மூன்று விதத் துன்பங்கள் நேருகின்றன. பொருள்கள் அரிதாதல், பொருள்களின் விலை ஏறுதல், புது பொருள்கள் உண்டாகாமை. இம் மூன்று துன்பங்களின் காரணங்களையும் ஆராய்ந்து அவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். சாதாரண காலங்களை விட, போர் நடக்கையில், போர் முதலிய வசதிகளுக்கு, உணவுப் பொருள்களை ஒதுக்கத் தான் வேண்டும். நாட்டினுடைய பாது காப்புக்காக அவ்விதத் தியாகத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். அதனாலேயே உணவுப் பொருள்கள் அரிதாகி விடாது. காலத்தை அனுசரித்து, இரக்கமில்லாத வியாபாரிகள் உணவுப் பொருள்களை மறைத்து வைப்பதுண்டு. அது நாட்டிற்கு இயற்றும் பெருந் தீங்காகும். அதனைத் தடுப்பதற்காக கண்டிப்பான விதிகள் ஏற்படுத்துவ துண்டு. அவ்விதிகளாலே மறைத்து வைத்திருக்கும் பொருள்கள் நாட்டிற்குப் பயன்படும். மேலும், சில பகற் கொள்ளைக்காரர்கள் உணவுப் பொருள்களை மிக உயர்த்தி விற்பதுண்டு; அக்கொடுமை நீங்குவதற்காக, விலைகளை நிர்ணயப் படுத்தி அதிகமான விலைக்கு விற்போர்க்குத் தண்டனை ஏற்படுத்தப்படு ; குறித்த விலைகளை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக, உத்தரவு பெற்ற கடைகளே உணவுப் பொருள்களை விற்கவேண்டும் என்று நிச்சயிக்கப்படும்; இவை முதலான

ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

விதிகளாலே விலை யேற்றத்தைத் தடுத்துவிடக் கூடும். மேலும் நாட்டிற்குப் புதுப் பொருள்கள் அதிகரிக்கப் படல் வேண்டும். நமது நாட்டிலோ, ஏராளமான தரிசு நிலங்கள் உண்டு. அவைகளில் சாகுபடி செய்ய வேண்டும். மேலும் சாகுபடி ஆகும் நிலங்களிலும் அதிக விளைவு உண்டாகும்படி செய்யவேண்டும். இந்த முறை எல்லா நாடுகளிலும் செய்யப் படுகிறது. நமது நாட்டில் விவசாயக் கல்லூரி இருக்கிறது. அங்கே புது விஞ்ஞான முறைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவைகளை குடியானவர்கள் அனுசரிப்பதில்லை. அவ்வாறு அனுசரிக்கும் பட்சத்தில் அதிக விளைவு கிடைக்கும். போரினால் உண்டாகும் குறைவுக்கு மாறாக, அதிக விளைவு ஏற்படுத்தினால் நாட்டில் உணவுப் பொருள் குறைவே ஏற்படாது. இதில் நாட்டு மக்களின் ஒத்துழைப்பே அவசியம் வேண்டி யிருக்கிறது. இதைப் போலவே, துணி முதலிய பொருள்களிலும் ஏற்பட வேண்டும். நாம் உடுத்துக் கொள்ள வேண்டிய துணி முதலியவைகளுக்காக நாம் படும் துன்பத்திற்கு அளவே இல்லை. நமது நாட்டிலேயே பருத்தி, யந்திரம், வேலையாள் இவைகள் இருக்கவும், ஏன் துணிக்குப் பஞ்சம் வந்தது ? அது தொழிற்சாலை இயக்கம் சரியாக ஏற்படாததினால் தான் என அறிக. மேலும் வாய், உடல் இந்த இரண்டே யன்றி நமக்கு மூக்கு, நாக்கு, செவி, கண் இவைகள் உண்டு. இவைகளால் நாம் நுகரும் பொருள்களும், நமக்குத் தேவை இல்லையா ? மழைக்கும் வெயிலுக்கும் பிடிக்க ஒரு சிறு குடை வேண்டும் என்றால் என்ன பாடுபடுகிறோம் ? மூன்று ரூபாய்க்கு வாங்கின குடையை 18 ரூ. கொடுத்து வாங்க வேண்டும், இது யாருடைய தப்பு ? 1 ரூ. விற்ற செருப்பு 3, 4 ரூ. கொடுக்க வேண்டு மென்றால் அது யாருடைய பிசகு ? மண்வெட்டி வேண்டுமென்றால் 1 ரூபாய்க்கு மாறாக 3 ரூ. கொடுத்தாலும் கிடைப்பதில்லை. இதற்கு என்ன காரணம் ? ஆகவே அவசியமான சிறு பொருள்களுக்கும் அன்னிய நாடுகளையே எதிர் பார்த்திருந்தால் அது நம் நாகரிகத்திற்கும் அறிவிற்கும் அடையாளமா ? கணக்கெழுதுவதிலும், நூல் எழுதுவதிலும், தத்துவ விசாரணை செய்வதிலும், உலகத்திலேயே சிறந்தவர்கள் என்ற பெயர் பெற்றிருப்பது மாத்திரம் ஆண்மைத் தனம் அல்ல ; நமக்கு நாமே சுயேச்சையாக வாழக் கூடிய நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது ; அதற்கு ஏற்ற பொருளாதார நிலைமை நாம் பெற்றிருக்கிறோமா ? தற்போது அதாவது போர் நடக்கும் நாளில் நாம் பட்டுக் கொண்டிருக்கும் துன்பங்களை நீக்கும் வகைகளைத் தேடி, அவைகள் இனி எக்காலமும் மீண்டும் இவ்வித இக்கட்டு சம்பவிக்கும்போது வர முடியாமல் வகை தேடிப் பார்க்க வேண்டியது நமது கடமை.

போர்க் காலத்திற்குப் பின் நாட்டின் நிலை

இனி போர் முடிந்த பிறகு வரக்கூடிய துன்பங்களைப் பற்றி ஆராய்வோம். அவ்விதத் துன்பங்கள் வருமா என்று யோசிக்க வேண்டாம். வரும் என்றே வைத்துக் கொண்டு ஆராய்வோம். ஏனெனில் சென்ற போருக்குப் பின்னால், அப்படிப்பட்ட பெருந் துன்பங்களுக்கு நாம் உள்ளானோம். நாம் மாத்திரமோ, உலகம் முழுதும் ஆளாயிற்று. நில விலை குறைந்து போகும், உணவுப் பொருளின் விலை குறைந்து விடும், கடன் கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் பணம் கிடைக்காது, உலகில் வறுமை

தாண்டவமாடும். ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படும் பொருளாதார ஒப்பந்தம் ஈடேறாமல்போய் நம்பிக்கை குறைந்துவிடும்; பணக் கடைகள் வேலையற்று நாசமடையும், இராணுவத்தில் உள்ளோர் வெளிவர, வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். இராணுவத்தினருக்கு உதவி செய்ய வேண்டி முன்னிருந்த உத்தியோகஸ்தர்கள் வெளியேற வேண்டும், வேலை இல்லாத் திண்டாட்டத்திலே மிகுந்த அமைதியின்மை ஏற்படும், போரில் இறந்தவர்களின் உறவினர்க்கு உதவி செய்வதில் மிகுந்த பிரயாசையும் கஷ்டங்களும் ஏற்படும், அபரிமிதமாக ஏற்பட்டுள்ள போர்க்கருவிகள், ஆலைகள் இயந்திரங்கள் வீணாகிப் போக வெகு நஷ்டம் உண்டாகும். போர்ச்செலவுகளை ஈடுசெய்ய நாட்டில் வரிகளை உயர்த்த வேண்டி வரும்; இவ்விதமாக ஏற்படும் தொல்லைகள் பல நாடுகளில் உண்டாகக் கூடும். சென்ற போரில் உண்டானதைக் காட்டிலும் பன்மடங்கு இனிமேல் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இவைகளை எவ்வாறு நீக்குவது? ஒன்று அவைகளை வரவொட்டாமல் தடுப்பது; மற்றொன்று சில்லரைகளை ஆராய்ந்து தகுந்த பரிகாரம் தேடுவது. இதுவே, நமது பெரியோர்களின் கடமை.

முதல் முதலில் விலைவாசிகள் திடீரென்று குறையாமல் இருக்க வகை தேடிக் கொள்ளவேண்டும். மெதுவாகப் பல வருடங்களில் விலை குறைந்தால் துன்பம் அதிகம் ஆகாது. திடீரென்று குறைந்து போனால் நிலங்களின் விலையும் குறைந்துவிடும். குடியானவர்கள், கடன் பெறவோ கடன் கட்டவோ மிகவும் துயரப்படுவார்கள். சென்ற போருக்குப் பின் இவ்விதமான நெருக்கடி ஏற்பட்டுப் பல குடித்தனங்கள் கெட்டுவிட்டன. விலைவாசி குறைந்து விடுவது மக்களுக்கு நல்லது என்று சிலர் எண்ணுவதுண்டு. அப்படியாயின் நாணயத்தின் மதிப்பு குறைந்து விடும்; வர்த்தகத்துக்குக் கேடு விளையும். வர்த்தகத்திற்கு கேடு வாராமல் காப்பாற்றுவது அரசியலாரின் கடமையாகும். விளையும் பொருள்களை மிகுதிப்படுத்தி அவைகளினால் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். கைத்தொழிலுக்கு அவசியமான அனுகரணங்களையும் நாட்டிலேயே தேடிக் கொள்ள வேண்டும். ஒரு நாட்டிற்கு என்னென்ன அவசியமானவை என்று ஏற்படுமோ, அவைகளை யெல்லாம் அந்நாட்டிலேயே செய்ய முயல வேண்டும். நாட்டிற்கு போதுமானவைகளையே விளைவித்தால் போதும். வேண்டாமல் அதிகப்படியான சரக்குகளைத் தயாரிப்பதும் உசிதமல்ல. அவ்வாறு செய்வதினால் சரக்குகள் மலிவு அடையும். அதனால் வீண் சிரமமும் போட்டியும் நஷ்டமும் ஏற்படும். பொருள்களுக்கு, பிறநாடுகளுக்குப் போகாமல் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்தல் நல்லது. முடியாத பொருள்களுக்கே வேறுநாடு செல்ல வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார நிலையும்

போர் முடிந்தவுடன் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படலாம். இராணுவம் கலைக்கப்படும். போர் வீரர்களையன்றி, வேலைக்காரர்கள், கூலியாட்கள், முதலியோர் வேலை நின்று விடும். வைத்தியர்கள், இன்ஜினியர்கள், முதலியோரும் வெளிவர வேண்டிவரும். பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு நாட்டுப் பொது அரசியலில் வேலை கிடைக்கும். சாதாரண வேலைக்காரர்களுக்கு வேலை கிடைக்காது. பொது வேலையில் ஏற்கெனவே உள்ளவர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். மேலும் இராணுவ சம்பந்தமாகக் கணக்குப் பரிசோதகர்கள் ஆயிரக்கணக்காக மிச்சப்பட்டுள்ளார்கள். அவர்கள் எல்லாரும் நிரம்பப் படித்தவர்கள். பெரும்பான்மையானபேர் தென்னாட்டார்கள். இவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்படுவார்கள். இவர்கள் எவ்வாறு அமர்வது. மற்றும், இராணுவ சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் நல்ல சம்பளம் பெற்று வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கை உயர்ந்ததாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் குறைந்த சம்பளத்திற்குச் சென்றால், உடனே மிகவும் அதிருப்தி கொள்ளுவார்கள். நாட்டில் கலக்கம் ஏற்படும். அதனையும் பெரிதாக ஆராய வேண்டி வரும். ஆகவே, இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை எவ்வாறு தடுப்பது?

நாட்டில் ஒதுக்கி வைத்திருக்கும் வேலைகளைச் சில சிறந்த வேலையாட்களுக்குக் கொடுக்கலாம். இது மிகக் குறைவு. சிலரைக் குடித்தனத்திற்கு அனுப்பலாம். அதற்காகக் காலி நிலங்களை அவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால் காலி நிலங்களுக்குத் தக்க நீர் வசதி தராவிட்டால் பலனில்லை. ஆகவே நீர் வசதிகளைத் தேடவேண்டும். நாம் இரயில் மார்க்கமாகச் செல்லும் போது, பல ஜில்லாக்களில் இருபுறமும் நிலங்கள் பல்லாயிர ஏக்கர்கள் சாகுபடி யின்றி தரிசாக இருக்கக் காண்கிறோம். இவைகளைச் சாகுபடிக்குக் கொண்டுவர வேணுமென்றால், நீர் வசதிகள் ஏற்படுத்த வேண்டும். அதற்காக, அரசியலார் வேண்டிய திட்டங்களை ஏற்படுத்தலாம். அத்திட்டங்களுக்கு பல இன்ஜினீயர்கள் வேண்டி வரும். இராணுவத்தில் விடுதலை யடைந்தவர்களுக்கு அவ்வேலை தரலாம். துங்கபத்திரா திட்டத்தினால் பல்லாரி, அனந்தபுரம் ஜில்லாக்களுக்கு நீர் வசதிகள் கிடைக்கலாம். வட பெண்ணைத் திட்டத்தினால் கடலுக்குச் செல்லும் நீரைத் தடுத்து பல நிலங்களைச் சாகுபடி செய்யலாம். நூற்றுக் கணக்கான காட்டாறுகள் சும்மா கிடக்கின்றன. அவைகளைப் பயன் படுத்திக் கொள்ளாத குறை, நமதேயாகும். மேலும் மலைகளில் உள்ள நீர்வீழ்ச்சிகள் எல்லாம் மின்சாரத்திற்காகப் பயன்படுத்தப் படவில்லை. ஆரணியங்களில் உள்ள மரம், செடி, கொடி இவைகளை சரியான உபயோகங்களுக்குக் கொண்டு வரவில்லை. திருவாங்கூர் மலைகளில் மாத்திரம் 200 வகை எண்ணெய்க் காய் எடுக்கத் தக்க மரங்கள் இருக்கின்றனவாம். இலேசான பலகைகளைச் செய்தல் மற்றொரு தொழில். மரப்பால் வகைகளை சரியாக பயன்படுத்தவில்லை. நூற்றுக் கணக்கான மரப்பால்கள் இருக்கின்றன. இரப்பருக்கு ஏன் மலேயா செல்ல வேண்டும்?. இந்தியாவில் தயார்ப்படுத்தக் கூடாதா? நம் நாட்டில் உள்ள 25,000 கோயில்களுக்கும் தீபத்திற்காக ஏன் ஜப்பான் முதலிய எதிரிகளிடம் உதவி கோர வேண்டும். குங்கிலியம், மட்டிப்பால் முதலியவைகளை நம் காடுகளிலிருந்தே ஏன் எடுக்கக் கூடாது?. கற்பூரம் தேட பார்மோஜா தீவிற்கு ஏன் செல்லவேண்டும்? ஜவ்வரிசி வேண்டு மென்றால் மலேயாவிற்கு ஏன் போகவேண்டும்? நாமே விளைவிக்கக் கூடாதா? இவ்வித விளைவு, கைத் தொழில் இவைகளுக்கு, தேர்ந்த ஆட்கள் வேண்டியிருக்கிறது. விடுதலை அடைந்த உத்தியோகஸ்தர்களுக்கு இங்கு வேலை கொடுக்க வேண்டும். அவைகளுக்காக கம்பனிகள், கூட்டுறவுச் சாலைகள் இவைகளை ஏற்படுத்த வேண்டும். நமது நாட்டில் பலவிதமான கனிகள் இருக்கின்றன. அவைகளை நன்றாக ஆராயவில்லை. பூ தத்துவ சம்பந்தமாக ஆராய்ச்சி மிகக் குறைவு. மைசூர் அரசியலார் எத்தனை நிபுணர்களை ஏற்படுத்தி யுள்ளார்களோ அத்தனை நிபுணர்கள் கூட நமது இந்தியா முழுதும் தாதுவர்க்க ஆராய்ச்சிக்கு ஏற்படுத்த வில்லை. காச்சாப் பொன், நிலக்கரி என்ற ஒன்றிரண்டு கனித் தொழில்களே இங்கு உண்டு. மற்ற நூற்றுக் கணக்கான கனித் தொழில்களுக்கும் வேலை இருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் அரசியல் புகுந்து, வேலை இல்லாதவர்களுக்கு வேலை தரவேண்டும். குடித்தனம், நெசவு முதலிய தொழில்களுக்குப் போதுமான ஆள் வசதி இல்லை. அனுபவங்களும் இல்லை. இவைகளுக்காக ஆலைகள் ஏற்படுத்தவேண்டும். கட்டட வகைகளுக்குச் சாமான்கள் அதிகமாக சேகரிப்பதற்கும் வேண்டிய ஆலைகளை ஏற்படுத்தலாம். உணவுகள், பழங்கள், கிழங்குகள், காய்கறிகள் முதலியவைகளைப் பக்குவப்படுத்துவதற்குப் பண்டக சாலைகள் வேண்டும். இவ்விதமான பலவகைக் கைத் தொழில்களில், விடுதலை பெற்றவர்களைச் சேர்க்க வேண்டும். அதற்காக வேலை தரும் இலாகா ஒன்றை நிறுவ வேண்டும்.

உலகில் நிம்மதி எப்போது கிடைக்கும்?

இனி, உணவுப் பொருள்கள், கைத் தொழில், வர்த்தகம் முதலிய பொருளாதார வழிகளைச் செம்மைப் படுத்துதல், வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் புது கைத்தொழில்களையும் வசதிகளையும் ஏற்படுத்துதல், என்ற இந்த இரண்டினாலேயே உலகத்தில் நிம்மதி ஏற்படுமா என்ற ஒரு கேள்வி பிறக்கும். படிப்பு அதிகமாக இருக்கும் இந்நாளில், இந்த இரண்டு உபாயங்களே போதுமானவை அல்ல; மற்றொரு முக்கிய வசதி ஏற்படுத்த வேண்டும். அதாவது உரிமை கடமைகளை அறிதல் என்பதே. அறிவுள்ள ஒவ்வொருவனும், தன் உரிமை கடமைகளை அறிந்து கொள்வான். அவைகளை அவன் அடையாதபடி தடுப்பவரும் உண்டு. அந்நடைகளாலே தான், போர் விளைகிறது. போருக்குப் பிறகு, போர் திரும்பியும் வராதபடி காக்க வேண்டுமாயின், மக்களுடைய உரிமைகளை, கடமைகளைக் காக்கவேண்டும். தனி ஆள், ஆனாலும் சரி, சமூகமானாலும் சரி, நாடு ஆனாலும் சரி, அவர்களுடைய உரிமைகள் புனிதமானவை என்ற கொள்கை உலகத்திலே பரவ வேண்டும். அவ்வுரிமைகளை எவன் தீண்டுகிறானோ, அவன் பாவம் செய்கிறான் என்ற உணர்ச்சி உலகத்தில் மக்களிடையே சமூகத்திடையே நாடுகளின் இடையே இருத்தல் வேண்டும். தனி மனிதனோ, சிறு நாடோ, இவைகளின் உரிமைகளைப் பெரு நாடுகள் பாதுகாக்க வேண்டும். இது தான் தம்பிக்குத் தமையன் செய்யும் உதவி; மகனுக்குத் தந்தை செய்யும் உதவி. இனி, சில உதவிகள் இருக்கின்றன என்ற உணர்ச்சி மக்களிடை இருக்குமாயின், அது தெளிவாக வெளியே தோன்றுமாயின், மானிட அரக்கர்களான ஹிட்லரும், முசலோனியும், டோஜோவும் உலகில் மறைந்துவிடுவார்கள். மறுபடியும் அவர்கள் உயிர் பெற்று எழமாட்டார்கள். அவ்வித உணர்ச்சி உலகில் நன்றாக விளங்க வைக்க வேண்டியதே தற்கால நிபுணர்களின் கடமை ஆகும். சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் என்ற பிரமுகர்கள் இக்கைங்கரியத்தில் ஈடுபடவேண்டும். அவர்களைப் பின்பற்றி சிறு தலைவர்கள் பாடுபடவேண்டும்.

உலகில் மக்கள் எல்லாரும் சம உரிமை கொண்டவர்கள். ஆகவே நிறபேதம் கூடாது. தனி மனிதருக்கு ஏற்பட்ட உரிமைகளை அடக்கவும் கூடாது. இந்த நிலையில் உரிமைகள் பாதுகாக்கப்படுமேயாகில், உயிர்கள் யாவருமே ஒருவித அச்சமின்றி இன்பசாகரமாக வாழலாம்.

உணவு, உடை, இவைகளோடு உரிமையும் தரப்படுமேயாயின் அவைகளே பிற்கால மனிதன் விரும்பவைகள் ஆகும். நம் செந்தமிழ் நாடும் இவைகளையே விரும்புகின்றன. போருக்குப் பிறகு, மக்கள் அடையும் நிலைமையை அறிந்து, இம்மூன்று வகைகளையும் பெறுவதற்கு நம் பெரியார்கள், முயற்சி எடுத்து, தம் கடமைகளைச் செலுத்துவார்களாக!

வீறு கொண்டெழுவோம்!

1 நெஞ்சு கொதிக்குதடா!—ஜெர்மன்
நிட்டூரம் பேசையிலே!
மிஞ்சுது கோபமடா!—ஜப்பான்
மின்வெட்டுப் பாய்ச்சலிலே!
அஞ்சுத லில்லையடா!—நமது
ஆக்கத்தைக் காட்டிடவே!
வெஞ்சமர் செய்திடுவோம்!—வெற்றி
வேல் கொண்டு தாக்கிடுவோம்!

2 குத்திக் குமுறிடுவோம்!—எதிரிக்
கும்பலைச் சாய்த்திடுவோம்!
கத்தி சுழற்றலிலே! எதிரி
கக்கிட ரத்தத்தையே!
யுத்தங்கள் செய்திடுவோம்! எதிரி
ஊளையிட்டோடிடவே!
உத்தமமா வலியால்!—எதிரி
ஊக்கங் குலைத்திடுவோம்!

3 வற்றிடும் ஜெர்மனியை—இங்கே வைத்துப்பொசுக்கிடுவோம்!
சுற்றிடும் ஜப்பானை—இங்கு
சுக்குநூறாக்கிடுவோம்!
உற்றிடும் தீங்கினையே—இங்கு
உதறித் தள்ளிடுவோம்!
வெற்றி முரசடிப்போம்—எங்குமே
வீறுடன் நாமெழுவோம்!

செஞ்சிலுவைச் சங்கத்தார் எதிரிகள் வசம் யுத்தக் கைதிகளா யிருப்பவர்களுக்கு அனுப்பும் பார்சல்கள்.

செஞ்சிலுவையும் செண்ட் ஜான் ஆம்புலென்சும்

கூட்டு யுத்த ஸ்தாபன ஆண்டு விழா

சென்னை மாகாணம் செய்யவேண்டிய தென்ன ?

செஞ்சிலுவைச் சங்கமும் செண்ட் ஜான் ஆம்புலென்சும் சேர்ந்த அகில இந்திய கூட்டு யுத்த ஸ்தாபனத்தின், ஆண்டு விழா சென்ற நவம்பர் மாதம் டில்லியில் நடைபெற்றது. அப்போது ஸ்தாபன வேலைகளைக் குறித்து விவாதித்தனர். குறிப்பாக அடுத்த வருஷத்தில் என்னென்ன செய்யப்பட வேண்டும்? அவற்றின் பொருட்டு எந்தத் தொகையைச் செலவிட வேண்டும்? இந்தத் தொகையைத் திரட்டுவ தெப்படி யென்றெல்லாம் விவாதித்தார்கள். அடுத்த வருஷம் நடைபெற வேண்டிய வேலைகளை இரண்டு பிரவுகளாகப் பிரித்து பரிசீலனை செய்தார்கள். (1) இராணுவ வைத்திய சாலைகளுக்குத் தேவையான உபகருவிகளையும் வசதிப் பொருள்களையும் அனுப்ப வேண்டும். (2) யுத்தக் கைதிகளுக்கு இன்றி யமையாத பொருட்களையும் அனுப்ப வேண்டும். இதுவும் செஞ்சிலுவைச் சங்கத்தாரின் முக்கியமான வேலைகளில் ஒன்று.

அரசாங்கம் வழங்காதவற்றை இச்சங்கம் உதவுகிறது

இந்தியாவின் கூட்டு யுத்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கத்தார் வைத்திய சாலைகளுக்கு சப்ளைகள் செய்வது சம்பந்தமாக மேற் கொண்டுள்ள பொறுப்பு எவ்வளவு அதிகம் என்று பொதுவாக உணர்ந்து கொள்ளப் படுவதில்லை, தேவையான பொருட்களை அரசாங்கத்தார் ஏன் வழங்கக் கூடாது? நாம் ஏன் இவற்றை யெல்லாம் வழங்க வேண்டும்? என்ற கேள்விகள் சில சமயங்களில் கிளம்புவதுண்டு. அரசாங்கத்தார் இவற்றை வழங்குவதா யிருந்தால், பொது ஜனங்கள் கொடுக்கும் வரிப் பணத்தைக் கொண்டு தானே அவற்றை வாங்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பார்களோ என்னவோ? எல்லா வைத்திய சாலைகளுக்கும், வைத்திய 'யூனிட்'களுக்கும், இன்னின்ன பொருள் இன்னின்ன அளவிற்குத் தான் வழங்கப்பட வேண்டு மென்று விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்க 'சப்ளை'கள் அல்லாமல், எந்தெந்தப் பொருட்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனவோ, எந்தெந்தப் பொருட்களை வழங்கினால், நோயாளிகள் விரைவில் குண மடைவார்களோ, அந்த அதிகப்படிப் பொருட்களைத் தான், நாம் 'சப்ளை' செய்கிறோம். அரசாங்கத்தார் அனுமதித்துள்ள அளவிற்கு அதிகமாக ஒரு நோயாளிக்கு வழங்கினால், அந்த நோயாளியின் வசதி அதிகப்படுவதா யிருந்தால், அந்த அதிகப்படிப் பொருட்களையும் வழங்குகிறோம். எந்தக் காரணத்தினாலாவது, அரசாங்கத்தார் வழங்கும் பொருட்கள் வந்து சேரத் தாமதமானால், அவை வந்து சேருகிறவரை, அந்த வைத்திய சாலைக்கு நாம் கடனாகக் கொடுத்துத் திரும்ப வாங்கிக் கொள்ளலாம், நமது பெரும் நோக்கம் என்ன வென்றால், நோயாளிகள் கஷ்டப்பட்டே தீரவேண்டிய காலங்களில், நம்மால் இயன்ற வரை அவர்களுக்கு நிலைமையை இலகுவாக்க வேண்டு மென்பது தான். இப்படிச் செய்ய முடியுமா? முடியும். எப்படி யென்றால், முறைப்படி வழங்கப்படும்

பொருட்களை விட, அதிகமாக ஏதேனும் தேவையாயிருந்தால், அவற்றை நாம் வழங்கலாம். இவை, காயங்களுக்குக் கட்டும் துணிகள், கால் சட்டைகள், வைத்திய சாலைக்குத் தேவையான மற்ற துணிகள் மட்டுமல்ல. ஆரம்பத்தில், நாம் இவற்றை மட்டுந் தான் வழங்கிக் கொண்டு வந்தோம், 'ஸ்டிரலைசர்'கள், மின்சார அடுப்புக்கள், பாண்டங்கள், கத்தி, முள் (உணவருந்துவதற்குப் பயன் படுவது) வெந்நீர்ப் புட்டிகள், ஐஸ் பைகள், 'தெர்மோ ப்ளாஸ்க்'கள், கால் ஊனப் பட்டவர்களின் ஊன்று கோல்கள், நோயாளிகளை உட்கார வைத்துத் தள்ளிக் கொண்டு போகப்படும் நாற்காலிகள், சாய்மான நாற்காலிகள், முதலிய பல பொருட்கள் இப்போது தேவைப்படுகின்றன இவற்றை வழங்கும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்கத்தார் ஏராளமாக வாங்கி, ஆங்காங்கே இவற்றை எடுத்துக் கொண்டு போகிறார்கள். நோயாளிகளுக்குக் காலம் கழிவது தோன்றாதிருக்கும் பொருட்டு ரேடியோ, கிராம போன், புத்தகங்கள், விளையாட்டுக் கருவிகள் முதலிய வகை வசதிப் பொருட்களையும் இருப்பு வைத்திருக்கிறார்கள். இவற்றை அரசாங்கம் வழங்குவதில்லை, ஆனால் இவற்றால், நோயாளிகளுக்கு மன ஆறுதல் உண்டாகும்.

இச்சங்கம் செய்யும் வேலை

இந்த மகா நாட்டிற்குப் பல மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர், இவர்கள், வைத்திய சாலைகளுக்குத் தேவையான பொருட்களை வழங்கும் வேலையிலேயே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தவர்கள். ஆகவே, இப்படிப்பட்ட 'சப்ளை'களைப் பற்றிய எல்லா விவரங்களும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், ஆனால், எவ்வளவு தூரத் தொலைவிற்கு இந்த இந்தியக் கூட்டு யுத்த ஸ்தாபனத்தார் இந்தத் துறையில் வேலை செய்ய வேண்டியிருக்கும் என்பதை, ஒருக்கால் அவர்களில் சிலர் உணராதிருந்திருக்கலாம். எங்கெங்கே இந்தியப் படைகள் போராடுகின்றனவோ, அங்கெல்லாம் செஞ்சிலுவை வைத்திய சாலை 'சப்ளை'களை வழங்க வேண்டியது, நம்முடைய கடமை. மத்திய கிழக்கில் நமக்கு இது சம்பந்தமாக ஒரு 'கமிஷன்' இருக்கிறது. இதன் தளம் கெய்ரோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. மத்தியதரைக் கடற் பகுதியில் போராடிக் கொண்டிருக்கும் இந்தியப் படைகளுக்கு எங்கெங்கே வைத்திய சாலைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் 'சப்ளை'கள் அனுப்பும் பொறுப்பு, இந்தக் கமிஷனைச் சேர்ந்தது. வடாப்பிரிக்காவிலும் இத்தாலியிலும் ஏற்படும் வைத்திய சாலைகளுக்கும் கூடத் தான். தனக்குத் தேவையான பொருட்களை இந்தக் கமிஷன் தானே வாங்குகிறது. ஆனால் அதற்குத் தேவையான தொகையை நாம் கொடுக்கிறோம். பாஸ்ராவில் மற்றொரு கமிஷன் இருக்கிறது. பெர்சியாவிலும் ஈராக்கிலுமுள்ள இந்தியப் படைகளுக்கு இது பயன்படுகிறது. இங்கே மூன்று நிரந்தர உத்தியோகஸ்தர்களும் சில தொண்டர்களும் இருந்தார்கள். ஆனால், இவர்கள் தமக்குத் தேவையான பொருட்களைத் தாமே வாங்க முடியவில்லை. ஏனென்றால், அவர்களுக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் அங்கே கிடைப்பதில்லை. ஆகவே, இப்பொருட்களை இந்தியாவிலிருந்தே தருவிக்க வேண்டியிருக்கிறது. சூடானிலும் எரிட்ரியாவிலும் போராட்டம் நின்று போன பிறகு, கார்ட்டூம் டிப்போவை மூடிவிட்டோம். இலங்கையிலும் ஏடனிலும் விசேஷக் கமிஷன் எதுவும் வேலை செய்யவில்லை, அங்குள்ள இந்திய வைத்திய சாலைகளுக்கு நேர் முகமாகவே பொருட்கள் இப்போது அனுப்பப்படுகின்றன். இந்தியாவிலுள்ள இராணுவ வைத்திய சாலைகளுக்கு—இந்திய வைத்திய சாலைகளுக்கும் பிரிட்டிஷ் வைத்திய சாலைக்கும்—பொருட்கள் அனுப்ப வேண்டிய பொறுப்பு, நம்மைச் சார்ந்தது தான். ஆனால் பிரிட்டிஷ் வைத்திய சாலைகளுக்கு நாம் வழங்கும் பொருட்களின் செலவை ஈடு செய்து கொள்ளும் பொருட்டு, பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தார் மானியத் தொகை கொடுக்கிறார்கள். கிழக்கு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் உள்ள படைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, செஞ்சிலுவை உதவிக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தென் கிழக்குப் போராட்டத்தில் நம் பொறுப்பு

அன்றியும் தென் கிழக்கு ஆசியப் படைத் தலைவர் போராட்டத்தை ஆரம்பிக்கு முன்னதாகவே, அதற்குத் தேவையான வசதிப் பொருட்களையும் போக்கு வரவுக்குத் தேவையான மோட்டார்கார்கள் முதலியவற்றையும் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். போராட்டம் ஆரம்பமாகு முன்னதாகவே, அதற்கான பொருட்களை யெல்லாம் சேகரித்து வைப்பது கஷ்டமானதோர் காரியந்தான். ஏனென்றால், போராட்டம் எங்கே, எப்போது நடைபெறு மென்று நமக்குத் தெரியாது. என்றாலும், போராட்டம் ஆரம்பமானால், அது ஒரு மாபெரும் பொறுப்பாகத் தான் அமையும். ஆகவே, இப்போதே நாம் பொருட்களையும் தொண்டர்களையும் திரட்டலாம். ஆகவே செஞ்சிலுவைப் பண்டக சாலைக்காரர்கள் குறிப்பாகத் தேவை, இவர்கள் வைத்திய சாலைகளிலுள்ள செஞ்சிலுவைப் பொருட் சாலைகளை ஒப்புக் கொள்ளுவார்கள்; யுத்தப் பண்டக சாலைகளை நடத்துவார்கள்; படையினரின் நன்மைக்கான பல தொண்டுகளைச் செய்வார்கள். வைத்திய சாலை உத்தியோகஸ்தர்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தாருக்கும் தொடர்பாக அமையும் உத்தியோகஸ்தர்களாகவும் இவர்கள் இருப்பார்கள். இங்கிலாந்திலுள்ளவர்களுக்குத் தொண்டாற்றும் வேலைக்காக நாம் முதலில் ஆரம்பித்தது, இப்போது இவ்வளவு விரிவாகப் பெருகிவிட்டது. எப்படிப்பட்ட தேவைகள் ஏற்பட்டாலும், அவற்றையெல்லாம் சமாளித்துக் கொள்ள நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

வாரந்தோறும் 20,000 பார்சல்கள்

செஞ்சிலுவைச் சங்கத்தாரின் மற்றொரு முக்கியமான வேலை, யுத்தக் கைதிகளாயுள்ளவர்களுக்குத் தேவையானவற்றை வழங்குவது. இது பற்றியும் அம் மகாநாட்டில் விவாதித்தார்கள். லண்டனிலுள்ள இந்தியா விடுதியில், வாரந் தோறும் 20,000 பார்சல்கள் கட்டப்படுகின்றன. இவற்றை ஐரோப்பாவில் யுத்தக் கைதிகளாயுள்ள இந்தியர்களுக்கு அனுப்புகிறார்கள். இதற்கான எல்லாச் செலவுகளையும் இந்திய கூட்டு யுத்த ஸ்தாபனத்தார் தான் ஏற்றுக் கொள்ளுகின்றனர். இந்த 20,000 பார்சல்களில் 2 சத விகிதம் பார்சல்களுக்கு அதிகப்படாமல் தான் போகிற பாதையில் சேதமாகின்றன. அதாவது, அனுப்பப்படும் பார்சல்கள் எல்லாமே போய்ச் சேருகின்றன வென்று ஒருவாறு சொல்லலாம். அங்குள்ள இந்தியக் கைதிகளுக்கு இந்தப் பார்சல்கள் எவ்வளவு உபயோகமாயிருக்கின்றன வென்றும், அவர்கள் இந்த உதவியை எவ்வளவு அதிகமாகப் பாராட்டுகிறார்களென்றும் அங்கிருந்து வரும் கடிதங்கள் விளக்குகின்றன. இத்தாலியர்கள் சரணடைவார்களென்று முன்னதாகவே எதிர் பார்த்தது தான். இத்தாலியிலுள்ள முகாம்களிலிருந்து ஜெர்மனிக்கு யுத்தக் கைதிகள் மாற்றப்படுவார்களானால், அவர்களுக்கு அனுப்ப வேண்டி, ஜினிவாவில் 65,000 பார்சல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. எதிர் பார்த்தபடியே இத்தாலியிலிருந்த யுத்தக் கைதிகள் ஜெர்மனிக்கு மாற்றப்பட்டனர். இவர்களில் சிலர் தப்பி சுவிட்சர்லாண்ட் வந்து சேர்ந்தனர்; மற்றும் சிலர் இத்தாலியிலுள்ள நேச நாட்டுப் படைகளுடன் வந்து சேர்ந்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலோர் ஜெர்மனியிலுள்ள கைதி முகாம்களில் இருக்கின்றனர். செஞ்சிலுவை யுத்தக் கைதிகள் தொண்டு ஸ்தாபன மூலமாக இந்தப் பார்சல்கள் அவர்களுக்குப் போய்ச் சேருகின்றன. இந்தக் கைதிகள் இருக்கும் இடம், அவர்களுடைய உறவினருக்குங் கூடத் தெரியாதிருந்தாலும், பார்சல்கள் மட்டும் அவர்களுக்குப் போய்ச் சேருகின்றன.

ஜப்பானியர் வசமுள்ளவர்களுக்கு உதவி?

ஐரோப்பியாவிலுள்ள யுத்தக் கைதிகளுக்கான வேலை ஒரு புறமிருக்க, மற்றொரு கஷ்டமான பிரச்சினையும் இருக்கிறது. அது தான், ஜப்பானியர் வசமுள்ள யுத்தக் கைதிகளுக்கு சப்ளைகள் அனுப்புவது. ஏதனால் இந்தப் பிரச்சினை கஷ்டமானது என்றால், ஜப்பானியர்கள் இவ் விஷயத்தில் நம்மோடு ஒத்துழைக்க மறுக்கிறார்கள். தனிப்பட்ட பார்சல்கள் அனுப்பவே முடியாது. ஆனால், மொத்தமாக, நடு நிலைமை நாடுகளைச் சேர்ந்த துறை முக மூலமாக, உணவுப் பொருட்கள், துணிகள், வைத்தியப் பொருட்கள் முதலியவற்றை அனுப்பலாம். சமீபத்தில் மார்மகோவா வென்னும் நடு நிலைமைத் துறை முகத்தில் அமெரிக்க யுத்தக் கைதிகளையும் கனடிய யுத்தக் கைதிகளையும் மாற்றிக் கொண்ட போது, மேலும் ஜப்பானியர் வசமுள்ள யுத்தக் கைதிகளுக்கு பார்சல்கள் ஏற்றியனுப்பப்பட்டன. இவற்றை ஏற்றியனுப்புவது மகா கஷ்டமாயிருந்தது. அந்தக் கப்பலின் காப்டன் கொஞ்சமும் உதவி செய்ய முடியாதென்று விட்டார். என்றாலும், அக் கஷ்டங்களை யெல்லாம் நிர்வகித்துக் கொண்டோம். மீண்டும் கப்பல் நிறைய பார்சல்கள் அனுப்பப்பட்டன. இந்தச் சம்பவத்தைக் குறித்து, அம்மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த ஒரு ஜெனரல் கூறினார். விடுவிக்கப்பட்டவர்களான அமெரிக்கர்களும் கனடியர்களும் இராணுவத்தைச் சேர்ந்தவர்களல்ல. 'சிவிலியன்'கள். அவர்களுக்கு மீட்சி கிடைத்து விட்டது என்று தாம் சொன்ன போது, அவர்கள் கொஞ்சமும் நம்பவில்லை யென்று அந்த ஜெனரல் அம்மகா நாட்டில் குறிப்பிட்டார். ஆண்களை விடப் பெண்கள் தான் மிகவும் தைரியமாயிருந்தார்களென்றும், ஆண்கள் பெரிதும் நடுங்கிக் கொண்டிருந்தார்களென்றும், குழந்தைகள் மிகவும் மெலிந்திருந்தார்களென்றும், அவர்களுக்கு மிட்டாய்கள் வழங்கப்பட்ட போது, பெரிதும் ஆச்சரியமடைந்தார்களென்றும் அவர் கூறினார். சென்ற 3 வருஷங்களாக அவர்கள் மிட்டாயைக் கண்ணாலும் கண்டதில்லையாம். செஞ்சிலுவைச் சங்கத்தார் அனுப்பும் பார்சல்கள் ஹாங்காங் போய்ச் சேர்ந்தன. போய் இறங்கிய உடனே அத்தனையும் செலவாகி விட்டது. மேலும் தேவை அதிகப்பட்டது. தூரக் கிழக்கு நாடுகளைக் குறித்த தகவல்களே கிடைப்பதில்லை. பார்சல்களை இப்படிக் கப்பலேற்றி அனுப்ப எத்தனை முறை ஜப்பானியர்கள் நம்மை அனுமதிப்பார்களென்று நமக்குத் தெரியாது. இது பற்றி ஒரு உறுதிப்பாடில்லாதிருக்கும் போது, எத்தனைப் பார்சல்கள் தேவைப்படும் என்று எப்படி முன்னதாகவே திட்டமிடக் கூடும். என்றாலும் அங்கே ஏராளமாகத் தேவையாயிருக்கிறது. ஆகவே, கிடைக்கக் கூடிய சந்தர்ப்பத்தை இழந்து விடக் கூடாது. இது பற்றிய நிதி சம்பந்தமான பிரச்சினையைக் குறித்தும் மகா நாட்டில் விவாதித்தனர்.

3 கோடி ரூபாய் சேகரிக்க வேண்டும்

இவற்றிற் கெல்லாம் வெகு அதிகந் தொகை செலவாகும் என்பது தெளிவாகத் தெரிந்த விஷயந் தான். வைத்திய சாலைகளுக்கு 'சப்ளை'கள் செய்வதற்கும், யுத்தக் கைதிகளுக்குப் பார்சல்கள் அனுப்புவதற்கும், 1½ கோடி ரூபாய் செலவிடுவதென்று மத்திய ஸ்தாபனத்தார் திட்டமிட்டனர். அந்தந்த மாகாணங்களிலுள்ள ஸ்தாபனங்கள் தம் எல்லைக்குட்பட்ட வைத்திய சாலைகளுக்குச் செலவிடும் தொகைகள் இதில் சேர்க்கப்படவில்லை. உதாரணமாக சென்னை மாகாணத்தை எடுத்துக் கொள்ளுவோம். இம்மாகாணத்திலுள்ள எல்லா இராணுவ வைத்திய சாலைகளுக்கும் வைத்திய 'யூனிட்டு'களுக்கும் வேண்டியவற்றை 'சப்ளை' செய்யும் முழுப் பொறுப்பும் மாகாண ஸ்தாபனமே மேற் கொண்டு விட்டது. இது சம்பந்தமாக மத்திய ஸ்தாபனத்திற்குச் செலவே கிடையாது. இந்த சப்ளைகள் செய்யும் பொருட்டு, சென்னை கவர்னர் மாளிகையைச் சேர்ந்த விருந்து மண்டபத்தில் ஒரு 'டிப்போ' ஏற்பட்டிருக்கிறது. எல்லாப் பொருட்களையும் இங்கே சேர்த்து வைத்திருந்து விநியோகிக்கப் படுகிறது. மற்ற மாகாணங்களும் ஏறக் குறைய இது போலவே செய்திருக்கின்றன. தென் கிழக்காசியப் போராட்டம் 1944-ம் வருஷத்தில் மிகவும் கடுமையாயிருக்கக் கூடு மென்று ஒருவாறு சொல்லலாம். ஆகவே, அந்த வருஷத்தில் வைத்திய சாலைகளுக்கு ஏராளமான பொருள்கள் தேவைப்படும். வெளி நாடுகளில் புதிய கமிஷன்களையும் 'டிப்போ'க்களையும் ஏற்படுத்த வேண்டி வரும். பணமில்லை யென்னும் காரணம் பற்றி, காயப் பட்டவர்களையும் யுத்தக் கைதிகளையும் நாம் கைவிட்டுவிடக் கூடாது. எந்தெந்தப் பொருட்கள் எந்த அளவிற்குத் தேவைப்படு மென்று அம்மகா நாட்டில் விவாதித்தனர். இவற்றின் பொருட்டு 1944-ம் வருஷத்தில் 3 கோடி ரூபாய் சேகரிக்க வேண்டு மென்று அனைவரும் ஒப்புக் கொண்டனர். அதாவது 1943-ம் வருஷத்தில் சேகரித்ததைப் போல இரு மடங்குத் தொகை. இந்தத் தொகையை நாம் வசூலிக்கத் தவறுவோமேயானால், நமது வேலையும் குறைந்து விட நேரும். அதிகத் தொகை சேர்ந்தால், அதிக வேலை செய்ய இடமுண்டு. ஆகவே, இந்தத் தொகையை நாம் கட்டாயம் வசூல் செய்யத் தான் வேண்டும். ஒவ்வொரு மாகாணமும் குறைந்தது எவ்வளவு வசூலிக்க வேண்டு மென்பது பற்றி நிர்ணயிக்கும் பொருட்டு, அம்மகா நாட்டில் ஆலோசித்தார்கள். ஆனால், அந்தந்த மாகாணங்களில் உள்ள நிலைமையை முன்னிட்டும், அங்கங்கே செஞ்சிலுவை வேலைகளின் பொருட்டுச் செலவாகும் பெருந் தொகைகளை முன்னிட்டும், ஒவ்வொரு மாகாணமும் இவ்வளவு தொகை வசூலிக்க வேண்டு மென்று திட்டமிட வேண்டு மென்ற யோசனை கைவிடப்பட்டது. ஆனால் அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாகாணமும், இன்ன தொகை வசூலிக்க வேண்டு மென்று தாமே நிர்ணயித்துக் கொள்ள வேண்டு மென்று முடிவானது. சென்னை மாகாணத்தில் நாம் எவ்வளவு தொகை வசூலிக்கக் கூடு மென்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நமது பங்குத் தொகையைத் திரட்ட நாம் பெரு முயற்சி செய்யவேண்டியிருக்கிறது. இந்தத் தொகையைக் கொண்டு தான், நாம் இந்த வேலையைச் செய்ய வேண்டும். இது வரை, யுத்தத்தினால் மற்ற மாகாணங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைப் போல, நம் மாகாணம் அவ்வளவாகப் பாதிக்கப் படவில்லை. ஆகவே, இந்தப் பங்குத் தொகையையாவது நாம் உதவத் தான் வேண்டும். காயப்பட்டவர்களுக்கும் எதிரிகளிடம் கைதியானவர்களுக்கும் இது அடுத்த வருஷத்திற்கு மிகவும் தேவைப்படும்.

(11-ம் பக்கம் பார்க்க)

போரும் பொருளாதாரமும்

(சைதாப்பேட்டை போதனாமுறைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்
வித்வான் எஸ். ஆறுமுக முதலியார் அவர்கள், எம்.ஏ., பி.ஓ.எல்., எல்.டி., அவர்கள் எழுதியது)

அமைதியும், அன்பும், அருளும் அறமும் நிலவிக் கொண்டிருந்த உலகில், இன்று போர் என்னும் கொடிய அரக்கன் புகுந்து கலக்குவதால், இவை ஓடி மறைந்து, இவற்றினிடத்தில், கலக்கமும், வன்மையும் மருளும், மறமும் புகுந்து கொண்டு தலை விரித்தாடுகின்றன. நாடு நகரங்களும், வீடு வாசல்களும், கால் நடைகளும், மக்களுயிர்களும், கோயில்களும், கல்லூரிகளும், தொழிற் சாலைகளும், பயிர் பச்சைகளும், பிறவும் தவிடு பொடியாகி, பொருள் அழிவும் உயி க் கொலையும் இன்று போரால் ஏற்பட்டிருப்பதன் அளவு, எண்ண இயலாது. எட்டிலும் அடங்காது. போரால் விளையும் இத் தீப் பயன்கள் இம்மட்டோ? இவையெல்லாவற்றையும் விடக் கொடுமை வாய்ந்தன, இப்போரால் பொருளாதார நிலையில் ஏற்பட்டிருக்கும் மாறுபாடுகளும், புரட்சிகளும்.

பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்

போர்க் காலத்தில் உலகப் பொருளாதார நிலையே முற்றிலும் உருமாறி விடுகிறது. புதிய செல்வ நிலைக் கொள்கைகளும், முறைகளும், புரட்சிகளும், மாறுபாடுகளும் ஏற்படுகின்றன. போர்க் குழப்பத்திலும், நெருக்கடியிலும் இப்புதியவற்றை மேற் கொள்ளல் இன்றியமையாததாய் விடுகின்றது. இவற்றால் பல துன்பங்களும் இடையூறுகளும் தடைகளும் விளைந்தாலும், இ காலத்தில் ஒவ்வொரு நாட்டவரும் இவற்றைப் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்.

போரில் இன்று ஈடுபட்டிருக்கும் எல்லா நாடுகளையும், அவற்றுள்ளும் சிறப்பாக இங்கிலாந்து, அமெரிக்கா, சைனா, இந்தியா முதலிய நாடுகளின் நடப்பைப் பற்றிக் கேட்பதிலும், படிப்பதிலும், காண்பதிலும் இருந்து, செல்வ நிலையில் நெருக்கடியும் மாறுதல்களும் ஏற்பட்டிருப்பதை அறிகிறோம். இன்றியமையாது வேண்டப்படும் உணவு, உடை முதலிய பொருள்களின் விலை மிக மிக ஏறிவிட்டது. எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும், காய் கறிகளிலிருந்து பவுன் வரை, மிகைப் பொருள்களிலிருந்து (.u uries) இன்றியமையாது வேண்டப்படும் பொருள் வரை (necessities) மிக மிக விலை ஏற்றி விற்கப்படுகிறது. பணம் மிகப் படைத்தோர், எவ்வளவு விலை கொடுத்தும் வாங்குவோம் என்றாலும், பணமே படைக்காதோர், மிகைப் பொருள்களை வாங்கப் பணமில்லை என்றாலும், இருவர்க்கும் நடுவிற்பட்ட பணம் இருந்தும் இலலாதோருமாகிய நடு நிலை மக்கள் (Middle class) பாடே, பெரும் பாடாயிருக்கிறது. பிற் கூறிய இருவகையோருக்கும் இன்றியமையாது வேண்டப்படும் பொருள்கள் கூட, வாங்க முடியாது படுந் துன்பம் எட்டிலடங்காது. காண்பதற்கும் கேட்பதற்கும் கூடப் பொறுக்க இயலாத பஞ்சக் கொடுமைகளை நாம், நம் நாட்டில் இன்று வங்காளத்திலும் பிற இடங்களிலும் காணவில்லையா? இந்நிலைக் குரிய காரணங்கள் பலவாயினும், சிறப்பான சிலவற்றைக் காண்போம்.

பஞ்சக் கொடுமைகளுக்குக் காரணங்கள் எவை?

முதலாவதாக, பொருள்களை விற்பனைக்கு என வெளிக் கொணராது சேர்த்து வைத்திருத்தலும், மிகவும் மிகுந்த விலைக்கு விற்றுப் பொது மக்களை ஏமாற்றி மிக உயர்ந்த ஊதியம் அடையலாம் என்னும் பேராசையும், இந் நெருக்கடியின் முதற் காரணங்கள் என்னலாம். வெளிக் கொணரப்படும் பொருள்களையும் மிக ஏறிய விலைக்கு, கிடைக்கும் அருமை கருதி, விற்கின்றனர். ஏறிய விலைக்குப் பொருள்கள் போவதால், பின்னும் விலை ஏறும் என்று கருதி விற்காமல் அவற்றைச் சேர்த்து வைப்பதும், பொருள்களைச் சேர்த்து வைப்பதனால் விலை மிக ஏறுவதும் ஒன்றற்கொன்று பிரிக்க முடியாத தொடர்பைப் பெற்று, ஒன்றை ஒன்று வளர்க்கிறது. இன்னும், போர்க் காலத்திற் கூட, மிகைப் பொருள்களைக் கைவிடாது பற்றிக் கொண்டு ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும், வாங்க முற்படுகின்றனர். நம்மிந்தியர் பண்டு முதல் மேற்கொண்ட "எளிய வாழ்க்கையும் உயரிய குறிக் கோள்களும்" என்ற சிறந்த கொள்கையை, மிக உயர்ந்த விலை நிலவும் இக்காலத்திலாவது நம்மவர்கள் மேற் கொள்ளலாகாதா? "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்," என்று வள்ளுவர் வற்புறுத்திக் கூறிய வாக்கு, இன்று நன்கு கவனிக்கப்பட வேண்டும்.

மேலும், போரில் எதிரிகளை முறியடித்து முழு வெற்றிபெற வேண்டும் என்னும் ஒரே நோக்கத்திலேயே நேச தேசங்கள் முனைந்து நிற்பதால், நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், அரசியலாரும், தொழிற் சாலைகளும், போரை வெல்லுவதற்குரிய போர்க் கருவிகளையும், முப்படை வீரர்களுக்கும் வேண்டிய உணவு, உடைப் பொருள்களையும் உண்டாக்கிக் குவித்துக் கொண்டிருக்கின்றனர். பொது மக்களின் தேவைகளுக்கு என, அமைதிக் காலங்களில் வேலை செய்து பொருள்களை உண்டாக்கிய இவைகள் எல்லாம், இவ்வனைத்தையும் போருக்கெனவே இப்பொழுது உண்டாக்குவதால், பொது மக்களின் வாழ்க்கைக் கென இவைகள் வந்து சேருவதில்லை. உள் நாட்டில் போக்கு வரவு வசதிகளும், போருக்கெனவே பெரும்பாலும் உழைப்பதால், பொது மக்களின் தேவைகளுக்கு எனக் கிடைக்கும் சிலவற்றைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்று பகிர்ந்து கொடுக்கவும் முடிவதில்லை.

அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களும் பிறவும் கொண்டு வந்து இறக்குமதி செய்யக் கூடியவை தாமும் இப்பொழுது கிடைக்கவில்லை. பர்மா, மலேயா முதலிய நாடுகள் எதிரிகள் கைப்பட்டன. நேச நாடுகளிலிருந்து அனுப்பக் கூடியவற்றிற்கும் போதிய கப்பலிடமும் போக்கு வரவு வசதிகளுமில்லை. இன்னும் நம் நாட்டு 40 கோடி மக்கள் தொகைக்கு மேல் நம் நாட்டுப் பாது காவலுக்காக, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நேச நாடுகளிலிருந்து வந்து இறங்கியிருக்கும் பல்லாயிரக் கணக்குள்ள போர் வீரர்களுக்கும், நம் நாட்டில் உணவுப் பொருள்கள் காண வேண்டியிருக்கிறது.

விலையை ஏற்றி இன்னலைப் பெருக்குகின்றனர்

இவை யெல்லாவற்றையும் விட நோட்டுப் பெருக்கம் எனக் கூடிய inflation என்பது சிறந்த காரணமா யிருக்கிறது. பொருள்களை வாங்குவதற் குரிய பணம் மிகுதியாக நிலவுகிறது. ஆனால் அதன் மதிப்பும், பொது மக்கள் வாங்குவதற்குரிய பொருள்களும் குறைந்து விட்டன. பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று அறியாதோர், மேலும் மேலும் விலை கொடுத்து, கிடைக்கக் கூடியவற்றை வாங்கி இன்னும் விலையை ஏற்றி, இன்னலையும் பெருக்குகின்றனர்.

இன்னோரன்ன காரணங்களால் விளையும் செல்வ நிலை பற்றிய இந் நெருக்கடியைப் போக்க வழிகள் இல்லையா? இதற்கெனப் பல் வழி வகைகளை அரசியலறிஞரும், பொருளாதார வல்லுநர்களும் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். முதன் முதலில், உணவுப் பொருள்களை மிகவும் மிகுதியாகப் பயிர் செய்ய வேண்டும் என்பதைக் கொள்ளலாம். இவ்வழியில் அரசியலார் பெரும்பாடு படுகின்றனர். உடலுறுதி கொடுக்க வல்ல பலவகைப் பருப்புகளும், பழங்களும், காய் கறிகளும், கிழங்குகளும், மூலை முடுக்குகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும், முற்றங்களிலும், வெற்றிடங்களிலும், தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும், பயிர் செய்யப்பட வேண்டும். இதற்கு வேண்டிய வசதிகளை அரசியலார் செய்கிறார்கள். பொது மக்களும், பெரிய நிலக் கிழவர்களும், சமீன்தார்களும் இவ்வேலையில் ஒத்துழைக்க இடமுண்டு. இதோடு, படை வீரர்களுக்கெனப் போகும் பொருள்களின் அளவுக்கும், போர் வேலைக்கும் ஊறு ஏற்படாதவாறு இன்னும் கொஞ்சம் மிகுந்த அளவில் தேவைப் பொருள்களைப் பொதுமக்களின் செலவுக்கு என அரசியலார் திருப்பிவிடலாம். இன்றியமையாப் பொருள்களின் விலைகளை அடக்கி ஆண்டு, உறுதி செய்ய அர யலார் முன்னுக்கு வரவேண்டும். சிறப்பாக உடை உணவுப் பொருள்களில் அரசியலார் தம்மாலான அளவு செய்து கொண்டிருக்கிறார்கள். சென்னை போன்ற பெரு நகர்களில் அரிசிப் பங்கீடு ஏற்பட்டிருப்பது போல, எல்லா நகரங்களுக்கும் வருவது நலம்.

செலவுகளையும் தேவைகளையும் குறைக்க வேண்டும்

பொது மக்களுக்குப் பயன்படக் கூடிய மற்றொரு வழியாவது: பூதம் போலப் பொருள்களை விற்பனைக்கு விடாமல் சேர்த்துக் காத்துக் கொண்டிருக்கும் கொடியர்களின் சேமிப்புகளைத் தகர்த்து வெளிக் கொணருவதாகும். திருட்டுத்தனமாக மிகு விலைக்கு விற்று, பெரு ஊதியம் பெற முயலுபவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுக் கடுந் தண்டனைக்குட் படுத்தப்பட்டால், பிறரும் அவ்வாறு செய்வதற்கு அஞ்சுவர். உணவுப் பொருள்கள் குறைவாக இருக்கும் இடங்களுக்கு விரைவில் அவை போய்ச் சேருவதற்கான போக்கு வரவு வசதிகளும் இன்னும் அளிக்கப்பட வேண்டும். இவைகள் எல்லாப் போர் வேலைக்கும் யாதொரு ஊறும் விளையாத நிலையில் செய்யப்பட வேண்டும். பொது மக்களும் போர்க்கால நெருக்கடிகளை உணர்ந்து, அவற்றிற் கேற்றவாறு, தங்கள் செலவுகளையும் தேவைகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

பணத்தை மீத்து வைக்க வேண்டும்

இவை எல்லா வற்றையும் விடப் பொது மக்கள் செய்ய வேண்டிய மற்றொரு கடமை உள்ளது, அதைச் சரிவர உணர்ந்து செய்வார்களாயின், பொருளாதாரத் துன்பம் பெரும்பாலும் நீங்கும். இதைப்பற்றி அரசியலாரும், சிறப்பாகத் தேசியப் போர் முனையாரும், போர் விளம்பரக்காரர்களும், பொது மக்களிடை விளம்பரப் படுத்துகின்றனர். அது வாங்குவதற்கென ஆயத்தமாயிருக்கும் மிகு பணத்தை, வாரி இறைத்து வீணாக்கி விடாமல், இக்காலம் வருங் காலம் ஆகிய இரு கால வாழ்விற்கும் நலம் விளையுமாறும், போர்முடிந்து அமைதி நிலவிப் பல பொருள்களும்பொது மக்கள் வாங்கக்கூடிய அளவில் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய நிலையில் வாங்குவதற் கெனவும், இப்பொழுதே சேர்த்து மீத்து வைப்பது ஆகும். அங்ஙனம் செய்தால், இப்பணம் வீணாகப் போகாமல் இருப்பதோடு, பிற்காலத்தில் வட்டியும் முதலும் கிடைக்கும். அரசியலாருடைய பல வகை நிதிகளிலும் சேமிப்புகளிலும் இதைப் போட்டு வைத்தால், பிற்காலத்தில் வட்டியோடு பெறலாம். குறைந்த விலையில் மிகுந்த பொருள்களைப் பின்னர் வாங்கலாம். பணப் பெருக்கத்தைக் குறைப்பதால் இக்கால விலைவாசிகளின் ஏற்றத்தையும் குறைக்கலாம். இன்னும் எதிரிகளை முறியடித்து வெற்றியை நிலவச் செய்வதில் அரசியலார்க்குச் சிறந்த பக்க உதவியும் ஆகும் இது.

இச் சேமிப்பின் அருமை பெருமைகளை உணர்ந்து நம் போன்ற எளிய நாடாகிய சைனாவும். இதுவரை ஏறக்குறைய 86 கோடி டாலர்களைச்சேமித்து வைத்துப் பயனெய்தி யிருக்கிறது. எட்டு வாரங்களில், பொது மக்களிடை பண ஏற்றத் தாழ்வில்லாத சமதர்மக் கொள்கையுடைய ரஷ்யாவும் சுமார் 45¾ கோடி ரூபிள்களைச் சேமித்து வைத்ததாம். செல்வம் கொழிக்கும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கேட்க வேண்டியதில்லை. சிறப்பாக இங்கிலாந்தில் இச் சேமிப்பின் நற்பயனை உணர்ந்த பொது மக்கள் நான்கு ஆண்டுக ளுக்குள் 61 கோடி 38 லட்சம் பவுன்கள் சேமித்து வைத்திருக்கின்றார்களாம். இன்னோரன்ன வழிவகைகளை நாமும் மேற் கொண்டால், விலை வாசித் துன்பங்கள் ஒருவாறு குறையலாம்.

ஒன்பது விதிகள்

எனவே போர்க்காலத்தில் கீழ்க்கண்ட வாக்குகளை நம்மவர்கள் உள்ளத்திலமைத்து, நடைமுறையிலும் கையாளலாம் :—(1) செலவைச் சுருக்கு. (2) தேவைகளைக் குறைத்துக் கொள். (3) பணத்தை வீணாக்காமல் சேமித்து வை. (4) பொருள்களைச் சேர்த்துப் பயனின்றிப் புதைத்து வைக்காதே. (5) கடன் படாதே. (6) உணவுப் பொருள்களை மிகுதியாகப் பயிர் செய். (7) போரின் வெற்றி விரைவில் கிடைப்பதற்கான வழியைத் தேடுவதில் ஈடுபடு. (8) உணவுப் பொருள்களைக் குடும்பச் செலவிற்கு வேண்டியதற்கு மேல், சேர்த்து வைக்காதே. (9) பேரூதியம் அடைய வேண்டி, மிக உயர்ந்த விலைக்கு விற்கப் பேராசைப் படாதே.

(10-ம் பக்கம் தொடர்ச்சி.)

ருசிகரமான விவாதங்கள்

இந்த விவாதங்க ளெல்லாம் மிகவும் ருசியாகவே யிருந்தன. இதை விட ருசிகரமானது என்ன வென்றால், அங்கு விஜயம் செய்திருந்த மாகாணப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் அந்தந்த மாகாண செஞ்சிலுவை டிப்போக்கள் வைத்து நடத்துகிறவர்கள். ஆகவே, ஸ்டோர்கள், அவற்றை வாங்குவது, விநியோகிப்பது, அதன் விகிதம், பொருள் நிலை முதலியவை பற்றி தமக்குள்ளாகவும், இந்தியா அரசாங்கப் பிரதிநிதிகளுடனும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வசதியா யிருந்தது. ஏராளமாகக் கடிதப் போக்கு வரவுகள் நடத்துவதை விட, சிறிது நேரம் கலந்து பேசுவதனால், நல்ல பலனுண்டு. இதைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? அதைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? என்னும் கேள்விகள் இடைவிடாது கேட்கப்பட்டு வந்தன. அங்கு விஜயம் செய்திருந்த அனைவரும் இந்த நிர்வாகத்தை நடத்தியவர்கள் அல்ல வாகையால், இந்தக் கேள்விகளுக் கெல்லாம் விடை யளிக்கக் கூடவில்லை யென்பது சிறிது வருந்தத் தக்கது தான். என்றாலும், சிறந்த வேலைகள் பல அங்கே நடை பெற்றன. வைத்திய உத்தியோக இலாகா டைரக்டர் ஜெனரல் வில்சன் அவர்களே நேரில் அங்கு விஜயம் செய்து, கேள்விகளுக் கெல்லாம் விடையளித்தார். பொதுக் கொள்கை பற்றிய தகவல்களை உதவினார். இவை பெரிதும் பயன்பட்டன.

போர்க் கோலமும், இந்தியப் பெண்களும்

(திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள்.)

[யுத்தத்தைப் பற்றி இந்தியப் பெண்கள் என்ன நினைக்கின்றார்கள்? பிற நாட்டுப் பெண்கள் போர் முயற்சிக்கு எந்த அளவு உதவுகிறார்கள்? நம் நாட்டுப் போர் முயற்சியில் பெண்கள் மேற் கொண்டிருக்கும் பங்கு என்ன?—அச்சு அரசாங்கங்கள் வயப்பட்ட நாடுகளில் பெண்கள் படும் அல்லல்கள்—போராடும் ஆண்களுக்கு எந்தெந்த வகைகளில் பெண்கள் உதவி புரியலாம்—இந்தியாவைக் காக்க வேண்டிய பொறுப்பு பெண்களுக்கும் உண்டு—இந்தப் பொறுப்பை எந்தெந்த வகைகளில் பெண்கள் நிறைவேற்றலாம், என்று திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் சுருக்கமாக இக்கட்டுரையில் விளக்கி யிருக்கின்றார்கள்.]

திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள்

இது காறும் நமது இந்தியப் பெண்மணிகளிடத்தில் யுத்தம் என்று சொன்னால், உடனே மஹா பாரத யுத்தம், இராமாயண யுத்தம் தான் நினைவுக்கு வரும். 1914, 1918-ல் நடந்த மஹா யுத்தத்திற்குப் பிறகும் கூட, இந்த பாரத இராமாயண யுத்தம் தான் நினைவிற்கு வருவதை நாம் பார்த்திருக்கிறோம். இனிமேல் யுத்த மென்றால் இந்தக் கொடிய உலக யுத்தந் தான் என்று நினைப்பார்களே தவிர, வேறே யுத்தத்தைப் பற்றி நினைக்க மாட்டார்கள், நினைக்கவும் முடியாது.

இந்த யுத்தம் ஆரம்பித்து 5 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் 1932-ம் ஆண்டிலேயே, கிழக்கே ஜப்பான் சீனா மீது படை எடுத்து, யுத்தத்தைத் துவக்கினது. 1935-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முசோலினி அபிசீனியாவின் மீது படை எடுத்தார். இது மாதிரி அங்கும் இங்குமாக யுத்தப் புகை புகைந்து கொண்டிருந்தது. 1939-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி ஜெர்மனி போலந்து மீது படையெடுத்து யுத்த நெருப்பை எரிய விட்டது. நாஜி ஹிட்லர் எரிய விட்ட தீயானது, காட்டுத் தீயைப் போல், ஏற்கெனவே புகைந்து கொண்டிருந்த மேல் நாடுகளிலும், கீழ் நாடுகளிலும் பற்றி எரிய ஆரம்பித்து விட்டது.

பேராசையும் வெறியுமே சண்டைக்குக் காரணம்

உலகச் சண்டை தோன்றுவதற்கு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் பேராசையும், சண்டை வெறியுமே காரணங்களாகும். ஐரோப்பாக் கண்டத்தையே சீர்ப்படுத்தி, அதில் புதிய அமைப்பை ஏற்படுத்தி, கலை, கல்வி, நாகரிகம், கைத் தொழில்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கே சண்டையிடுவதாகச் சொல்லிக் கொண்டு, ஹிட்லர், நாகரிக மற்றச் செயல்களினால், நாகரிகம், கைத் தொழில்களை அழித்து, விஷப் புகையினால் மக்களைக் கொல்லுகிறான். காட்டு மிராண்டிகளாய், நாகரிகம் தெரியாத எதியோப்பியர்களுக்கு, நாகரிகத்தைப் புகட்டவே அபிசீனியாவைப் பிடிக்கிறேன் என்று சொன்ன முசோலினி, அநாகரிகமான செயல்களைச் செய்து, அந்நாட்டையே நாசமாக்கினான். ஜப்பானியரும், சீனரும் ஒன்று, ஒரு மதத்தினர். எங்களுக்குள் வேற்றுமைக் கூடாது. ஆகையினால் பிற்போக்கான சீனர்களுக்கு உயர்ந்த நாகரிகத்தையும், சிறந்த கல்வியையும் கலையையும் கற்பித்து, மேல் நாட்டினரிடமிருந்து விடுவித்து, ஸ்வதந்திரமடையச் செய்வதற்குத் தான், சீனா மீதில் படை எடுத்தோம் என்று கூறும் ஜப்பான், சீனாவைச் சிதறடித்து மக்களுக்கு அபினைக் கொடுத்து போதை யுண்டாக்கி தன் வசப் படுத்துவதும், பெண்களை உயிருடன் தோலையுரித்துக் கம்பத்தில் கட்டுவதும், பெண்களைக் கற்பழிப்பதும் தான், ஜப்பான் கண்ட நாகரிகம்.

இந்தியப் பெண்களின் பிற்போக்கான நிலை

இது வரையிலும் யுத்தம் எங்கேயோ 5,000 மைல்களுக் கப்பால் நடக்கிறது; நமக்கென்ன வென்று நினைத்து ஏமாந்த காலம் போய், நமது நாட்டில் நமது வீட்டு வாசலில் யுத்தம் நடக்கவும் வெடி குண்டுகள் விழவும் தொடங்கி விட்டது. உறங்கிக் கொண்டிருந்தவர்க ளெல்லாம் உணர்ச்சி பெற்று எழுந்திருக்க நேர்ந்தது. இது வரை, இந்தியப் பெண்மணிகள் பெரும்பாலும் தம் குடும்பக் காரியங்களையே கவனித்து வந்தார்கள். ஏதோ சிலர், ஆங்காங்கே உபாத்தியாயினிகளாகவும், வைத்தியர்களாகவும், மருத்துவர்களாகவும் வேலை செய்து வந்தார்கள். அதன் பின் சிலர் ஆடவருடன் கலந்தும், தனியாகவும் கச்சேரிகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர். உலகத்தில் மற்ற நாட்டுப் பெண்களை விட, நம் நாட்டுப் பெண்கள் மிகவும் பிற்போக்கடைந்துதா னிருக்கிறார்கள். தற்கால யுத்த விஷயத்தில் நம் இந்தியப் பெண்கள் கவலையற்று, ஒன்றும் அறியாமல் தானிருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

ஹிட்லர் ஆட்சி வந்தால் பெண்கள் நிலை என்ன?

ஜெர்மனியும், ஜப்பானும் தாங்கள் பிடித்த நாடுகளிலுள்ள தன தான்யம் பொருள்கள் யாவையும் எடுத்துக் கொண்டு, அங்குள்ள கனதனவான்களையும் ஏழை எளியோரையும், பெண்களையும் சிறுவர்களையும், அரை வயிறு ஆகாரம் கொடுத்து, சவுக்கால் அடித்துக் கொடிய வேலைகளைச் செய்விப்பதும், சுட்டுக் கொல்லுவதும், பெண்களைக் கற்பழித்து தீயிலிடுவது போன்ற கொடிய செயல்களைப் புரிகின்றனர். பெண்களுக்கு உரிமை, கல்வி, உத்தியோகங்கள் கூடாது. வீட்டிற் குள்ளிருந்து கொண்டு வீட்டு வேலைகளைச் செய்து கொண்டும், பிள்ளைகளைப் பெற்று ஜனத் தொகையைப் பெருக்கிக் கொண்டு மிருக்க வேண்டுமே தவிர, ஆண்களைப் போல் படிக்கவோ, ஓட் உரிமை பெறவோ, உத்தியோகங்கள் செய்யவோ கூடாது என்று நாஜி ஹிட்லர் கூறுகிறார். இவர் ஆட்சி வந்தால், நம் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை, இந்தியப் பெண்கள் யோசிக்க வேண்டும். இந்த 5 வருஷங்களாக நமது இந்திய சகோதரர்கள் யுத்த சேவையில் கடற் படையிலும், விமானப் படையிலும், தரைப் படையிலும் பல தொழிற்சாலைகளிலும் செய்து வரும் தொண்டு மிகவும் மெச்சத் தக்கது. தற்கால யுத்தத்திற்கு சைன்னியங்கள் அதிகம் தேவை. அதற்கு ஆடவர்களை மாத்திரம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தால் போதாது. ஏனென்றால் ஜனத் தொகையில் ஏறக்குறைய ஆண்களும் பெண்களும் சமமாகத்தா னிருக்கின்றோம். ஒரு பாதியாயுள்ள ஆண் உலகம் வேலை செய்து கொண்டு, மற்றோர் பாதியாயுள்ள பெண் உலகம் வாளா யிருப்பது சரியா? தற்கால யுத்தத்திற்குக் கட்டு திட்ட மில்லை. போர்க்களத்தில், போர் வீரர்களை மட்டும் அழிப்பதா யில்லை. போருக்குச் சம்பந்தப்படாத நிரபராதிகளும், பட்டினங்கள், கிராமங்கள், வைத்திய சாலைகள், பள்ளிக் கூடங்கள், கோவில்கள், தொழிற்சாலைகள் முதலிய யாவும் அழிந்து போகின்றன. விழுகிற வெடி குண்டுகள் பெண்களை விட்டு, ஆண்களை மாத்திரமா நாசப்படுத்துகின்றன? இல்லை. மேல் நாட்டுப் பெண்மணிகளைப் பாருங்கள்; இங்கிலாந்தில் 1 கோடி பெண்கள் யுத்த சேவையில் சேர்ந்து வேலை செய்கின்றனர். ரஷியாவில் லக்ஷக் கணக்கான பெண்கள் துப்பாக்கிகளைக் கையிலேந்தி, குதிரை சவாரி செய்து செல்லுகின்றனர். அமெரிக்க நாட்டுப் பெண்கள் உலக மெங்கும் சுற்றி போரில் பங்கு கொள்கின்றனர். சீன நாட்டுச் சிறுமிகள் சிட்டுவைப் போல பறந்து யுத்தம் புரிய லக்ஷக் கணக்கில் சேருகின்றனர். ஆனால் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரப் பெண்கள் பிறந்த நாடு எங்கள் நாடு, என்று சொல்லிக் கொள்ளும் இந்தியப் பெண்களின் சேவையோ, மிகவும் பிற்போக்கடைந்து இருப்பது வருந்தத் தக்கது.

யுத்தம் என்பதை அறியாமலும், கவலையின்றி உல்லாச வாழ்க்கை நடத்தி வந்தப் பெண்களும், கூரைக் குடிசைகளில் கஷ்ட ஜீவனம் செய்யும் ஏழை எளிய பெண்களும், யுத்தம் என்றால் இன்னது, யுத்தத்தினால் ஏற்படும் கஷ்டங்கள் இன்ன இன்னவை, என்பதை நன்றாக அறிந்து கொண்டார்கள். இதற்குக் காரணம் பொருளாதார நெருக்கடியும், உணவுப் பொருள் பஞ்சமும் தான்.

ஆண்கள் பணியும், பெண்கள் தொண்டும்.

இப்போது போரானது இந்தியாவுக்குள் புகுந்து விட்டது. இந்தியாவும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே, இந்தியா தன் மக்களையும், மூலப் பொருள்களையும் உபயோகிக்க வேண்டும். முக்கியமாய், பெண்கள் தங்கள் அரிய தொண்டை தக்கபடி பயன் படுத்த வேண்டும். பல துறைகளில் ஆண்களுக்குப் பக்கத் துணைவர்களா யிருந்து, உதவிப் புரிய வேண்டும். விமானம் பறக்க விடும் ஆணுக்கு, விமானம் செய்து தருவது பெண்ணாக யிருக்க வேண்டும். கப்பலோட்டிக்கு கப்பல் கட்டுவது பெண்ணின் வேலை. துப்பாக்கி பிடிப்பவர்க்கு துப்பாக்கி தயாரிப்பது பெண்ணின் வேலை. போரில் காயமடைந்தவரை காப்பது பெண்ணின் வேலை. உயிரை மதியாது போர் புரியும் சகோதரர்களுக்கு, உணவுப் பொருள் சேகரிப்பது பெண்ணின் வேலை. பெண்கள் எவ்வளவு திறமையுடன் தைரியமாக வேலை செய்கின்றார்களோ, அவ்வளவுக் கவ்வளவு திறமையுடன் நம்மால் அனுப்பப்படும் சகோதரர்கள் போர் புரிவார்கள்.

இந்தியப் பெண்களின் பொறுப்பு

தனது, தன் நாடு, தன் பொருள், தன்னுயிர், தன் மக்கள் என்கிற ஆசையும், தனக்குச் சொந்தமானவைகளைக் காக்கும் பொறுப்பும் இல்லாத மக்களே கிடையாது. ஆகையினால், ஆபத்துக் குள்ளான இந்தியாவைக் காக்கும் பொறுப்பு, இந்தியப் பெண்களுக்கும் உரியது. யுத்தங் காரணமாக, பொருளாதார நெருக்கடியும், உணவுப் பஞ்சமும் மக்களை வாட்டுகிறது. யுத்தச் செலவிற்கு 1 நாளைக்கு 3 கோடி ரூபாய் பிரிட்டன் செலவு செய்ய வேண்டி யிருக்கிறது. காலச் சக்கரத்தை அறிந்து, பெண்கள் சிக்கன முறையைக் கையாள வேண்டியது மிகவும் அவசியம். அநேக அவசரமில்லாச் செலவுகளை, நம் பெண்கள் செய்கிறார்கள், அவை

(13-ம் பக்கம் பார்க்க)

யுத்தமும் கைத்தொழிலும்

கோவை ஜி. டி. நாயுடு அவர்கள்

இந்த யுத்தமானது மொத்தத்தில் எல்லோருக்கும் கஷ்ட நஷ்டங்களைக் கொடுப்பதாயினும், மற்ற எந்தத் தேசத்தைக் காட்டினும் நம் தேசத்திற்கு மறை முகமாக அளவிட முடியாததும், எந்தக் காலத்திலும் யாராலும் எதிர் பார்க்க முடியாததுமான நன்மையைக் கொடுத்திருக்கின்றது, கொடுத்தும் வருகின்றது, கொடுக்கவும் போகின்றது. காங்கிரஸ், முஸ்லீம் லீக், இந்து மகா சபை, பிராமண சபை, பிராமணரல்லாதார் சபை, கிருஸ்துவர் சபை, கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட் முதலியோர் சபை இவைகளின் வாயிலானும் எண்ணுதற்கரிய தொகை கொண்ட தலைவர்கள், மகான்கள் என்று சொல்லப்படுபவர்கள் வாயிலானும், முழு சுயராஜ்யம் அல்லது அரை, கால் வாசி சுயராஜ்யமாவது கிடைக்கும் என்று கனவிலுங் கூட நினைக்க முடியாத இந்தியாவிற்கு, அந்தச் சுயராஜ்யம் கிடைப்பதற்கு ஒரு அஸ்திவாரத்தைக் கூட இந்த யுத்தம் கொடுத்திருக்கின்றது என்று சொல்லலாம். இ·.து எப்படி என்பதைக் கீழே விவரிக்கின்றேன்.

சுயராஜ்யம் வேண்டு மென்றால் யாருக்குப் பலம் உண்டோ அவர்கள் தான் போரிடவேண்டும். அந்தப் பலம் இல்லாதவர்கள், அடிமையாய் இருக்க வேண்டியதாகின்றது. அந்தப் பலத்தை எப்படி அடைவது? அப் பலம் அல்லது சக்தி பல சபைகளின் தலைவர்கள் என்போர் மனம் போனவாறு பிரசங்கங்கள் புரிவதாலும், பெரும்பான்மையான ஜனங்களைப் போதித்தோ, ஏமாற்றியோ தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டு ஒரு மதிப்பு, செல்வாக்குப் பெற்றுக் கொள்வதினாலேயோ, வந்து விடாது. தொழிலாளர்கள் பெரும்பான்மையாகக் கூட்டங்கள் கூட்டி, சங்கங்கள் ஸ்தாபித்து "நாங்கள்தான் முதலாளிகள்! நாங்கள் தான் அரசாங்கம் என்று மற்றவர்களை ஏளனமாகவோ முறையிட்டோ பேசுவதால் மட்டும் வந்து விடுவதில்லை. மற்றும் அநேகத் தலைவர்கள், சமயவாதிகள் மேடைகளில் ஏறி நம்முடைய வித்தியாசங்களை எல்லாம் ஒழித்துவிட்டு ஒன்று சேர்ந்து கொள்வோமென்றால், மறு நாளே சுயராஜ்யம் வந்து விடும் என்பதாலோ, அல்லது காந்திகள், பட்டேல்கள், ஆச்சாரிகள் சொல்வது போன்று, இந்தியாவிலுள்ள மக்கள் எல்லோரும் நூல் நூற்று ஒவ்வொருவருக்கும் இரண்டு முழக் கோவணங்கள் செய்தாலோ அல்லது இந்திய ஜனத் தொகை முழுதும் சேர்ந்து (கையினால் காகிதம் செய்யும் பட்சத்தில் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் விளம்பரத்திற்காக செலவாவதில் முக்கால் வாசி தான் செய்ய முடியும்) காகிதம் செய்வதனாலேயோ, சத்தியாக்கிரகம், அகிம்சா தருமம் என்ற பயங்கொள்ளிக் கொள்கைகளை முன்பே பலவீனமாய் உள்ள இளைஞர்களிடமோ, முதியோர்களிடமோ ஏற்றுவதினாலேயோ அல்லது மேடைகளில் ஜப்பானை ஒழிக்க வேண்டும், ஜெர்மனியை ஒழிக்க வேண்டும் என்று பேசிவிட்டு, இரகசியமாய் நம் நாட்டைக் கவிழ்த்து யுத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட உபதேசிக்கும் மகான்களாலோ, முட்டாள்களாலோ, இந்தியாவுக்கு ஒரு நாளும் சுயராஜ்யம் பெறும் பலம் வரமாட்டாது.

எந்த வித ஒற்றுமை சுயராஜ்யம் கொடுக்கும்?

எது எப்படியாயினும், எல்லா ஜனங்களுக்கும் ஒற்றுமை என்கின்ற உணர்ச்சி வந்து தான் தீரவேண்டும். ஒன்றை ஜெயிப்பதற்காக உலகத்தையே அடிமையாக்க அஸ்திவாரம் போட்ட ஜெர்மனி, ஜப்பான் முதலிய அக்கிரம நாடுகளை நசுக்கவும் ஒற்றுமை தான் வேண்டும். அந்த ஒற்றுமைக்கு அடிப்படையாக ஏதாவது ஒரு அஸ்திவாரம் வேண்டு மன்றோ! அந்த அஸ்திவாரம் ஜாதிகள் ஒன்று சேருவதினாலேயோ, களிமண் மூளையில் ஆக்கப்பட்டவர்கள் ஒன்று சேருவதினாலேயோ, உடம்பு பலவீனர்கள், பயங்கொள்ளிகள், நேர்வழி இல்லாதவர்கள் ஒன்று சேர்வதினாலேயோ, சாதாரண பலமுள்ள அஸ்திவாரம் கூட ஆகாது. அதற்குப் பதிலாக அதை இடித்துத் தள்ளும் ஒரு வெடிவேட்டு மாதிரி தான் ஏற்படும். ஆனால் எந்த விதமான ஒற்றுமை சுயராஜ்யத்தைக் கொடுக்கும் என்று கேட்கலாம். இந்திய மக்கள் எல்லோரும் தொழிலாளர்கள் என்ற எண்·ம·த்தை உண்டாக்கி, அந்த எண்ணத்தோடும், திறமையோடும் அழுத்தம் திருத்தமாகவும் தொழில் செய்யக் கூடிய சக்தியைப் பெற்று, அதன் மூலமாக ஏற்படும் ஒற்றுமை என்ற அஸ்திவாரத்தால் மட்டும் எந்த சுயராஜ்யமும் சம அந்தஸ்தும் அடையலாம் என்பதை அறிவுடை எவனும் ஒப்புக் கொள்வான். ஆனால் இத்தகைய அஸ்திவாரம் ஏற்படுவது சுலபமல்ல. அதற்குச் சமயம், சந்தர்ப்பம், இடம், பலம் முதலியவைகள் வேண்டும். இந்த யுத்தத்தின் துவக்கத்திலேயே நேராகவும், மறைமுகமாகவும் நம் அரசாங்கத்தால் இவை நமக்குக் கிடைத்தன. அப்பொழுது அதிகாரத்திலிருந்த ஸ்தாபனம், அச் சாதனங்களை உபயோகப் படுத்திக் கொள்ளாமல், இந்தியாவின் பூரண சுயராஜ்யத்திற்கு முழு விரோதிகள் காங்கிரஸ் தான் என்று சொல்லும்படியாக அவைகளை உதைத்துத் தள்ளிவிட்டு, இந்தியாவுக்கு என்ன கேடுகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யத் தலைப்பட்டது. அப்படியிருந்தும் நம் அரசாங்கம் அச் சாதனங்களையும், தருணங்களையும் பூரணமாக நாம் உபயோகிக்கும்படியாக எல்லாத் தொழிலாளர்கட்கும் தொழிற் கல்வியை போதித்து வருகின்றது. இதனால், எல்லாத் தொழிலாளர்களும், தொழிலின் தத்துவங்களைத் தெரிந்து கொண்டு ஒரு பொது உணர்ச்சியோடு ஒற்றுமைப் பட காலம் வந்திருக்கின்றது. இத் தொழில் உணர்ச்சியின் பயனை, யுத்தம் நின்ற பின் நாம் நன்கு அறிவோம்.



கோவை ஜி. டி. நாயுடு.

இந்த யுத்தத்தின் மூலம் அரசாங்கத்தார் தொழில் அறிவு கொடுத்து வருவதை நாம் ஏற்றுக்கொண்டு, ஒற்றுமை என்கிற புத்துயிர் பெற்று நம் நாட்டின் விடுதலைக்கு நாம் அடிகோலாவிட்டால் அது நம் நாட்டிற்கு துர் அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்.

முடிவாக வரப்போகும் புது ஆண்டில், நாம் எல்லோரும் அரசாங்கத்தார் திறந்து வைத்திருக்கும் தொழில் உலகத்தில், திரள் திரளாய் புக வேண்டு மென்பதும் புகுந்து அதன் விளைவான ஒற்றுமையால், நம் நேச நாட்டார் யுத்தத்தில் வெற்றி யடைந்து, வரும் ஆண்டை வெற்றி யாண்டாகக் கொண்டாட வேண்டு மென்பதும் என் அவா!

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

களைக் குறைக்க வேண்டும். பொருள்கள் கிடைக்காத காரணத்தினால், சில பெண்கள், அவசிய மில்லா, அலங்காரப் பொருள்களுக்காகப் பணத்தை விரயம் செய்ய முடியாமல் ஆகிவிட்டது. இந்தப் பழக்கத்தையே எப்போதும் கடைப்பிடித்து அந்த பணத்தை உபயோகமான வழிகளில் செலவு செய்ய, பெண்கள் முன் வரவேண்டும்.

இந்தியப் பெண்கள் உதவிப் படை

நமது நாட்டில் சென்ற 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இந்தியப் பெண்கள் உதவிப் படை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர். அதில், பெண்கள் சேரவேண்டியது அவசியம். நமது நாட்டின் சிறந்த தாய்மாரின் வீரச் செயல்களைப் பற்றி படித்துப் பாருங்கள். பெண்கள் தரைப் படை, கப்பல் படை, விமானப் படையிலும் சேரலாம். வைத்திய வேலையிலும் தொழிற் சாலைகளிலும், சேர்ந்து வேலை செய்யலாம். செஞ்சிலுவைப் படையில் சேர்ந்து, தையல் வேலை, பின்னல் வேலை உணவுப் பொருள் சேமிப்பு முதலிய வேலைகள் செய்யலாம். பணம் திரட்டி யுத்த நிதிக்கு அனுப்பலாம். நேசக் கட்சியின் ஜெயத்தைப் பற்றி பிரசாரம் செய்யலாம். நம் பெண்களால் செய்ய முடியாத வேலையே கிடையாது. ஒழிந்த நேரங்களில் பெண்கள் கும்பல் கூடி பாட்டிக் கதைகள் பேசி நேரத்தை வீணாக்குதல் கூடாது. ஒழிந்த நேரங்களில் படித்த பெண்கள் மற்ற பெண்களுக்கு, யுத்தப் பத்திரிகைகளைப் படித்து காட்டவும், யுத்த சமாச்சாரத்தைப் பற்றி சொல்லவும் வேண்டும். பொய் வதந்திகளை நம்பக் கூடாது. ஐந்தாம் படையினர் வார்த்தைகளுக்கு செவி சாய்த்தல் கூடாது. வீணாகப் பணத்தை சேர்த்து செல்லரிக்க விடுவதும், சேர்த்த பணத்திற்கு, பின்னால் என்ன நேருமோ என்ற கவலையுடன் காவல் காப்பதையும் விட்டு விட்டு, பயமில்லாமலும், யுத்தத்திற்குப் பிறகு சேர்ந்த பணத்தில் குறையாமலும் இருப்பதற்கு, 'டிபென்ஸ் பாண்டு'களையும், 'டிபென்ஸ் சர்டிபிகேட்டு'களையும் வாங்குங்கள். இறுதியில் ஜெயம் நம்முடைய நேசக் கக்ஷிக்குத் தான். யுத்தம் முடிந்து, க்ரேட் பிரிட்டன் ஜெயித்து, ஜெயக் கொடி பறக்கும்போது, ஜெயத்திற்கு காரணஸ்தர்களில் இந்தியப் பெண்கள் முன்னணியில் இருக்க வேண்டும்.

வெற்றி ஆண்டு 1944!

(வெற்றி வெற்றி தமிழருக்கு வீரத்தமிழ் நாட்டிலே என்ற சந்தம் மாதிரி)

1 புத்தப்புது வருடமென்ற புதுமலரே பூத்தது!
புவனத்திலே நல்லொளியாய் புனிதத்ரங்
கொடுக்குது! (பு)

2 சுத்தச்சூர இகழ்களிலே சுகந்த காந்தம் வீசுது!
சுதந்தரத்தேன் சொட்டச்சொட்ட சோதியாய்
விளங்குது! (பு)

3 வெற்றியென்று முரசடித்து வீரத்தோளே தட்டுவோம்
வெற்றிச்சங்க மூதிகொண்டு வீரக்கொடி
நாட்டுவோம் (பு)

4 குற்றநெஞ்சக் குண்டர்கள் குலைநடுங்கி யோடவே
குவலயத்தில் சோதரத்வ குடிசைத்தொழி
லோங்கவே (பு)

5 ஜெர்மன் டாங்கு டார்பிடோக்கள் ஜம்பப்பேச்சு வீழ்கவே!
ஜபபான்போட்ட திட்டமெல்லாம் சட்னியாகிச் சாகவே! (பு)

6 வர்மவாதமிட்டவர்கள் வாய்வரண்டு தீயவே!
வற்றுவெற்றி யாண்டிதிலே ஓங்கிநாமும் வாழவே (பு)

யுத்தமும் தொழிலாளரும்

(மிஸ்டர் ஜி. செல்வபதி செட்டியார், எம்.எல்.ஏ.)

மிஸ்டர் ஜி. செல்வபதி செட்டியார், எம். எல். ஏ.

யுத்தம் தொடங்கி நான்கு ஆண்டுகள் முடிந்து ஐந்தாவது ஆண்டு நடந்து வருகிறது. சென்ற மகா யுத்தத்தைவிட, இந்த யுத்தம் நீடித்துச் செல்லுகிறது. யுத்தம் எப்போது தான் முடியும் என்பதைப் பற்றி யாரும் திட்டமாகச் சொல்ல முடியாது. இனிமேல் தான் யுத்தத்தின் மிகக் கடுமையான பாகம் தொடங்கப் போகிறது. நேச நாடுகளின் பிரம்மாண்டமான தாக்குதல்கள் ஆரம்பிக்கப் போகின்றன. ஜெர்மனி போரைத் துவக்கியது. பிரான்ஸ் கஷ்ட நிலைமையில் இருக்கும்போது இத்தாலி ஜெர்மனியுடன் சேர்ந்தது. பின்னர் ஜெர்மனி ரஷ்யா மீது படை எடுத்தது. 1941-ம் ஆண்டு இறுதியில் ஜப்பான் பிரிட்டன் மீதும், அமெரிக்கா மீதும் போர் ஆரம்பித்தது. அச்சு நாடுகளில் ஒன்றுகிய இத்தாலி சரண் புகுந்தது. இன்றைத் தினம் ஜெர்மனியும், ஜப்பானும் ஒரு புறமும், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, சைனு முதலிய பல நேச நாடுகள் மற்றொரு புறமுமாக இருந்து போர்செய்து வருகின்றன.

யுத்தத்தின் இன்றைய நிலைமை என்ன ?

யுத்தத்தின் இன்றைய நிலை என்ன ? ரஷ்யாவைச் சூறையாடிய ஜெர்மானியர், ரஷ்யாவிலிருந்து வெகு விரைவாகத் துரத்தப்பட்டு வருகின்றனர். ஸ்டாலின்கிராட் போராட்டம் முதற்கொண்டு, ஜெர்மனியின் உரம் தளர்ந்து விட்டது. ஜெர்மானியப் படைகள் பல இடங்களில் சிதைந்து, குலைந்து, ரஷ்யர்களிடம் சிக்கி, கைதிகளாக்கப் பட்டுள்ளனர். ரஷ்ய சைன்யத்தின் அபாரமான எதிர்ப்பு, ஜெர்மனியின் மனக்கோட்டையைத் தகர்த்து விட்டது. ஆப்பிரிக்காவிலுள்ள அச்சு தேசப் படைகளெல்லாம் வெளியேற்றப்பட்டு ஆப்பிரிக்கா முழுவதும் நேச தேச ஸ்தலமாகி விட்டது. ஐரோப்பாவில் சிஸிலியைக் கைப்பற்றி, இத்தாலியில் நேச தேசப் படைகள் முன்னேறி வருகின்றன. நேச தேசங்கள் இனி வெற்றி அடைவோம் என்ற திடநம்பிக்கையுடன், யுத்தத்திற்குப் பிறகு, உலகைத் திருத்தி அமைப்பது எவ்வாறு என்ற திட்டங்களை வகுத்து வருகின்றன. நேச தேங்கள் நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லுவதற்கு, முக்கியமான காரணஸ்தர்கள் யார் ? தொழிலாளர்கள் என்று சொல்லுவது மிகையாகாது.

தொழிலாளர்களின் பொறுப்பு

ஆதலால், தொழிலாளர்களுக்கும், இந்த யுத்தத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பதைச் சிறிது ஆராய்வோம். இந்த யுத்தம் பழைய யுத்தங்களினின்றும் பெரிதும் மாறுபட்டது. பழைய யுத்தங்களில், சில குறிப்பிட்ட இடங்களில் எதிர்த்து நிற்கும் சைன்யங்கள், சண்டையிட்டு, கடைசியாக எந்த சைன்யம் வெற்றி பெறுகின்றதோ, அந்தக் கட்சியோ, நாடோ வெற்றி உற்றதாகக் கருதப்படும். இந்த யுத்தத்திலோ, உலக முழுதும், காடுகளிலும், நகரங்களிலும், சமுத்திரங்களிலும், ஆகாயத்திலும், யாண்டும் போர். பழைய யுத்தங்களில் வெறும் சைன்யங்கள் மட்டுமே போரில் கலந்து கொள்ளும். ஆனால், இந்த யுத்தத்திலோ, சாதாரண மக்கள், பெண்கள், குழந்தைகள் ஈறுக எல்லோரும் போரினால் பாதிக்கப்படுகின்றனர். பல்வேறு அரங்கங்களில் யுத்தம் நடைபெறுவதற்கு வேண்டிய சாதனங்களைத் தயாரிப்பது, தொழிலாளர்களின் பொறுப்பாக இருக்கிறது.

ஆகாய விமானங்கள், கப்பல்கள், டாங்கிகள், பீரங்கிகள், துப்பாக்கிகள், குண்டுகள் முதலிய பல யுத்தக் கருவிகளைத் தொழிலாளர்கள் ஓயாமல் செய்ய வேண்டி யிருக்கிறது. புத்தம் புதிதாக கண்டு பிடிக்கப்படும் யுத்தக் கருவிகளை, அளவின்றிச செய்து நிரப்ப வேண்டியதும் தொழிலாளர் கடமையாக உள்ளது. எதிரி தாக்குதலினுல் அழிந்து பட்ட யுத்த சாதனங்களுக்குப் பதிலாக வேறு செய்வதும், பயனற்றனவாய் விட்ட பலவற்றைப் புதுப்பித்து பயன்படும்படி செய்ய வேண்டியதும், தொழிலாளர் பொறுப்பே. சைன்யங்களுக்கு வேண்டிய யுத்தக் கருவிகள் மட்டுமன்றி, உணவு, உடை மற்றும் எல்லாச் சௌகரியங்களும் தொழிலாளர்களே செய்து தருகின்றனர். கரடுமுரடான காடுகளி லெல்லாம், சைன்யங்கள் செல்லுவதற்கான பாதைகளைப் பண்படுத்தித் தருகின்றார்கள். எதிரிகளின் நாச வேலைகளைத் தடுப்பதற்காக உள்ள பாதுகாப்பு விடுதிகள் முதலிய பல சாதனங்களையும் ஏற்படுத்தி வருகிருர்கள். இஃதன்றிப் பொது மக்களுக்கு வேண்டிய உணவு, உடை முதலிய மற்ற சௌகரியங்களையும் தயார் செய்து தருகிருர்கள். ஆக, யுத்தத்தின் சுமையின் பெரும் பகுதியைத் தொழிலாளர்களே தாங்கி வருகின்றனர்.

அச்சு நாட்டு தொழிலாளரும், நேச நாட்டுத் தொழிலாளரும்

பகல், இரவு என்ற வித்தியாச மின்றி, தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். சில சமயங்களில் ஓய்வுகூட இல்லாமல் உழைக்கின்றனர். இவ்வாறு உழைக்கும் தொழிலாளர் இரு கட்சிகளிலும் உள்ளனர். ஆனுல், வற்புறுத்துதலின் பேரில், வேறு வழியின்றி, மனக் கசப்போடும், கஷ்டத்தோடும் அச்சு நாட்டுத் தொழிலாளர் யந்திரங்களில் யந்திரங்களைப் போல உழைக்கின்றனர். நேச நாடுகளிலோ எனில், தொழிலியக்கம் வெற்றி பெறவேண்டும்; தொழிலியக்கத்தின் எதிரிகளாகிய அச்சு நாட்டு சர்வாதிகாரிகள் தலைதூக்கக் கூடாது என்ற உறுதியோடும் உற்சாகத்தோடும் தளரா ஊக்கத்தோடும் தொழிலாளர் தொண்டாற்றுகின்றனர். விடுதலையின்றி, வெறும் அடிமைகளைப் போல உழைத்து வரும் அச்சு நாடடுத் தொழிலாளரும், விடுதலை அடைந்து தொழிலியக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு தொழிலியக்க விரோதிகளாகிய சர்வாதிகாரிகள் ஒருபோதும் தலை எடுக்காமல் செய்யக் கூடிய வெற்றிக்காக, தொழில் தோழர்கள் பணி செய்கின்றனர்.

பாசிஸ்ட்-தொழிலாளர் போரின் பழமை

இத்தகைய பெரும் பணியைத் தொழிலாளர் ஏற்று உவகையோடு உழைப்பதன் காரணம் என்ன ? ஜெர்மனி, ஜப்பான் போன்ற அச்சு நாடுகளில் தொழிலாளர்கள் தங்கள் அடிப்படையான உரிமைகளை இழந்து சர்வாதிகாரிகளின் ஆணைகளுக்கு அடங்கி, வெறும் ஆடு மாடுகளைப் போல உழைத்து வருகின்றனர். ஆனுல் அத்தொழிலாளர்கள் தாங்களாக அந்நிலையை ஏற்றுக் கொள்ளவில்லை. நாஜி, பாஸிஸ்ட் கட்சியினர் அரசாங்கத்தைக் கைப்பற்றி, தொழிலாளர்களை எதிர்த்து, அடக்கி, அவர்கள் சங்கங்களைத் தகர்த்து, அந்நாடுகளில் அவர்களை வெறும் ஊமைகளாக ஆக்கிவிட்டனர். இத்தகைய பாஸிஸ்ட் கொள்கைகளைத் தான், சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் தீவிரமாக எதிர்த்து வந்துள்ளது. பிரிட்டன் போரில் இறங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, தொழிலியக்கம் பாஸிஸ்ட் கட்சியின்மீது போர் தொடங்கியது. ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுக் கலகத்தில், குடியரசுக் கட்சியினிடம் தொழிலாளர் தங்கள் அனுதாபத்தைக் காட்டினர். செக்கோசிலோவேக்கியா மீது ஜெர்மனி பாய்ந்தபோது, தொழிலியக்கம் ஜெர்மனியைக் கண்டித்து, செக்கோசிலோவேக்கியாவின் ஆபத்தைத் தீர்க்குமாறு பிரிட்டனைக் கூவி அழைத்தது. பிரிட்டன் போரில் இறங்கியவுடன், தொழிலியக்கம் பலவிதக் கஷ்டங்களுக்கிடையே, யுத்தத்தை முழு மனதுடன் ஆதரித்ததோடு அமையாது, தொழிலாளர்களை, யுத்தம் வெற்றிகரமாக முடிவதற்கு எவ்வளவு உழைப்பு வேண்டுமோ, அவ்வளவையும் வழங்குமாறு பணித்தது.

போர் வீரர் தியாகமும்—தொழிலாளர் தியாகமும்

மேலும், இந்த யுத்தத்தின் வெற்றியைக் காணும் தொழிலாளர், யுத்தத்திற்கு முன்னிருந்த நிலையி லிருக்கப் போவதில்லை என்பது அவர்களுடைய திடமான நம்பிக்கை. தங்களது நிலை பெரிதும் உயர்ந்து அரசாங்கத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டு தங்களுக்கு இன்றியமையாதனவாக உள்ள சௌகரியங்களைச் செய்து கொள்ள இயலும் என்பது அவர்கள் துணிபு. அதனுல் தான், குண்டு வீச்சுகளுக்கிடையே, உரம் குன்றுது தொழிற்சாலைகளிலேயே இருந்து, வீரர்களாய், உயிருக்குத் துணிந்து வேலை செய்கிருர்கள். விலை வாசிகள் உயர்ந்து உயர்ந்து பறக்கும்போது கூட, உணவுப் பொருள்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காத சில சமயங்களில் கூட, முதலாளிகளில் சிலர், அற்ப மனதுடன் இழைக்கும் இன்னல்களையும் பொருட் படுத்தாது, இரவில் வேலை செய்வதனுல் தங்களது உடல் நிலை பாதிக்கப்படுவதையும் கருதாது, அச்சு நாடுகளின் தோல்வியைத் துரிதப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிருர்கள். ஆகையால், போர் வீரர்களின் தியாகத்திற்குத் தொழிலாளர்களின் தியாக உழைப்பு ஒரு சிறிதும் பின்வாங்கியதல்ல.

தொழிலாளர் இயக்கம் வளர வேண்டும்

அரசாங்கத்தினரும், முதலாளிகளும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. பல்வேறு யுத்த வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் யுத்தம் முடிந்த உடன், வேலையற்றவர்களாக ஆய்விடுவார்கள். போர் வீரர்கள் யுத்தம் முடிந்து நாடு திரும்பும்போது, அவர்களுக்கு வேறு வேலைகளை அளிப்பதற்காகத் திட்டங்கள் தயாரித்து வருவதே போன்று, யுத்தம் முடிவு காரணமாக வேலையில்லாமல் போகும் தொழிலாளர்களுக்கும் வேறு வேலைகளை அளித்து அவர்கள் வாழ்வதற்கான ஏற்பாடுகளை இப்பொழுதிருந்தே துரிதமாகச் செய்ய வேண்டும். யுத்தத்திற்குப் பின்னர் வேலை செய்ய சக்தி இருந்தும், வேலை கிடைக்காமல் தொழிலாளியும், அவனது குடும்பமும் கஷ்டப்படும் நிலைமை மாற வேண்டும். சக்தி உள்ளவரை உழைத்து வயோதிகனுய் வேலைக்குத் தகுதியற்றவனுக ஆகும்போது, தொழிலாளிக்கு அரசாங்க உதவி அவசியமாக ஏற்படவேண்டும். இம்மாதிரி தொழிலாளர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பீவரிட்ஜ் அறிக்கை போன்று, இந்தியாவிலும் திட்டம் தயாரித்து, யுத்தம் முடிந்தவுடன் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். யுத்தத்திற்குப் பின்னர் மீண்டும் பாஸிஸ்ட் கொள்கைகள் தலை எடுக்காமல் இருக்க வேண்டுமானுல், பலமான தொழிலியக்கம் ஒன்று இருந்தால் தான் இயலும். ஆகையால், அரசாங்கத்தினரும், முதலாளிகளும் தொழிலியக்கத்தை வளர்த்து பலப்படுத்த வேண்டியது அவசியம்.

பங்கீடு முறை

(திருமதி குஞ்சிதம் அம்மையார், பி.ஏ., எல்.டி.)

[அரிசிப் பங்கீடு முறை சென்னை நகரத்தில் அமுலுக்கு வருவதற்கு முந்தி அரிசிக் கடைக் கெதிரில் நடந்த காட்சிகளில் இரண்டு கீழே தருகிறேன்.]

பன்னுடை.—அட சனியனே! தினசரி இதே பொழப்பாப் போச்சு! சண்டெயிலேயாவது சேர்ந்து தொலசேனு? நல்ல சம்பளம், நல்ல சாப்பாடு, ஷோக்கான ட்ரஸ், ராஜா மாதிரி இருக்கலாம். சண்டையிலே சேந்தா ரெண்டுலே ஒண்ணு. இந்த மாதிரி தெனம் அரிசிக்குச் சண்டெ, வெறவுக்குச் சண்டே! இந்தச் சனியன் பிடிச்ச வேலே எத்தனை நாளைக்குத் தான் முடியும்? அடெ இதென்ன! இந்த ஆளு........?

(சற்றுத் தூரத்தில் மண்ணுங்கட்டி கையில் ஒரு கோணியுடன் பஸ்கியெடுத்துக் கொண்டும் கையையும் காலையும் உதறிவிட்டுக் கொண்டும் தண்டால் எடுத்துக் கொண்டும் இருக்கிறுன்.)

அடெ! நம்ப மண்ணுங்கட்டி தான். இதென்னடா மண்ணுங்கட்டி?

மண்ணுங்கட்டி.—அடெ, பன்னுடை என்னடா? என்னடா மொறைக்கிறே! என்னைப் பார்த்தா ஒனக்குப் பயமாயிருக்கா? ஒண்ணுமில்லெ. அரிசி வாங்கப் போரேண்டா. இந்த சோதாக் கூட்டத்தை ஒரு கை பார்க்கிறேன் இப்போ பாரு.

பன்னுடை.—டேய்! இந்தா! என்னு, அடிச்சுப் பிடிச்சுக்கினு வாங்கப்போறே? வேண்டாமுடா, பாவம்! நம்பளைப் போலெ ஏளெங்க தாண்டா வாங்குதுங்கோ, அதோ, அந்தப் பொம்புளெ இப்பத்தாண்டா சொன்னு, ரெண்டு நாளாச்சு சாப்புட்டுன்னு! அதுவள்ளாம் வாங்கி இட்டுப் போவட்டு முடா. நம்பளுக்குக் கொஞ்சம் அரிசி கிடைக்காமலா போகப் போவுது?

மண்ணுங்கட்டி.—டேய், இந்த நாயமெல்லாம் பேசாதே. "ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு—நீ அரிசி வாங்கிச் சாவு", ண்ணு எம்பொஞ்சாதி சொல்லி யனுப்பியிருக்கா, சும்மா போனேண்ணு என்பல்லு ஆட்டங்கண்டு போயிடும்.

* * * * *

சர்மா.—(கையில் கோணிப் பையுடன்) என்ன நாயுடு காரு! இன்றைக்கு ஆபீசுக்கு மட்டம் போட்டேட்டயளோ? மணி 12 ஆறதே.

நாயுடு.—(ஒரு கையில் கோணிப்பை; மற்றொரு கையில் ஆபீஸ் பைல்) அடெ, சர்மாவா? ஆபீசுக்கு டயம் ஆகலேயோ? லேட் பர்மிஷன் போட்டிருக்கிருயா?

சர்மா.—இல்லே ஸார்; நேற்று லேட் பர்மிஷன் போட்டேன். அரிசிக்காகக் கோணியைத் தூக்கிண்டு கடெ கடெயா அலெஞ்சேன். கூட்டத்திலெ உள்ளெ போகவே முடியலே. ஷர்ட் பாக்கெட் கிழிஞ்சது தான் மிச்சம். தேவ மேன்னு கோணியையும் தூக்கீண்டு ஆபீசுக்குப் போய்ச் சேர்ந்தேன். இன்னிக்கு காஷுவல் லீவே போட்டுட்டேன்.

நாயுடு.—ஓஹோ! அப்படிச் சொல்லு. அது தான் நேற்று 3 மணிக்கு வந்து மானேஜருக் கிட்டெ பல்லேக் காட்டிகினு நிண்ணுகிட்டு இருந்தியோ! என் சங்கதி கேட்டியோ? நேற்று காஷுவல் லீவ் போட்டேன். அரிசிக்காகக் கோணியை எடுத்துகிட்டு கடெத்தெரு வெல்லாஞ் சுத்துனேன். கடைசியா சொஸைட்டிக்குப் போனேன், ஒரே கூட்டமாயிருந்தது. நெருக்கிக் கிட்டுப் பாதித்தூரம் உள்ளே போய்ட்டேன். எனக்கு முன்னுலே 20–30 பேர் ஆள் மேலே ஆள் எறி இடுச்சிக்கிட்டு இருந்தானுக. எனக்குப் பின்னுலே 50-60 பேர் இருக்கும். அந்தச் சமயத்திலே "அரிசி ஆய்ப்போச்சு; இனிமேல் நாளைக்குத் தான்", என்று சொஸைட்டிக்காரன் சொன்னுன். மணியைப் பார்த்தேன். 5½ ஆயுட்டுது. (அட சனியனே) ஒரு நாள் லீவு பாழாப் போச்சேண்ணு முணுமுணுத்துகிட்டு வெளியே வந்தேன். கோட் பாக்கொட்டில் கையை வைத்தேன். 20 ரூபாய் வைத்திருந்த மணி பர்ஸைக் காணும்! ரெண்டாம் பேருக்குச் சொல்லாமலே வீட்டுக்குப் போய்த் தொலேஞ்சேன். இன்னிக்கு லேட் பர்மிஷன் போட்டிருக்கேன. மணியோ 12½ ஆகப்போகுது. சீட்டுக் குடுக்கிறவனையுங் காணும்; அரிசி அளக்கிறவனையுங் காணும். கூட்டமோ இப்படி யிருக்கு.

சர்மா.—மிஸ்டர் நாயுடு, இருங்கோ! அதென்ன, போர்டு மாட்ருனே! (போர்டைப் படிக்கிருர்) "இன்றைக்கு அரிசி ஸ்டாக் இல்லே."

* * * * *

அரிசி விஷயத்தில் இந்த நிலைமை அடியோடு மாறிவிட்டது சென்னையில். பங்கீடு முறை வந்த பிறகு இப்போது அரிசிக் கடையில் 5 பேருக்கு மேல் கூட்டத்தைப் பார்க்க முடியாது. அரிசிப் பங்கீடு முறை வெளி ஜில்லாக்களில் சிற்சில நகரங்களில் அமுலுக்கு வந்து விட்டது. சீக்கிரம் இன்னும் சில நகரங்களில் அமுலுக்கு வரப்போகிறது. கூடிய சீக்கிரம் பெரிய கிராமங்களுக்கும் இம்முறை வந்து விடலாம். இறுதியில் எல்லாக் கிராமங்களுக்குமே வந்தாலும் வரலாம். பங்கீடு முறை வருவதற்கு முந்தி, சென்னை வாசிகள் பற்பல வதந்திகளைக் கேட்டு அஞ்சியிருந்தனர். ஆனல் இப்போது எப்படி? விறகு, பால், காய்கறி முதலிய எல்லாப் பொருள்களுக்குமே இந்த முறையை எற்படுத்தக் கூடாதா, என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனல் வெளியூர் வாசிகள் பங்கீடு முறையைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்பதைப் பற்றி ஒருவாறு யூகிக்கலாம்.

உணவைப் பங்கிட்டுக் கொடுத்தால், அதாவது ration செய்தால், அரைவயிற்றுக்குக் கூடக் கிடைக்காது என்று நினைப்பது தவறு. பங்கிட்டுக் கொடுப்பதன் மூலம், பெரிய பணக்காரர்களும், வியாபாரிகளும், அதிகாரிகளும், ஓட்டல் காரர்களும் அவர்களுடைய தேவைக்கு மேல் உணவுப் பொருள்களைச் சேமித்துப் பதுக்கி வைத்துக் கொள்ள முடியாது. ஏழைகளுக்கும் நடுத்தர மக்களுக்கும் தேவையான—ஏன்?—தேவைக்குச் சற்று அதிகமான, உணவுப் பொருள் கிடைக்கும். இதனுல் எவருக்கும் எவ்விதமான கஷ்டமும் ஏற்படாது.

நம்முடைய உற்றுர் உறவினரும் நண்பர்களும் லட்சக் கணக்கில் போர் முனையில், தம் உயிரைத் துச்சமா யெண்ணிப் போர் புரிகிருர்களே! இன்னமும் போர் புரியப் போகிருர்களே! இவர்களுக்காகவாவது நாம் ஏதேனும் ஒரு சிறு தியாகமாவது செய்ய வேண்டாமா? உணவுப் பங்கீட்டில் தியாகங் கூட இல்லையே! இங்கிலாந்தை நினைத்துப் பார்த்தாலல்லவா, நாம் எவ்வளவு போக போக்கியமான வாழ்க்கை வாழ்கிருேம் என்பது தெரியும்?

திருமதி குஞ்சிதம் அம்மையார், பி.ஏ., எல்.டி.

இங்கிலாந்தில் போருக்கு முன்பு கொடுக்கப்பட்ட சர்க்கரையில் பாதிக்குக் குறைவாகத் தான் இப்போது கொடுக்கப்படுகிறது. போருக்கு முன்பு 33,000 டன் 'க்ரீம்' உற்பத்தி செய்தார்கள். இப்போது 'க்ரீம்' உற்பத்தியே கிடையாது, போருக்கு முன்பு 15 கோழி முட்டைகள் பெற்றவர்கள் இப்போது 3 முட்டைகளோடு திருப்தி யடைகிருர்கள். போருக்கு முன்பு 2,25,000,000 சீப்பு வாழைப் பழம் இறக்குமதி செய்த இங்கிலாந்தில் இப்போது ஒரு பழம் மாதிரிக்குக் கூடக் கிடையாது. திராட்சைப் பழம் ஆரஞ்சுப் பழம் முதலியவை கனவு கண்டது மாதிரி யிருக்கிறது. உணவுப் பொருள்கள் மட்டிலுமா இக்கட்டுப் பாடும் சிக்கனமும்?

உடையிலுங் கூட. ஷர்ட், கோட், கால் சட்டை இவைகளின் அளவுகளைக் குறைத்து விட்டார்கள். தேவையற்ற பொத்தான்கள் ஒன்று கூட இல்லை. மணிகள், லேஸ் முதலிய அழகுப் பொருள்கள் சொக்காய்களில் வைத்துத் தைக்கப்படுவதில்லை.

சொந்த மோட்டார்கார்களில் போய்க் கொண்டிருந்த சீமான்கள் பஸ்களில் ஏறுவதற்காக வரிசையாக நின்று கொண்டிருக்கின்றனர். வீட்டு வேலையே செய்தறியாத செல்வப் பெண்களோ, தங்களது வேலைக்காரிகள் போர் வேலைகளுக்குப் போய் விட்டபடியால், தாங்களே சமயல் செய்கிருர்கள்; பாத்திரம் கழுவுகிருர்கள்; வீட்டைச் சுத்தஞ் செய்கிருர்கள்.

இம்மாதிரியான சிக்கனங்களுக்கும் சிறு தியாகங்களுக்கும் தயாராயிருக்க வேண்டிய நாம், வெறும் பங்கீடு முறையைக் கண்டு பயப்படுவதோ, முணுமுணுப்பதோ, அதிசயப்படுவதோ, புகார் செய்வதோ, சரியல்ல; நியாயமல்ல; வீரமல்ல.

பாவையர் சேவையைப் பாராட்டுதல்

(திருவருள் தரவின்னும் மனமில்லையானல் என்ற சந்தம்)

பெண்களின் வீரம் நம்மால்—பேசமுடியாதிப்போ
பீரங்கி சுடுவார் புகைவண்டி விடுவார் (பெ)

மோட்டார் லாரிகளை ஒட்டிச்செல்வதிலும்
சாற்றுங் கம்பியில்லாத் தந்தி சொல்வதிலும் (பெ)

டைப்படிக்கும் வேலை டெலிபோன் வேலை
தேகம் காயம்பட்டோர்க்கு சிகிச்சை வேலையிலும் (பெ)

டாக்டர் வேலை தொழிற்சாலை வேலைகளும்
தாக்கும் போர்வேலையும் தைர்யமாய்ச் செய்வார் (பெ)

ஆண்கள் கப்பலிற்செல்வர் பெண்கள் பயிர்செய்வார்
தூண்டும்போரில் குண்டுகள் சுடுநெருப்பையணைப்பார் (பெ)

வேண்டும்போர் ஆயுதங்கள் மேன்மையாய் அமைப்பார்
தாண்டும் விமானப்போரும் சாதுரியமாகச் செயவார் (பெ)

ஏ.ஆர்.பி. படைகளில் எத்தனையோ பெண்கள்
ஓயாமலுழைத்திங்கே உயர்வடைகின்றுர்கள் (பெ)

ஜப்பானியக் கொடுங்கோல்

1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் 22-ந் தேதி திருச்சி வானொலி நிலயத்திலிருந்து, தேசீயப் போர் முனையின் கௌரவ அமைப்பாளரும், கௌரவ உத்வி டெக்னிக்கல் ரிக்ருட்டிங் ஆபீசருமான, கம்பம், கான் சாகிப் என். கே. பி. பி. ராவுத்தர் அவர்கள், ஒலி பெருக்கிய சொற்பொழிவு.

அரக்கர்கள் அசுரர்கள் என்னும் தீக்குணம் படைத்தவர்கள் முற்காலத்தில் மானிட வர்க்கத்தினருக்கு இழைத்த கொடுமைகளைப் பற்றி, நமது நாட்டுப் பண்டைய புராணங்கள் எடுத்துக் கூறும் போது நாம் எவ்விதமான பயத்தில் ஆழ்கின்றோம். நாம் அக்கோர சம்பவங்களைப் பார்த்ததே கிடையாது. ஆனால் அக்காலத்து அசுரர்களைக் காட்டிலும் பொல்லாதவர்கள் என்று நிருபித்துக் காட்டும் ஜப்பானியர், தற்காலிகமாக ஜயிக்கப்பட்ட நாடுகளிலுள்ள மக்களுக்கு விளைவித்து வரும் இன்னல்களை நினைக்கும் போது, மயிர்க் கால்கள் சிலிர்க்கின்றன. கோரக் காட்சிகளைக் கேட்டால் இருதயமே துடிக்கின்றது. ஜப்பானியர் அரக்கர்களைக் காட்டிலும் மூர்க்கர்க ளென்றே சொல்லலாம். ஜப்பானியருடைய தோற்றமே யாரையும் பயப்படுத்துகின்றது. நீண்ட கோரப் பற்களும், தடித்துப் பெருத்த உதடுகளும், சப்பட்டை மூக்குகளும், உப்பிய கன்னங்களும் முற்காலத்து அசுரர்களின் பிதுர் வழிகளெனவே ஞாபக மூட்டுகிறது.

19-ம் நூற்றுண்டில் ஜப்பான் நிலை

19-வது நூற்றுண்டில் இருக்கிற இடமே தெரியாமல் அநாகரிகத்தில் ஆழ்ந்து தத்தளித்துக் கொண்டிருந்த ஜப்பான், இப்பொழுது நானும் ஒரு வல்லரசு என்று மார் தட்டிக் கொண்டு, எவ்விதத்திலும் ஓர் அகண்ட சாம்ராஜ்யத்தைக் கிழக்கு ஆசியாவில் ஸ்தாபிக்க வேண்டு மென்கிற பேராசை கொண்டு யுத்தத்தில் புகுந்திருக்கிறது.

ஜப்பான் பஸிபிக் மகா சமுத்திரத்தில் திட்டுப் போன்ற ஓர் சிறிய தேசம். புற்றீசல் இளம்பிய மாதிரி, ஜனத் தொகையோ நாளுக்கு நாள் அதிகரிக்க, அங்குள்ள ஜனங்களுக்கு வசிப்பதற்குப் போதுமான இடமும், உண்பதற்குப் போதுமான உணவுப் பொருள்களும் கிடையாததால், எந்த விதத்திலும் ஆக்கிரமிப்புச் செய்தாவது பூமி பிடிக்க வேண்டு மென்ற ஆசை யுண்டானது ஜப்பானியருக்கு. சுண்டைக் காயில் காலும் தலையும் முளைத்தது மாதிரி, ஜப்பானுக்கு அதிகாரமும் தோரணையும் தானகவே கிளம்பி விட்டது. யாரைத் தாக்கலாம் என்று யோசித்தது. யாதொரு கபடமுமின்றி நிம்மதியாக வாழ்ந்து வந்த சீன தேசத்தின் ஒரு முக்கிய பாகத்தை விழுங்க வேண்டு மென்கிற எண்ணங் கொண்டு வம்புச் சண்டையை இழுத்தது. கடந்த 7, 8 வருடங்களாக இரண்டு தேசங்களுக்கும் கடும் போர் மூண்டு கொண்டிருக்கிறது. அதன் பயனாகப் பல்லாயிரக் கணக்கான சீன மக்கள் மாண்டனர். ஜப்பானியப் பேராசைத் திமிர் தான் இதற்குக் காரணம். ஆனால் கருங்கல்லைக் கடிக்க முயன்றவன் கதி எப்படியோ, அப்படித் தான் சீனாவைக் கபளீகரம் செய்ய முயலுகின்ற ஜப்பானின் கதியும்.

ஜப்பானின் பாய்ச்சல்

ஜெர்மானியர் ரஷ்யா மீது படையெடுத்து ரஷ்யரை விரட்டிக் கொண்டிருக்கும் போது, பிரான்ஸ் தேசம் சூட்சியால் வீழ்த்தப்பட்ட சமயம், பிரிட்டன் தன்னந் தனிமையாய் எதிரிகளுடன் போர் புரிந்து கொண்டிருக்கும் போது, கிடா இடைஞ்சலில் புல் தின்று விடலாம் என்பது போல, கிழக்கு ஆசியா பூரா நம்முடையது தான் என்றெண்ணி ஜப்பானியர் நேச நாடுகளுக்கு விரோதமாய் யுத்தத்தில் இறங்கி விட்டார்கள். மின்வெட்டு மாதிரி பஸிபிக் தீவுகளைக் கைப்பற்றியவுடனே, ஜப்பானியரின் திக் கண்ணுனது, பர்மா, மலேயா, இந்தியா முதலிய தேசங்களின் மீது பாய்ந்தது. நீர்வளம் நிலவளம், மலைவளம் எல்லாவற்றிலும் சிறப்புற்றது பர்மா தேசம். செல்வம் கொளிக்கும் தேசம். பல நதிகள் பாய்வதால் விளைச்சல் நிலம் ஏராளம். எண்ணைக் கிணறுகளும் ரப்பர் தோட்டங்களும் ஏராளமா யிருக்கின்றன. இவ்விரண்டு நாடுகளையும் குபேர நாடெனவே சொல்லலாம். இப்பேர்ப்பட்ட தேசங்களின் மீது யாருக்குத் தான் ஆசை ஏற்படாது. வற்றி வரண்டு எங்கு போய்ப் பூமி பிடிப்போம் என்று கிடக்கும் ஜப்பானியருக்கு, நாவில் எச்சில் ஊறுவதற்கு யாரையும் கேட்க வேண்டுமோ ?

பர்மா வீழ்ந்தது ஏன் ?

சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்த ஜப்பான், பிரிட்டன் தன் முக்கிய எதிரியாகிய ஜெர்மனியுடன் தன் முழு பலத்தையும் கவனத்தையும் பிரயோகித்துக் கொண்டு, ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் போர் நடத்திக் கொண்டிருக்கும் சமயம், யாதொரு எதிர்ப்பும் தற்காப்புமில்லாத பர்மா, மலேயா தேசங்களின் மீது படை யெடுத்தது. படை யெடுப்பிற்கு முன்னர் அந்நாட்டு மக்களுக்குப் பசப்பு வார்த்தைகளையும், சர்க்காருக்கு விரோதமான உணர்ச்சிகளையும் வானொலி மூலம் தினந்தோறும் ஜப்பானியர் அனுப்பிக் கொண்டே யிருந்தனர். பர்மியர் தங்கள் சோதரர்; இந்தியர் ஆசியா தேசத்துவர் என்று புகழ்மாலை சூட்டினர். ஒருவரும் இவைகளை நம்பவில்லை. ஆனால் சில சண்டாளர்கள், தேசத் துரோகிகள், ராஜத் துரோகிகள் ஜப்பானியருக் குடந்தையாக இருந்து, தேசத்தைக் காட்டிக் கொடுத்து விட்டனர். இதன் காரணமாகத் தான் மலேயா பர்மா தேசங்களை ஜப்பானியர் அதி சீக்கிரமாகக் கைப்பற்றிக் கொண்டனர்.

துரோகிகள் அடைந்த ஏமாற்றம்

துரோகிகள் எதிர் பார்த்தபடி, எதுவும் அங்கே சாந்தமாக நடைபெறவில்லை. ஆட்டு மந்தையில் புலி புகுந்து சூறையாடிய மாதிரி, ஜப்பான் விமானங்கள் ஒன்றுமறியாத எண்ணற்ற மக்களை விரட்டி விரட்டித் துடிக்கத் துடிக்கக் கொன்றன. ஆயிரக் கணக்கான மாட மாளிகைகளெல்லாம் தரை மட்டமாக்கப்பட்டன. வனப்பும் அழகும் மிகுந்த பட்டணங்க ளெல்லாம் கழுதை புரண்ட காடு மாதிரி ஆக்கப்பட்டன. இது மட்டுந் தானா? கணக்கற்ற கல்லூரிகளும், கலாசாலைகளும், கோவில்களும், சிறப்புச் சின்னங்களும், மசூதிகளும் பாழாக்கப் பட்டுப் போயின.

மக்கள் பட்ட அவதி

ஜப்பானியர்களின் கொடுமைகளுக் கஞ்சி தப்பி ஓடியவர்களைக் கூடச் சும்மா விடவில்லை. விமானங்களைக் கொண்டு விரட்டி விரட்டிச் சுட்டனர். தாயிழந்த சேய்கள் எத்தனை, சேயிழந்த தாய்களெத்தனை, தாரமிழந்த தன்னியர் எத்தனை, புருஷர்களை யிழந்த புனிதைகள் எத்தனை, முடவர்கள் எத்தனை, குருடர்கள் எத்தனை, கணக்கி லடங்காது. ஐசுவரியங்களையெல்லாம் இழந்து விட்டு, தலை தப்பினால் தம்பிரான் புண்ணிய மென்று, உயிர் தப்பினால் போது மென நினைத்து, பலர் விமானங்கள் மூலமாகவும், கப்பல்கள் மூலமாகவும், கால் நடை மூலமாகவும் இந்தியா வந்து சேர்ந்தனர். கால் நடையாக வந்தவர்கள் அநேக தொல்லைகளை அனுபவிக்க நேர்ந்தது.

போரில் இறங்க, பெரிய பிசாசு உத்திரவு

ஜப்பானியர் 'ஷின்டோயிஸம்' என்னும் பைசாசக் கொள்கையை நம்பியவர்கள். இப்போதுள்ள ஜப்பானியச் சக்கரவர்த்தி 'மிக்கடோ'வின் மூதாதைகள் வானலோகத்தில் அமர்ந்து கொண்டு பூமியிலுள்ள தங்கள் மக்களின் வாழ்க்கைகளை உற்று நோக்கிக் கொண்டே இருப்பதாக, ஜப்பானியரின் மூட நம்பிக்கை ஜப்பானிய மன்னன் மிக்கடோ தன் முற் பிதாக்களடக்கப்பட்ட சமாதிகளுக்குச் சென்று, அந்தப் பெரிய பைசாசங்களுடன் பேசி, அவர்கள் என்ன கட்டளை யிடுகின்றார்களோ அதன்படி செய்து முடிப்பது தான் தங்கள் கடமை என்று நம்புகின்ற மூடர்கள். தாங்கள் தான் உலகத்தில் பெரியவர்களென்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிற பேதையர்கள். பிரிட்டனுடனும், அமெரிக்காவுடனும் யுத்தம் செய்வதற்கு உத்தரவு பிறப்பித்தது, மயானத்தின் தென் மேற்கு மூலையில் புதைக்கப்பட்டிருக்கும் பெரிய மிக்கடோ பைசாசு தான் என்று, இப்போதுள்ள குட்டி மிக்கடோ பைசாசு சொல்லுகிறது. ஜப்பானியர் செய்வதெல்லாம் தெய்வ அம்சமென்றே கருதுகின்றனர். என்ன ஆச்சரியம் பைசாசங்களின் சாமர்த்தியம்.

கால் வைத்த இடமெல்லாம் குட்டிச் சுவர் தான்

ஜப்பானியர் யுத்தத்தி லிறங்கிய கால மிருந்தே, மிருக குணங்களையும் சைத்தான் குணங்களையுமே கையாண்டு வருகின்றனர். கொலை, கொள்ளை, விபசாரம் என்னும் குற்றங்களைச் செய்ய அஞ்சார்கள். 'அகப்பட்டதைச் சுத்துடா ஆண்டியப்பா' என்ற மாதிரி, பிடிபட்ட தேசங்களில் என்ன அகப்பட்டதோ அவைகளனைத்தையும் வாரி வழித்து ஜப்பானுக்குக் கொண்டு போவது தான், அவர்களின் வாடிக்கை. பாவிகள், கால் வைத்த இடமெல்லாம் குட்டிச் சுவர் தான். இப் பைசாசக் கூட்டங்களைக் கண்டால் யார் தான் பயப்பட மாட்டார்கள்.

ஒரு பாவமும் அறியாத சீனாவை வம்புச் சண்டைக் கிழுத்தது ஜப்பான். சீனர்களின் நாட்டிலே ஏகச் சண்டை சச்சரவுகள் இருந்தன; ஆதலால் வெகு எளிதாக சீனா முழுதையும் கைப்பற்றி ஜப்பானிய சாம்ராஜயத்தைப் பரந்து விளங்கும்படி செய்து விடலாம் என்று கனவு கண்டது ஜப்பான். ஆனால் நவீன யுத்தத் தளவாடங்கள் சீனாவில் இல்லாத போதிலும், தேச பக்தியையே ஆயுதமாகக் கொண்டு தைரியமாய்ப் போராடினதினால், ஜப்பானியர் பிடித்த நாடுகளைச் சீனர்கள் திரும்பத் திரும்பக் கைப்பற்றிக் கொண்டு வருகின்றனர், சிதறுண்டு கிடந்த சீனரிடத்தில் பூரண ஐக்கியம் ஏற்பட்டு விட்டது. இனி ஜப்பான் சீனாவைக் கைப்பற்றுவது பகல் கனவு தான், போதாக் குறைக்குச் 'சும்மா படுத்துக் கிடந்த பீமசேனனை ஊசி கொண்டு குத்தி எழுப்பினால், அவன் அதற்கப்புரம் சும்மா இருப்பானோ?' அம்மாதிரி ஜப்பான் கொழுப்பெடுத்து, அமெரிக்கா மீதும் பிரிட்டன் மீதும் வலியச் சண்டை இழுத்தது. இப்போது கம்ஸன் கண்ட கனவு மாதிரி, ஜப்பானுக்கு எங்கு பார்த்தாலும் எதிரிகளாகவே தோன்றுகின்றது. சீனாவுக்கு அதிர்ஷ்டம் பிறந்து விட்டது.

வெற்றிகளால் ஜப்பானியர் கொண்ட இறுமாப்பு

ஜப்பானியருக்குப் பஸிபிக் பிரதேசத்திலே தொடர்ந்தாற் போல் வெற்றிமேல் வெற்றி கிடைத்தவுடனே, அவர்களின் இறுமாப்பிற்கு அளவேயில்லை. கிழக்கு ஆசியா பூராவும் தங்களது தான் என்று பூரணமாக நினைத்து விட்டார்கள், ஜப்பானிய சக்கரவர்த்திக்குச் சந்தோஷம் பொங்கிப் போய்த் தன்னுடைய வெள்ளைக் குதிரை மீது டோக்கியோ வீதிகளின் வழியாக வெற்றி வீரனாகத் தினந் தோறும் பவனியும் வர ஆரம்பித்துவிட்டார். 'ஊர்க் குருவி பருந்தாக முடியுமா' என்ற கதை போல, இப்போது பஸிபிக் தீவுகளை ஒவ்வொன்றாக இழந்து கொண்டு வருகிறது ஜப்பான். இனி மிக்கடோ அரசர் என்ன செய்வாரோ தெரியவில்லை. ஒரு வேளை வெள்ளைக் குதிரைக்கு பதிலாகக் காரிக் கழுதையின் பேரில் ஊர்வலம் வருவதற்குக் காலம் வந்தாலும் வரலாம்.

ஜப்பானியரின் கொடிய போர் முறை

ஜப்பானியர் 1941-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ம் தேதி சீனாவிலுள்ள சாங்டி என்னும் பெரிய வியாபாரப் பட்டணத்தை விமானங்களைக் கொண்டு தாக்கிய போது அவர்கள் செய்த கொடுமை மிகப் பொல்லாதது. விமானங்கள் பட்டணத்தின் மேல் பறந்த போது, வெடிகுண்டுகள் வீசப்படும் என்பதாகப் பயந்து மக்கள் ஓடி ஒளிந்தனர். ஆனால் குண்டுகளுக்குப் பதிலாகத் துணிப் பொட்டலங்கள் வீசப்பட்டன. ஒரு வாரத்திற்குள் பட்டணத்தில் பிளேக் பரவி விட்டது. என்ன கொடுமை! ஜப்பானியர் பிளேக் நோயைப் பரப்பிவிட்ட நூதன முறை. இச்சாங் சண்டையிலும் ஜப்பானியர் விஷப் புகையை உபயோகப் படுத்தினார்கள். அதன் காரணமாகப் பட்டணம் சீக்கிரம் காலி செய்யப்பட்டது.

சிங்கப்பூரில் ஜப்பானிய நிர்வாகம்

சிங்கப்பூர் ஜப்பானியர் கைக்கு வந்தவுடனே, அந்தப் புராதன பட்டினத்தின் பெயரை மாற்றி விட்டார்கள். பெயர் மாற்றியது மட்டுமல்ல. பள்ளிக் கூடங்களில் படிப்பு முறைகளைத் தலை கீழாக மாற்றிக் குட்டிச்

(17-ம் பக்கம் பார்க்க)

இந்தியா, அன்றும், இன்றும், என்றும்

(மிஸ்டர் எஸ். சுயம்பிரகாசம்.)

தற்காலம் நடக்கும் உலக மகா யுத்தத்தில் பொது மக்களுடைய மனப்போக்கும், கொள்கையும், செயலும் புத்துயிர் பெற்று வருகின்றன என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அன்று ரஷ்யாவையும், அதன் மக்களையும், அவர்களின் கொள்கைகளையும், வெறுத்த மக்கள், இன்று அத்தேசம், அத்தேச மக்களின் வீரம், படை முதலியவற்றால் காப்பாற்றப் படுகிறோம் என்ற கூற்றும், அன்று வியாபாரத்திலும், செல்வத்திலும் மேன்மை யுற்ற நாடுகள், உலக மக்கள் உய்ந்தா லன்றி, உலக மக்களின் சமாதானமும் நன்மையும், நிலை பெற்றாலன்றி, ஒரு தேசத்து மக்கள் தனிப்பட்ட முறையில் நிரந்தரமான நன்மையை யடைய இடமில்லை என்ற முடிவுக்கு வந்த தன்மையும், மேனாடுகள் எவ்விதத்தில் முன்னேறி யிருப்பினும், கீழ் நாடுகளும் பல விதத்திலும் முன்னேறினா லன்றி, முன்னேற்றத்தின் பயனை எக்காலத்தும் அனுபவிக்க முடியாது என்ற கொள்கைக்கு வந்த தன்மையும், இந்த யுத்தத்தின் பயன் என்பதை யாவரும் அறிவார்கள். இச்சமயத்தில் இந்தியா இவ்வுலக யுத்த சம்பந்தமாக, எவ்வித நிலைமை யடைய இருக்கின்றது என்பதை ஆராய்வது இயற்கை. ஆகவே, அதன் பழைய நிலைமையையும், தற்காலம் அடைந்திருக்கும் சிற்சில மாறுதல்களையும் எதிர் காலத் தன்மையையும் சுருக்கமாக ஆராய வேண்டுவது அவசிய மாகின்றது.

மிஸ்டர் எஸ். சுயம்பிரகாசம்.

வட பாகத்தில் இமய மலையையும், மற்ற மூன்று பாகமும் சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்ட காரணத்தால், இதனைத் தனி கண்டமாக அழைத்தார்கள். அதிலுள்ள மக்கள் பல பிரிவுகளுடையவர்களாகவும், பல மதக் கொள்கைக ளுடையவர்களாகவும் விளங்கினார்கள். விளை பொருள்களும், உற்பத்தி யாக்கப்படும் சாமான்களும் கொண்டு வாழ்க்கையை நடத்தி, வெளியிட்டு, மக்களுடைய கொள்கைகளோ எண்ணமோ அதிகமாகப் பரவ இட மில்லாமல் இந்த நாட்டில் வாழ்ந்து வந்தனர்.

தனித்தன்மை நீங்கியது

பிற்காலத்தில் ஏற்பட்ட உலக முற்போக்கின் காரணமாகவும், விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியின் முற்போக்காலும், உலகமும், அதிலுள்ள பல தேசங்களும் சுருங்கிய அளவுக்குக் கொண்டு வரப்பட்டு, போக்கு வரத்து சாதனங்களால் இணைக்கப் பட்ட தன்மையாலும், இந்தியா பிரிட்டிஷ் அர சாங்கத்தின் கீழ் வந்தமையாலும், தனித்திருந்த தன்மை போய், உலகத் தின் மற்ற பாகங்களோடு முற்றிலும் இணைக்கப்பட்டு விட்டது. மற்ற தேசத்து மக்களின் நாகரிகமும், கொள்கைகளும் பரவ ஆரம்பித்து விட்டன. மக்க ளெல்லோரும் ஒன்று, பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்ற கொள்கை தோன்ற ஆரம்பித்து விட்டது. முற்றிலும் விவ சாய நாடு என்ற தன்மையி லிருந்து தொழிற் சாலைகளையும் கொள்ள வேண்டும் என்று பல இடங்களிலும் தோற்றுவிக்க ஏற்பாடாகி விட்டது. இந்தியாவின் பெருமை பல விதத்திலும் இந்த யுத்தத்தில் வெளிப்பட ஆரம்பித்து விட்டது. கீழ்ப் பிரதேசத்தில் முக்கியமான மத்திய இடத் தைப் பெற்றிருப்பதின் காரணமாக, கிழக்கிலும் மேற்கிலும் நடக்கும் வியாபார ஸ்தானத்துக்கு இத்தேசம் முக்கிய இடமாக ஆகி விட்டது. இந்த மகா யுத்தத்தில், கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பானியரைத் தாக்கு வதற்கும், அவர்களால் பிடிக்கப்பட்ட நாடுகளை மறுபடி யடைவதற்கும் இந்தியா முக்கிய யுத்த ஆதாரமாக இருக்கிறது என்பதை, இன்றையத் தினம் பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் அறிகின்றார்கள். இந்திய சிப்பாய் கள் இந்த யுத்தத்தில் பல முனைகளிலும் வெற்றிக்கு எவ்வளவு தூரம் ஆதாரமாக இருந்திருக்கின்றார்கள், இருக்கிறார்கள் என்பதை இன்று நேச தேசத்தார் அனுபவிககின்றார்கள்.

உன்னத நிலை யடையத் தடை யில்லை.

ஆதலின் இத்தேசம் எதிர் காலத்தில் உன்னத நிலையை அடைவதற்கு யாதொரு தடையும் இருக்க இடமில்லை என்பது வெளிப் படை. எல்லா உரிமைகளையும் இந்தியா நிச்சயம் பெறக் கூடும் என்பதில் சந்தேக மில்லை. கைத் தொழிலையும் மற்றைய தொழிலையும், இயற்கையாக இருக்கும் விவசாயத்துக்கு இடைஞ்சல் இல்லாது விருத்தி செய்வது, யுத்த முடிவுத் திட்டத்தில் முக்கியமான தாகும். ஆரம்பக் கல்வியை கட்டாயக் கல்வியாக வைப்பதற்கும், அதற்கு ஆதாரமாக கிராமங்களைச் சுகாதார முறையில் சீர் செய்வதும், கிராமங்களுக்குப் போக்கு வரத்து சாதனங்களை அதிகப் படுத்துவதும் முக்கியமான வேலையாகக் கருதப்படும். மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்ற வித்தியாச மின்றி "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற முறையில் பழகி, பேச்சுரிமை, மத வுரிமை, பசி யில்லா வாழ்க்கை, பயமில்லா வாழ்வு முதலியவைகளை அடைந்து சமாதான முறையில் வாழ இடமுண்டு என்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

ஆகையால் நம் நாட்டு மக்கள் "நன்றே செய்யவும் வேண்டும், நன்றும் இன்றே செய்யவும் வேண்டும், இன்றும் இன்னே செய்யவும் வேண்டும், இன்னும் நாளை, நாளை என்பீராகில் நம்முடை முறை நாள் ஆவது மறியீர், நமனுடை முறைநாள் ஆவது மறியீர்" என்ற பெரியார் கபிலர் அவர்கள் வாக்கை அனுசரித்து, இன்னே நம் நேச தேசத்தார் விரைவில் வெற்றி பெறுவதற்கு ஆவன புரிந்து, உலக மக்கள் சமாதானத்தை நிலை நிறுத்தி, அந்தச் சமாதான உலகத்தில், இந்தியா எம்முறையிலும் தலை சிறந்து விளங்குமாறு செய்வது, யாவருடைய கடமையும் ஆகும்.

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

சுவர் பண்ணிவிட்டார்கள். சிங்கப்பூருக்கு 'சோனன்' என்ற புதுப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. பிடிபட்ட தேசங்களிலே ஜப்பானியர் பை சாசுக் கொள்கைகளைத் தான் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் புகுத்தி வருகின்றனர். கீழ் ஜாதிகளிலுள்ள மிலேச்சர்களைப் போலீஸ் வேலைக்கு அமர்த்தி, அவர்கள் செய்யும் அட்டகாசங்கள் காட்டு மிராண்டித் தனமாக வே இருக்கின்றன. ஜப்பானியர் பர்மாவைப் படை எடுக்கு முன்னர், பர்மி யர்களை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் புகழ்ந்தார்கள். ஆனால் படை எடுத்து தேசத்திற்குள் நுழைந்த உடனே, அவர்களைக் கேவலமாக அவமதித்தார்கள். ஜப்பானியர்களை வரவேற்ற பாவிக ளெல்லாம் படு குழியில் ஆழ்த்தப்பட்டனர். 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி ஜப்பானியப் போர் விமானங்கள் ரங்கூனுக்கு மேல் பறந்த போது, ஆயிரக் கணக்கான ஜனங்கள் பரமார்த்திகமாக வேடிக்கை பார்க்கச் சென்ற போது, எல்லோரும் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இவைகள் எல்லா வற்றிற்கும் காரணம் தேசத்தைக் காட்டிக் கொடுத்த அத்த சதிகாரப் பாவிகள் தான்.

ஜப்பானியர் வேவு முறைகள்

இந்தியாவிலே கிளர்ச்சி ஏற்படுத்துவதிலும், யுத்த முயற்சிக்குப் பங்கம் உண்டு பண்ணுவதிலும் தான் ஜப்பானியர் கண்ணும் கருத்துமாக இருக் கின்றனர். மாறு வேஷம் போட்டு துப்பர்களை அனுப்புவதும், கிளர்ச்சிப் பேச்சுக்களை வானொலி மூலமாகத் தினந்தோறும் அஞ்சல் செய்வதும் தான், ஜப்பானியப் பிரசாரப் புலிகளின் முக்கியமான வேலைகளாயிருக் கின்றன. 'கூலிக்கு மாரடிக்கும்' சில கோவிந்தாக்களை ரேடியோவில் பேசும்படியும், கை தேர்ந்த நாடு மாறிகளை மாறு வேஷம் தரித்து ஒற்றர் களாக இந்தியாவுக்கு அனுப்பியும் முக்கிய விஷயங்களை அறியும்படியும் ஏற்பாடு செய்கின்றனர்.

ஜப்பானியர் தங்கள் மனக்கோட்டையினால் ஜோடிக்கும் சாம்ராஜ்யத்தில் இந்தியாவையும் இணைக்க யோசிக்கின்றனர். சரி தான். பிடித்த தேசங் களை யெல்லாம் சுரண்டித் தள்ளினது மாதிரி, நமது தேசத்தையும் ஓர் சுடுகாடு ஆக்கக் கோளாறுகள் செய்கின்றனர் போலும்.

ஒவ்வொரு இந்தியனின் கடமை என்ன ?

புத்தர் பிறந்த புனித நாடு, கிருஷ்ணபிரான், தரும புத்திரர் போன்ற பெரிய பெரிய மகான்கள், உலக ரட்சகர்கள், தோன்றிய பழம் பெரு நாடு. மழை பெய் யென்றால் பெய்யும் பத்தினிகள் பிறந்த நன்னாடு. உதியாதே என்றால் சூரியனும் உதியாது நிற்கும் உத்தமிகள் வாழும் நாடு. சீரும் சிறப்பும் மிகுந்த வளம் பெறு நமது புண்ணிய நாட்டை, ஜப்பானியப் போக்கிரிகள் நிப்பந்திகள், பிடித்துத் தங்கள் தேசம் மாதிரி ஒரு நரகலோகமாக்க ஆசைப்பட்டால், குள்ளர்கள் இந்திய மண்ணில் காலடி எடுத்து வைக்க வொட்டாமல் விரட்டி அடிக்க வேண்டியது, ஒவ் வொரு இந்திய மகன் மகளின் கடமையாகும். அது தான் நாம் நம் தாய் நாட்டிற்குச் செய்யும் தியாகம்.

'கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே" என்னும் மூதுரைப்படி, ஜப்பானியக் குள்ளர்கள் ரொம்பப் பொல்லாதவர்கள். அவர்கள் வார்த் தைகளை நம்பினால் மோசம் போக வேண்டியது தான், இந்தியாவைக் கைப்பற்ற ஜப்பானியர் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் பாச்சாப் பலிக்காது. நேச தேசத்தினரின் சக்தியும், வல்லமை யும் வளர்பிறைச் சந்திரனைப் போல், நாளுக்கு நாள் ஓங்கி வளர்ந்து கொண்டு வருகிறது. அது உச்ச நிலையை அடையும் போது, சூரியனைக் கண்ட பனியைப் போல் எதிரிகள் எல்லோரும் மறைந்து விடுவார்கள். சீக்கிரம் பர்மா மலேயா தேசங்கள் மீட்கப்படும். அப்போது ஜப்பானியன் சிதைக்கப்படுவான். ஜப்பானியக் கொடுங்கோல் ஒழிக்கப்படும். நாட்டிலே நடு நிலமையும் சமாதானமும் நிலை நாட்டப்படும். அரிசிப் பஞ்சம், எண் ணெய்ப் பஞ்சம், மற்றெல்லாப் பஞ்சங்களும் தீரும். உலகோரும் ஆனந் தம் அடைவர். நேச நாடுகளின் முழு பலத்தையும் ஒன்றாகப் போட்டு, ஜப்பானைத் தாக்கத் திட்டம் போட்டாய் விட்டது. இனி ஜப்பான் அதோ கதி தான். ஜப்பான் இருககிற இடமே தெரியாமல் போவதற்குக் காலம் வந்து விட்டது. இந்த சந்தர்ப்பம் இப்போது நெருங்கிவிட்ட படியால், நமது நாட்டார் எல்லோரும் ஒன்றுபட்டு, எதிரியைத் துரத்தி அடிக்க முயற் சிக்க வேண்டும்.

பழங் கணக்கும், புதுக் கணக்கும்

'பசித்தவன் பழங் கணக்குப் பார்ப்பது போல்' என்றொரு பழமொழி உண்டு. நாமும் இப்பொழுது ரொம்பப் பசி உள்ளவர்களாகவே இருக்கிறோம். பழங் கணக்கு பார்த்தே ஆக வேண்டும். அது என்ன பசி ஐயா? யுத்தத்தில் வெற்றி கிடைக்க வேண்டும் என்ற பசி தான். இது 1943-ம் வருஷக் கடைசி அல்லவா? நாளை விடிந்தால் 1944-ம் வருஷம் பிறக்கப் போகிறது புதுக் கணக்குப் போடவேண்டும் அல்லவா? அதனால் 1943 ம் வருஷ திய வரவு செலவை ஒரு வகையாகப் பார்த்துத் தெரிந்து கொள்வது நல்ல தல்லவா?

ரொம்ப நல்ல வருஷம்

1943 ம் வருஷம் நேச தேசத்தினருக்கு ரொம்ப நல்ல வருஷம் தான். அதை விட நாளை பிறக்கப் போகும் வருஷம் இன்னும் ரொம்ப நல்லதாகவே இருக்கும் என்று நினைக்கிறோம். பிறக்கப் போகும் வருஷம் 'லீப்' வருஷம். இது நான்கு வருஷங்களுக்கு ஒரு தடவை தான் வரும். 'லீப்' என்றால் ஆங்கிலத்தில் 'தாண்டு' என்று மற்றொரு அர்த்தமும் உண்டு. இந்தப் புது வருஷத்தில் நேச தேசத்தார் ஒரே தாண்டாக இறுதி வெற்றியில் போய்க் குதித்து விடுவார்கள் என்பதற்கான அறி குறிகள் எல்லாம் தோன்றுகின்றன. சேனாதிபதி ஐஸன் ஹோவர் துரை கூட அதையே கூறி யிருக்கிறார். '1944 ம் வருஷத்தில் ஐரோப்பியப் போரில் வெற்றி பெறுவோம்' என்று பட்டவர்த்தனமாகவே கூறியிருக்கிறார் அவர். இந்தப் புது வருஷத்திற்கு 366 நாட்கள் உண்டு. ஒரு நாள் அதிகம் என்றால், அதிலே எவ்வளவோ சௌகரியங்களிருக்கத் தான் இருக்கின்றன. ஜெனரல் ஐஸன்ஹோவரின் வாக்குப் பலிக்க வேண்டு மென்று பிரார்த்திக்க உலகோரனைவருமே சித்தமாக இருக்கிறார்கள். இந்த யுத்தத்தினால் உலகம் முழுவதுமே அலண்டு போய்க் கிடக்கிறது. யுத்தங் காரணமாகப் படும் அவஸ்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு தினுஸாக இருக்கும். ஆனால் அவஸ்தைப் படாதவர்கள் எவருமே இரார் என்று சொன்னால், அதிலே மிகைப்படக் கூறல் எதுவுமில்லை. யுத்தத்திலேயே கலந்து கொள்ளாமல் இருக்கும் நாட்டினரும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் எத்தனையோ அவஸ்தைகள். நாலு புறமும் மதில் எழுப்பிக் கொண்டு நடுவே உட்கார்ந்திருந்தால், அதிலே சுகமுண்டா என்ன? ஒரு தேசம் சுபிக்ஷமாக இருப்பதற்கும், அங்கே நாகரிகம் வளருவதற்கும், கலைகள் செழிப்பதற்கும் வெளி நாட்டினருடன் சம்பந்த மிருக்க வேண்டும் என்பது, மறுக்க முடியாத உண்மை. இந்தக் காலத்திலே, எந்த வெளி நாட்டாரோடு என்ன வியாபாரம் செய்ய முடியும்? உலகிலே செல்வ மிக்க நாட்டினரும், வியாபாரத் துறையில் முன்னணியில் நின்று கொண்டிருந்த நாட்டினரும், பயங்கரமான போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தந்த தேசத்தினர் போர் முனைக்குச் சென்றுள்ள தத்தம் நாட்டு வீரமக்களின் க்ஷேமங்களைப் பாதுகாக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். வகை வகையான உணவு தினுஸுகளையும், உடைகளையும் தயாரித்து வந்த ஆலைகளில் பல குண்டுகளையும், பீரங்கிகளையும் தயாரிக்க முனைந்து வேலை செய்கின்றனர். ஆகவே, யுத்தத்தில் சேராத நாட்டினரோடு வியாபாரம் செய்ய வேண்டு மென்ற கவலையே அவர்களுக்கு இருக்க முடியாது. கவலை இருந்தாலும், சரக்குகளை ஏற்றிச் செல்லக் கப்பல்கள் வேண்டுமே ஐயா? அதற்கெங்கே போவது? ஒவ்வொரு தேசத்திலும், மனிதனுக்கு வேண்டிய சகல சாமான்களும் சிருஷ்டிக்கப் படுகின்றன, அல்லது விளைகின்றது என்று நினைப்பதற்கில்லை. எள்ளு விளைந்தால், கொள்ளு இராது; கொள்ளு முளைத்தால் வெள்ளி இராது, வெள்ளி இருந்தால் இரும்பு இராது. ஆகவே, கையிலிருப்பதை வெளி நாடுகளில் ஏதேனுமொன்றிற்கு அனுப்பி விட்டு, அந்த நாடுகளிலிருந்து தங்களுக்கு வேண்டியதை வர வழைத்துக் கொண்டே யாக வேண்டும். அது இப்போது முடியாது. ஆகவே அவஸ்தை தானே?

இந்தியா ஒரு பாக்கியம் பெற்ற நாடு

யுத்தத்தில் கலந்த நாடுகளுக்கோ, என்னென்ன கஷ்டங்கள் என்று சொல்லவே வேண்டாம். இந்தியாவும் யுத்தத்தில் கலந்த நாடு தான். ஆனால், ஏதோ கடவுள் கிருபையால், இது இந்நாள் வரை போர்க்களமாகாது இருந்து விட்டது. இநதியா ஒரு பெரிய பாக்கியம் பெற்ற நாடு தான். உலக சரித்திரத்திலேயே இது ஒரு பெரிய ஸ்தானத்தைப் பெறப் போகிறது. அது எப்படி என்று கேட்கிறீர்களா?

இந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தைப் பற்றி எதிர் கால சரித்திராசியர்கள் எழுதுவார்களா, மாட்டார்களா? எழுதுவார்கள். அப்பொழுது, உலகின் சமாதானத்தைக் குலைத்த அச்சு நாட்டவரைப் பற்றி எழுதுவார்கள் அல்லவா? அச்சு நாடுகளில் ஜப்பானும் ஒன்று தானே? அந்த ஜப்பானை உதைக்க, இந்தியாவை ஒரு பாயும் ஸ்தலமாகக் கொண்டார்கள். இந்தியர்கள் பல கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு, இந்த தர்ம கைங்கரியத்தில் தங்களாலான உதவியைச் செய்தார்கள். அதோடு, இந்தியாவின் தொழில் அபிவிருத்தியின் வேகம் பல மடங்கு உயர்ந்து விட்டது. எதிர் கால இந்தியாவின் சக்தி, இதனால் ரொம்பவும் பலமாகி விட்டது' என்று எழுதுவார்களா மாட்டார்களா? இது ஒரு பெருமை அல்லவா?

இந்த யுத்தம் வந்ததனால், தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்த சாமான்களுக்கு தட்டு ஏற்பட்டது. அதனால் கட்டுப்பாடு ஏற்பட்டது. கட்டுப்பாடு என்றாலே கஷ்டம் தானே? ஆனால், கட்டுப்பாடு இருந்தாலும், ஏதோ கொஞ்சம், கொஞ்சமாவது கிடைத்துக் கொண்டிருக்கிறதே! இப்பொழுது புது வருஷத்தில் நிலைமை இன்னும் அபிவிருத்தியடையலாம். இந்திய வீரர்களும், மற்ற நேச தேசத்தார்களும் மத்யதரைக் கடலைத் திறந்து விட்டதிலிருந்தே, இந்தியாவிற்கு வேகமாகவே ஏதேதோ அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பொது ஜனங்களுக்கு வேண்டியவையும் அவற்றிலிருக்கின்றன. ஆனால் இந்தியாவின் ராணுவ பலத்தை அதிகப் படுத்துவதற்கான சாமான்களே நிறைய வந்து கொண்டிருக்கின்றன. ஜப்பானை உதைப்பதற் கென்று தனித் தலைவரை அமர்த்தியாயிற்று. அவரும் தீவிரமாக வேலை செய்து கொண்டிருக்கிறார். கெய்ரோ மகா நாட்டில் ஜப்பானைப் பற்றி எல்லா விஷயங்களையும் கலந்து பேசி முடித்து விட்டார்கள். ஜப்பானியர் கால் வைத்திருக்கும் இடங்களை யெல்லாம் அமெரிக்கரும், ஆஸ்திரேலியரும், பிரிட்டிஷாரும் நொறுக்கிக் கொண்டு தானிருக்கிறார்கள். வடக்கே அலூஷியன் தீவுகளில் ஆரம்பித்து ஒரு வட்டக் கோடு போட்டால், அது பர்மாக் காடுகளில் போய் நிற்கும்.

ஆரம்பத்தில் செய்த அசட்டுக் காரியங்கள்

இந்தக் கோட்டிற்குள் சிக்கிய பிரதேசங்களில் எல்லாம், ஜப்பானியருக்கு உபத்திரவம் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள் நம்மவர்கள். அகலக் கால் வைத்த ஜப்பானியர், தாம் ஆரம்ப ஜோரில் செய்த காரியங்கள் அசட்டுக் காரியங்களாகும் என்பதை ஏற்கெனவேயே உணர்ந்திருப்பார்கள் என்றே நினைக்கிறோம். திருடுவ தென்பது தவறு. அதை ஒருவன் அசட்டுத் தனத்தால் செய்துவிடுகிறான் என்பதற்காக, அவனை யாராவது மன்னிக்கிறார்களோ? அவன் செய்த காரியத்திற்காக அவனுக்குத் தண்டனை விதிக்கத் தானே செய்கிறார்கள்? அந்த விதிப்படி ஜப்பானியரும் தண்டனை பெற்று வருகிறார்கள், அவர்களிட முள்ள 'எக்ஸஸ் பிராபிட்' (Excess Profits) அதாவது அதிகப்படி லாபத்தை யெல்லாம் நேச தேசத்தார் பிடுங்கி, சேரவேண்டியவர்களுக்குக் கொடுத்து விடப் போகிறார்கள்.

ஜெனரல் மார்ஷல் என்பவர் கெய்ரோவில் நடந்த தலைவர்கள் மகா நாட்டில் கலந்து, அவர்களது தீர்மானங்கள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொண்டு, உலக முழுவதும் 'விர்'ரென்று விமானத்தில் சுற்றி விட்டு சுங்கிங்கிற்குத் திரும்பி விட்டார். வழியிலே ஜெனரல் மாக் ஆர்தர், கடற் படைத் தலைவர் நிமிட்ஸ் ஆகிய இருவரையும் பார்த்து விட்டுப் போயிருக்கிறார். இதன் பலன் என்ன? ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறியிருப்பது போல், ஜப்பானுக்கு வண்டி வண்டியாகக் கெட்ட செய்திகள் போய்ச் சேரச் செய்வது தான் பலன்.

இந்த 1943-ம் வருஷத்திலே ஜப்பானியர் வெற்றி என்ற வார்த்தையையே கேள்விப்படவே இல்லை. தென் மேற்கு பஸிபிக் பிரதேசத்திலேயும், மத்ய பஸிபிக் பிரதேசத்திலேயும், சம்ப்ரமமான உதை என்ற செய்தி ஜப்பானியர் செவிகளில் பலமாக விழுந்திருக்கும். அந்த உதை விழுந்த சப்தமே அவர்கள் காதுகளில் விழுந்திருக்குமே! நேச தேசப் படையினர் ஜப்பானியரை ஒவ்வொரு தீவிலிருந்தும் விரட்டிக் கொண்டே வருகிறார்கள். அதோடு, ஜப்பானின் கடற் படை பலத்தையும், விமான பலத்தையும் வேண்டிய அளவு குறைத்தும் விட்டார்கள். நேச தேச விமான பலமும், கடற் படை பலமும் பிரம்மாண்டமாக வளர்ந்து விட்டன. அமெரிக்கா இதற்குப் பெரிதும் உதவி யிருக்கிறது. சதா சுகத்திலேயே மூழ்கி யிருப்பவர்கள், யுத்தத்தில் நேரே வந்து கலந்து கொள்ளுவது என்றால், அது ஒரு பெரிய தியாகம் தானே?

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னார்: 'இப்பொழுது 38 லக்ஷம் அமெரிக்கர்கள் வெளி நாடுகளில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன் இந்த எண்ணிக்கை இதில் பாதிக்கும் குறைவாகவே இருந்தது. இன்னும் ஆறு மாதங்களில் ஐம்பது லக்ஷம் வீரர்கள் வெளி நாடுகளில் இருப்பார்கள். இன்றையத் தேதியில் போர் வீரர்களது உடை அணிந்து அமெரிக்க ராணுவத்தில் சேவை செய்வோர் ஒரு கோடிப் பேர்களாகும். மேற்கண்ட 38 லக்ஷப் பேர்களும் உல கெங்கிலும் பரவி இருக்கிறார்கள். 38 லக்ஷம் என்பது சாதாரணத் தொகையா?

1943-ல் பல விசேஷ சம்பவங்கள்

நேச நாட்டினரிடை 1943-ல் ஏற்பட்டதைப் போன்ற ஒற்றுமை எந்தக் காலத்திலும் ஏற்பட்டதேயில்லை. அந்த வகையில் 1943-ஐ ஒரு விசேஷ வருஷமாகவே நாமும் சரி, சரித்திராசிரியர்களும் சரி குறித்துக் கொள்ள வேண்டும்.

1943-ல் பல விசேஷ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 1943-ல் தான் அச்சு நாடுகளில் ஒன்றாகிய இத்தாலி கவிழ்ந்து விழுந்தது. பாஸிஸம் என்ற அரக்கனும் அதோடு வீழ்ந்தான். இத்தாலிய மக்கள் தங்களது உள்ளத்தில் உள்ளதை வெளி உலகிற்குத் தெரியச் செய்து கொண்டனர். நேச நாட்டினரோடு அந் நாட்டரசர் சேர்ந்து கொண்டார். நேச நாட்டினர் ஆபிரிக்கப் போரை முடித்துக் கொண்டு, ஸிஸிலி மீது பாய்ந்து, அங்கிருந்து இத்தாலியில் புகுந்து விட்டனர். இப்பொழுது ரோமாபுரிக்குச் செல்லும் பாதையி லிருக்கிறார்கள் அவர்கள். ரோமாபுரிக்கு ஆபத்து என்பதை ஜெர்மானியர் நன்கு உணர்ந்து விட்டார்கள். அந் நகரிலே மாலை வந்து விட்டால், எல்லோரும் உள்ளே அடைபட்டுக் கிடக்க வேண்டியது தான் என்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. ஜெர்மானியர் இத்தாலியிலே பிரமாதமாக எதிர்த்து நிற்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் நேச தேசத்தாரும் அவர்களை விடாது பின்னுக்குத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலும் சந்தேக மில்லை. சில நகர்களை இந்திய வீரர்களே தனித்து நின்று கைப்பற்றினார்களாம். ஜெர்மானியர் இப்பொழுது நெருப்புப் பந்தங்களை வீசும் ஆயுதங்களை உபயோகிக்கிறார்களாம். இது பழைய கால பத்ததி. அவர்கள் எந்த பத்ததியை வேண்டுமானாலும் அனுசரிக்கட்டும்; அவர்களை லேசில் விடப்போவதில்லை நேச தேசத்தார்.

சில உண்மைகள்

1943-லே கண்ட உண்மைகள் சில உண்டு. ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் மீது பல்லாயிரம் டன் குண்டுகள் மழையாகப் பொழிந்திருக்கின்றன. ஜெர்மனியின் முக்ய நகரங்கள் பல, நேச தேசக் குண்டு வீச்சுக்குக் குறியாகி யிருக்கின்றன. ஜெர்மானியர் கைவச முள்ள பிரதேசங்களில் குண்டு விழாத நாளே கிடையாது. ஆனால், சீமை மீது ஜெர்மன் விமானங்கள் 1943-ல் பறந்த நாட்களை விரல் கொண்டு எண்ணி விடலாம். ஆயினும், ஜெர்மன் சர்க்கார் வாயாடி வீரர்கள் மட்டும், ரேடியோ மூலமாக, 'இதற்குப் பழிக்குப் பழி வாங்குகிறோம்' அப்படி இப்படி என்று ஜம்ப மடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியின் விமான பலம் எல்லாம் என்னவாயிற்று? விமான உற்பத்தி தடைப்பட்டிருக்கிறதா? அல்லது, எதிர் காலத்தை உத்தேசித்து, ஜெர்மானியர் தங்கள் விமான பலத்தைச் சேமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்களா? இதெல்லாம் 1943-ல் எல்லோரும் கேட்ட கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கெல்லாம், 'எஸ்! எஸ்!' என்றே பொதுவாகப் பதில் சொல்லலாம் போலிருக்கிறது.

ஜெர்மன் மூல பலத்தை ரஷ்யா உறிஞ்சி விட்டது

ஜெர்மனியின் மூல பலத்தை யெல்லாம் ருஷ்யா உறிஞ்சி எடுத்து விட்டது. பிரபல விமானிகளும், இருபது வருட அனுபவம் பெற்ற விமானிகளும் சிறிது சிறிதாக நேச தேசத்தாருக்குப் பலியாகி மறைந்து விட்டனர்.

இப்பொழுது இத்தாலியிலே ஜெர்மன் விமானிகள் செய்யும் காரியத்தைப் பார்த்து எல்லோரும் சிரிக்கிறார்கள். யுத்த ஆரம்பத்தில், அதிலும் டங்கர்க் சமயத்திலே இருந்த விமான பலமும், விமானிகளும் ஜெர்மனியிடம் இப்பொழுதும் இருந்தால், இத்தாலிப் போரின் போக்கே வேறு தினுஸாக ஆகியிருக்கும்.

ஜெர்மன் விமானிகள் சுத்தக் கற்றுக் குட்டிகளாக இருக்கிறார்கள் என்பதற்கான ருஜுக்கள் கிடைத்திருக்கின்றனவாம். மேலே யிருந்து பருந்துப் பாய்ச்சலில் கண்மூடித் தனமாக நேச தேச விமானக் கூட்டத்தின் மீது பாய்கிறார்களாம். குறி தவறிவிட்ட தென்றால், அப்புறம்,........ ஒரு கதை நினைவிற்கு வருகிறதே இங்கு.

ஒரு குடியானப் பெண்ணை ஒரு இளவரசன் காதலித்தானாம். ஆனால் அந்தப் பெண் அவனது விருப்பத்திற்கு இணங்கவில்லையாம். 'டீ விளையாட்டு விளையாடவா!' என்று அவளை அவன் அழைத்தானாம். 'சரி!' என்றாளாம் அவள். அந்தப் பெண் தன் கைகளை உயர்த்திக் கொண்டு நின்றாளாம். அந்த இளவரசன், தானும் தன் கைகளைத் தூக்கிக் கொண்டு, தன் தலையை அவள் தலை மீது இடித்து விளையாட ஓடியே வந்தானாம். அந்தப் பெண் அப்பொழுது களத்து மேட்டி லிருந்தாளாம். இளவரசன் வேகமாக ஓடி வரும்பொழுது, அப் பெண் சற்றே விலகினாளாம். இளவரசன் அடித்தானாம் 'பல்டி' குப்பை மேட்டுச் சரிவிலே.

ஜெர்மன் விமானிகளின் அனுபவக் குறைவு

அது மாதிரி, ஜெர்மானிய விமானங்கள் பாயும் போது, நேச தேச விமானிகள் கொஞ்சம் நைஸாக ஒதுங்கி விடுவார்களாம். அப்புறம் ஜெர்மன் விமானங்கள் தடமாடிப் போவதோடு, நேச தேச விமானிகளின் துப்பாக்கி, பீரங்கிகளுக்கு நல்ல குறியாகி விடுகின்றனவாம். எதிரி விமானிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள வளைந்து வளைந்தோ, மேலும் கீழுமோ போக ஜெர்மன் விமானிகளுக்குத் தெரியவில்லையாம். கைவசமிருந்த நல்ல சரக்கெல்லாம் தீர்ந்து போன பிறகு, மட்டமான சரக்கை வெளியி லெடுத்து விடுவது போல், ஜெர்மானியரும் இப்போது செய்கிறார்கள் போலிருக்கிறது. சமர்த்தர்களான விமானிகளின் ஸ்டாக் தீர்ந்து போய் விட்டது; மீசை கூட முளைக்காத பசங்களுக்கு நாலு நாள் விமான மோட்டக் கற்றுக் கொடுத்து, 'தொலைங்கடா!' என்று விரட்டியடித்தனுப்புகிறார்கள் போல் தோன்றுகிறது. அவர்களால் இத்தாலியில் அதிக சேதமே இல்லை என்கிறார்கள். பிரிட்டிஷ் 'நெருப்புக் கக்கி' விமானங்களைத் தூரத்தில் கண்டாலே, பயூன் மாதிரி ஓடி விடுகிறார்களாம்.

ஜெர்மன் கப்பற் படை பூஜ்யமாகி விட்டது

ஜெர்மானியர் முன்னேறித் தாக்கிய காலமும், அஞ்சா நெஞ்சத்தினர் என்று பெற்ற பெயரும் 1943-ல் மாறிவிட்டது. பாருங்களேன், போன இரண்டு வாரங்களுக்கு முன் பிரிட்டிஷ் கப்பற் படையினர், ஜெர்மானியரின் 'ஷார்ன்ஹர்ஸ்ட்' என்ற பிரமாண்டமான யுத்தக் கப்பல் நார்வேயில் இருந்த இடத்திற்குப் போய், சேஷ்டை செய்தனர். இவர்கள் 'குர்ர்ர்! ளொள், ளொள்!' என்று கத்தியும் அவர்கள் பதில் சொல்லாவிட்டால் என்ன செய்வது? கப்பற் படை பலம் இப்பொழுது பூஜ்யமாகி விட்டது ஜெர்மனிக்கு. இந்த ஷார்ன்ஹார்ஸ்ட் கப்பல் தான் இரண்டு வருஷங்களுக்கு முன் பிரிட்டிஷ் கால்வாய் வழியே தைரியமாக, பெரிய விமானப் பாதுகாப்புடன் சென்றது. பார்லிமெண்டில் கூட இது சம்பந்தமாகக் கேள்விகள் கேட்டார்கள். இது ஒரு தடவை காயம் அடைந்தாகி விட்டது. இதன் கனம் இருபத்தாறாயிரம் டன்னாகும். இதன் நீளம் ஒரு பர்லாங்கு. இதிலே நாலு விமானங்களுக்குக் கூட இடமிருந்ததாம். இது போனதால், ஜெர்மனிக்கு ஒரு சிறகு ஒடிந்தது மாதிரி தான். இது ஒழிந்தது என்ற செய்தி கேட்டு, அமெரிக்காவில் ஒரேயடியாகக் குதூகலமடைந்திருக்கிறார்களாம்.

பிரிட்டிஷ் கப்பற் படையின் கிருஸ்மஸ் வெகுமதி

ஜெர்மனிக்கு இத்தாலியின் யுத்தக் கப்பலும் சிறிது உதவியாக இருந்தன. இத்தாலி பணிந்த பின், இத்தாலியக் கப்பல்களில் சில, தப்பி ஓடி பிரிட்டிஷாரிடம் சேர்ந்தன. சில தற் கொலை புரிந்து கொண்டன. ஷார்ன் ஹார்ஸ்ட்டை மூழ்கடித்தது, பிரிட்டிஷ் கடற் படை நேச தேசத்தினருக்கு ஒரு கிருஸ்துமஸ் வெகுமதி அனுப்பினதுபோலாகும் என்கிறார்களாம் சிலர்.

'ஷார்ன்ஹார்ஸ்ட்' மூழ்கடிக்கப்பட்ட கதை ஆச்சரியமானது. பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் இதை இம்முறை திரும்பவும் சண்டைக்கு வலிய இழுத்தார்களாம். வேறு கதியின்றி, சண்டைக்கு வந்து ஒழிந்ததாம் அது. இது போல் இன்னும் பல இழவுச் செய்திகளைக் கேட்க ஜெர்மானியர் சித்தமாகவே இருக்க வேண்டும்.

ஒரு பெரிய செய்தி

1943-ல் முக்கியமாக நடந்த விஷயங்களில், பிரதம மந்திரி சர்ச்சில் அமெரிக்காவிற்கும், கெய்ரோவிற்கும், டெஹ்ரானுக்கும் சென்று, மற்ற மாபெருந் தலைவர்களைச் சந்தித்து, ஜெர்மனியை அடக்கி ஒடுக்குவது பற்றி விரிவான திட்டம் போட்டது ஒரு பெரிய செய்தி.

அந்தத் திட்டப்படியே எல்லாக் காரியங்களும் மளமளவென நடந்து கொண்டிருக்கின்றன. இரண்டாவது போர் முனை இத்தாலியில் இல்லை. அது தனியாக வேறிடத்தில் ஆரம்பிக்கப் படும் என்பது ஊர்ஜிதமாகி விட்டது. மத்ய தரைக் கடல் பிரதேசத்திற்குத் தலைவராக இருந்து மாசிலா வெற்றிகள் பெற்று, புகழடைந்த சேனாதிபதி ஐஸன்ஹோவரை, இரண்டாவது போர் முனைக்கான பெரிய தலைவராக நியமித்திருக்கிறார்கள். ஐஸன்ஹோவருடைய ஸ்தானத்திலே ஒரு பிரிட்டிஷ் ஆள் நியமிக்கப்பட்டிருக்கிறார். 'போன யுத்தத்திலும், நெப்போலியன் காலத்திலும் கலந்து கொண்டவர்கள் வெற்றி பெற்றதற்கு ஒரு காரணமுண்டு என்று ஒருவர் சொல்லுகிறார். அவர்கள் நேசதேசக் கட்சியினரிடை பிளவையுண்டு பண்ண முயன்றார்கள். அதிலே சிறிதளவு வெற்றியும் கண்டார்கள். அதே போல இப்பொழுதும் செய்ய முயலுகிறார்கள். "அது நடக்காதய்யா! எங்களிடை; 'சிமிட்டி' போட்டது போல் ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது" என்று ரூஸ்வெல்ட் கூறினார். அமெரிக்க சேனாபதி, பிரிட்டிஷ் உப சேனாபதி, பிரிட்டிஷ் சேனாபதி, அமெரிக்க உப சேனாபதி, இம்மாதிரியாக இருந்து, ஒரு கலவரமின்றி அதி ஒற்றுமையாகவே 'கருமமே கண்ணாயினார்' என்ற முறையில் நேச தேசத்தாரைக் கலந்து வேலை செய்ய வைத்து விட்டார் ஹிட்லர்.

ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டம் 1943-ல் ஏற்பட்டிருப்பது உண்மை. ஆனாலும் அது நிறையச் சேர்த்து வைத்திருக்கிறது. அதைக் குண்டு வீச்சால் பணியவைக்க முடியாது. தரை மார்க்கமாகப் போய்த் தான் தாக்கவேண்டும் என்கிறார் மற்றொருவர்.

ஜெர்மனியைத் துவம்சம் செய்யப் போகிறது

ஐஸன்ஹோவர் சீமைக்குப் போய்விட்டார். அங்கிருந்து ஒரு பெரிய படை கிளம்பும். அதற்கு முன் உலகோர் எந்நாளும் கண்டும் கேட்டுமிராத அவ்வளவு பெரிய விமானப் படை ஒன்று முன் கூட்டிச் சென்று ஜெர்மனியையும், அதனது கைவசப்பட்ட தேசங்களையும் த்வம்சம் செய்யப் போகின்றது.

ருஷ்யா 1943-ல் ஜெர்மானியருக்கு ஏராளமான நஷ்டங்களை உண்டு பண்ணியிருக்கிறது. 'உடம்பு போனால் போகட்டும்; கை தப்பட்டும்' என்று அலறுகிற மாதிரியிலே, ருஷ்யரிடம் ஜெர்மானியர் சிக்கிக் கொண்டு தவிக்கிறார்கள். வேறு எங்கும் கவனிக்க முடியவில்லை. பனிகாலப் போரை வேறே ருஷ்யர்கள் தொடங்கி விட்டார்கள். போன வருஷம் முழுவதும் ருஷ்யாவிலே நல்ல உதை. நடு நடுவே கொஞ்சம் முன்னேறினார்கள். அதுவும் அற்ப சந்தோஷமாகிவிட்டது. ருஷ்யர்களின் சக்தி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் மேற்றிசையிலிருந்து தாக்கும் பொழுது, ருஷ்யா கிழக்கிலே தனது வேலையைப் பலமாகக் காட்டும். அதே சமயம் தெற்கிலிருந்தும் பாய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

1943 முழுவதும் ஜெர்மனி பாதுகாப்புப் போரே நடத்தியிருக்கிறது. வட ஆபிரிகாவிலே உதைபட் டோடிய ரோமல் துரை, இத்தாலியிலே போய், அங்கேயிருந்து பால்கன் பிரதேசங்களுக்குத் தூக்கிப் போடப்பட்டார். தற்சமயம் அவர் மேற்றிசைக்குப் போய் இரண்டாவது போர் முனையை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண் டிருக்கிறாராம்.

பல் பிடுங்கப்பட்ட பாம்பு

1943-லே, போர்ச்சுகல், நேசதேசத்தாருக்கு தனது தீவுகளில் முக்யமான ஒன்றிலே தங்கி இருந்துபோக அநுமதி கொடுத்தது. அதைப் பார்த்து ஜெர்மனி கோபங் கொண்டதே தவிர, வேறொன்றும் செய்யவில்லை. அதால் இப்பொழுது வேறொன்றும் செய்ய முடியாது. பல் பிடுங்கப்பட்ட பாம்பு போலாகிவிட்டது அது.

1943-ம் வருஷத்திலே பிரான்ஸைச் சேர்ந்த சுதந்திர ப்ரியர்களின் பெயர்கள் செய்திகளில் ரொம்பவும் அடிபட்டன. அவர்கள் தனியாக ஒரு கமிட்டி நியமித்துக் கொண்டு, சார்டீனியாவிற்குப் படைகளை அனுப்பி கொஞ்சம் வெற்றியும் கண்டார்கள். பிரான்ஸிலே ஜெர்மானிய த்வேஷம் பரவி வருகிறதாம். அதற்கு ஜெர்மானியரின் அட்டகாசமே காரணமாக இருக்க வேண்டும். எந்த நிமிஷமும் அங்கே உள் நாட்டுக் கலகம் ஏற்படக் கூடும் என்கிறார்கள்.

இந்தக் கோர யுத்தத்தின் காரணம்

1943-ம் வருஷத்திலே, நேசதேசத் தலைவர்கள் ஒன்றாகச் சந்தித்ததோடில்லாமல், எதிர் காலத்திலே என்னென்ன செய்ய வேண்டு மென்பதையும் தீர்மானித் திருக்கிறார்கள். ஜெர்மனியிலேயும் சரி, மற்ற அச்சு நாடுகளிலும் சரி, இனி விமானப் பயிற்சியோ, விமான உற்பத்தி என்பதோ இருக்கவே படாது; அந்த நாடுகளிலே விமானப் போக்கு வரத்து நடத்தும் வேலையை நேசதேசத்தவர் ஏற்க வேண்டும் என்று முடிவு கட்டி யிருக்கிறார்கள். சென்ற இருபது வருஷங்களாக ஜெர்மனியையும், ஜப்பானையும் கவனியாது விட்டதன் பலன் தான், இந்த கோர மகா யுத்தம் ஏற்பட்டது. எதிர் காலத்திலே இத்தகைய யுத்தம் ஏற்பட இடமே கொடுக்கக் கூடாது தான். தேவையானால், ஒரு சர்வ தேசப் படை ஒன்றை ஏற்படுத்தி, உலக சமாதானத்தைப் பாது காப்பது என்று தீர்மானித்திருக்கிறார்கள். அதோடு, ஜப்பானின் பேராசையை ஒழித்து, அதனிட மிருந்து சாம்ராஜ்யத்தைப் பறிக்கவும் முடிவு செய்திருக்கிறார்கள். இதெல்லாம் முடியும் வரை, யுத்தம் நிற்கப் போவதில்லை. சீக்கிரமே யுத்தத்தை முடிக்கவும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

1944-ம் வருஷத்தில் முழுப் பலன்

1943-ம் வருஷத்தில் இன்னும் எத்தனையோ விசேஷ சம்பவங்களும் நிகழ்ந் திருக்கின்றன. இனி ஜெர்மனி தப்ப முடியாது என்ற நிலைமையோடு, 1944-ம் வருஷம் பிறக்கிறது. புது வருஷத்தில் இன்னும் விசேஷமான செய்திகள் நமது செவிகளில் விழும். முழுசாகப் பலனும் கிடைக்கத் தான் போகிறது.

ஹிட்லர் துயரம்

(ஞான பண்டித மோதிலால் என்ற சந்தம் மாதிரி)

பல்லவி

எதுக்கென்றே கலங்கு வார்—ஹிட்லர் மனது
எதுக்கென்றே கலங்கு வார்

அனுபல்லவி

யாதுக்குமஞ்சாத ரஷ்ஷியர் வி ரட்டலுக்கோ
நாஜிகள் சிதறாமல் நாடித்தி ரட்டலுக்கோ (எ)

சரணம்

இட்டாலியின் முன்னேறி யிருந்த தன்துருப்புகள்
நாட்டமுடன் பின்வாங்கி நடக்குஞ் செயல்தனக்கோ (எ)

அட்லான்டிக்கிலிருந்து அட்டகாசம் புரியும்
சப்மரின்கள் யாவையும் சமரில் முறிந்தமைக்கோ (எ)

தன்னுயிர்க்குஞ்சிறந்த ஜர்மனி பர்லின்மீதே
ஒன்னலர் விமானங்கள் ஓயாக்குண்டு மழைக்கோ (எ)

யுத்தமும் ஜனநாயகமும்

(பி. ஏ. கன்னையா நாயுடு, பி.ஏ., பி.எல்., அட்வகேட்.)

இது யுத்த காலம். யுத்தம் தொடங்கி ஐந்தாவது ஆண்டு நடைபெறுகிறது. இந்த யுத்தம் எதற்காகத் தொடங்கியது என்பது ஆராயத்தக்கதாகும். போலந்து மீது ஜெர்மனி படை யெடுத்தது. போலந்து சுதந்தர நாடு. அதை ஜெர்மனி தனதடிமையாக்க முயன்றது. அக் கொடுமையைத் தடுக்கவும் ஜெர்மனியின எதேச்சாதிகாரத்தை ஒழிக்கவும் பிரிட்டன் 1939-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 3ந் தேதி ஜெர்மனி மீது போர் ஆரம்பித்தது. சென்ற யுத்தமும் ஜெர்மனியின் அரசனாகிய கெய்சரினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த யுத்தமும் ஜெர்மனியின் சர்வாதிகாரியாகிய ஹிட்லரினால் துவக்கப்பட்டது. கெய்சர் காலத்தில் ஜெர்மனியில் கெய்சரின் எதேச்சாதிகாரம் மிளிர்ந்தது. தற்காலத்தில் ஜெர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகாரம் தாண்டவ மாடுகிறது. ஜனநாயகத்தின் மீது ஹிட்லருக்குள்ள வெறுப்பும் மனக்கசப்பும் உலகறிந்தது. ஜன நாயகம் ஒழிய வேண்டும்; உலகம் முழுமையும் தன் ஆட்சிக்கு உட்பட வேண்டும் என்ற பேராசைக் கொண்டு தான், ஹிட்லர் இந்த யுத்தத்தை ஆரம்பித்தார்.

சர்வாதிகாரிகள் தோற்றம்

மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களினுடைய ஆட்சியே ஜனநாயகம் என்று அமெரிக்க தலைவர் ஆப்ரஹாம் லிங்கன் கூறியுள்ளார். இந்த இருபதாவது நூற்றுண்டிலே கூட, இத்தகைய ஜனநாயகம் பல நாடுகளிலே இல்லை. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சு நாடுகளில் யுத்தம் தொடங்கு முன்னர், எதேச்சாதிகார ஆட்சி இருந்து வந்தது. சென்ற யுத்தத்திற்குப் பின்னர் இத்தாலியில், முசோலினி தலைமையின் கீழ், பாசிஸ்ட் கட்சி தோன்றியது. அந்நாட்டிலே, ஜனநாயகத்தைக் குலைத்து பாசிஸ்ட் கட்சி தலைவரான முசோலினி, அரசாங்கத்தைக் கைப்பற்றி, அரசனைப் பொம்மையாக்கி, தானே சர்வாதிகாரியானர். ஜெர்மனியில் ஹிண்டன்பர்க் காலத்துக்குப் பிறகு, நாஜிக் கட்சி தலைவரான ஹிட்லர், முசோலினி போலவே ஜெர்மனியைத் தன் ஆட்சிக்குட்படுத்திக் கொண்டார். ஜப்பான் ஒரு சக்கிரவர்த்தியின் எதேச்சாதிகாரத்திற்குட் பட்டுள்ளது. ஹிட்லர், முசோலினி ஆகியவர்களைப் பின்பற்றி ஜெனரல் பிராங்கோவும் ஸ்பெயினில் உள் நாட்டுக் கலகம் ஆரம்பித்து ஸ்பெயினி லிருந்த குடியரசைத் தோற்கடித்து ஸ்பெயினுக்குச் சர்வாதிகாரியாக ஆகிவிட்டார்.

ஜனநாகத்துக்குத் தாயகமாக விளங்கியது பிரான்ஸ். / விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோட்பாடுகளைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பித்த பிரஞ்சு புரட்சி, உலக முழுவதும் ஜனநாயகத்துக்கு அடி கோலியது. அப்புரட்சியைப் பின்பற்றித் தான், அமெரிக்க சுதந்தரக் கிளர்ச்சி உருக்கொண்டது. அமெரிக்காவில் இன்றைக்கும் ஜனநாயகம் தழைத்து ஓங்குகிறது. பிரிட்டனில் ஜனப் பிரதிநிதித்துவ சபையாகிய பார்லிமெண்டுக்குத் தான் பூரண அதிகார முண்டு. பார்லிமெண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை 21 வயது பூர்த்தியாகிய ஒவ்வொருவருக்கும் உண்டு. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஜனநாயக நாடுகளில் ஜனநாயக ஆட்சிமுறை வெவ்வேருக உள்ளது. ஆயினும் அடிப்படையான கொள்கை ஜனநாயகமே.

ஜனநாயகம் என்றுல் என்ன ?

ஜனநாயகம் என்பது தான் என்னே ? நாட்டினுடைய அரசாங்கம் ஜனங்களினுடைய நன்மைக்காக, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்படுவது தான் ஜனநாயகம். உதாரணமாக இங்கிலாந்தை எடுத்துக்கொள்ளுவோம். இங்கிலாந்து அரசாட்சிக்கு உட்பட்டதாக இருந்தாலும், அரசாங்க அதிகார முழுமையும் 'கேபினெட்' என்று சொல்லப்படும் மந்திரி சபையினிடத்து அடங்கி யுள்ளது. ஜனங்கள் ஐந்தாண்டுகளுக் கொருமுறை பார்லிமெண்டு காமன்ஸ் சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறுர்கள். காமன்ஸ் சபை அங்கத்தினர்களில் பெரும்பானமையோருக்குத் தலைவராக உள்ளவரை அரசர் கூப்பிட்டு, பிரதம மந்திரி ஆக்குகிறுர். பிரதம மந்திரி சாதாரணமாக தனது கட்சியிலிருந்து மற்ற மந்திரிகளைத் தெர்ந்தெடுத்து மந்திரி சபை அமைக்கிறுர். அந்த மந்திரி சபை தான் அரசாங்கத்தை மேற்கொண்டு நடத்துகிறது. ஆனால், எச்சமயத்திலும் பார்லிமெண்டு, மந்திரி சபையை நீக்கி விட முடியும். ஆக மந்திரி சபை பார்லிமெண்டுக்கு அடங்கி யுள்ளது. பார்லிமெண்டு ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஆகையால் அரசாங்கம் ஜனப் பிரதிநிதிகளால் நடத்தப்படுகிறது. ஜனநாயக நாடுகளில் பேச்சு சுதந்தரம், எழுத்து சுதந்தரம் மிகுதியாக உள்ளது. ஒவ்வொரு மனிதனும் சாதாரண காலங்களில் தனது அபிப்பிராயத்தைத் தைரியமாகப் பேசவும், எழுதவும் இயலும். யுத்த காலங்களில் கூட, ஜனநாயக நாடுகளில் உள்ள பேச்சு சுதந்தரம், எழுத்து சுதந்தரம் வியக்கத் தக்கது. அங்குள்ள பத்திரிகைகள் அரசாங்கத்தின் தவறுகளை இடித்துக் காட்டி மக்களின் குறைகளை நீக்கும் சுதந்தரமுடையனவாக உள்ளன.

எதேச்சாதிகார நாடுகளில் மக்கள் நிலை

எதேச்சாதிகார நாடுகளிலுள்ள மக்கள் சுதந்தர மற்றவர்கள். பேச்சு, எழுத்து சுதந்தரங்கள் கிடையவே கிடையாது. அரசாங்கம் ஜனப்பிரதிநிதிகளால் நடத்தப்படுவ தில்லை. தனக்கு அடக்கமான ஆட்களைக் கொண்டு தன்னுடைய இஷ்டத்தைப் போல சர்வாதிகாரி ஆட்சி புரிகிறுன். அவ்வாட்சியிலுள்ள குறைகளை எடுத்துக் கூற, மக்களுக்கு சுதந்தரம் கிடையாது. அந்நாட்டுப் பத்திரிகைகள் கூட அரசாங்க அபிப்பிராயத்தை ஒட்டியே எழுதுமே ஒழிய, வெட்டி எழுத முடியாது. தனி மனிதன் ஒருவன் தானுக முன்னுக்கு வர சந்தர்ப்பம் கிடையாது. ஜனநாயக நாடுகளில் உள்ளவைபோல, அரசியல் கட்சிகள் சங்கங்கள் ஏற்படுத்த இயலாது. சர்வாதிகாரிக்கு விருப்பமான சங்கங்கள், சர்வாதிகாரியினுடைய கட்சியைப் பின் பற்றிய சங்கங்கள், இவைகளைத் தான் ஜனங்கள் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஹிட்லர், முசோலினி இருவரும் தம் நாட்டு மக்களை அடிமைகளாக்கியதோடமையாது, மற்ற நாட்டு மக்களையும் தங்களுக்கு அடிமைகளாக்க வேண்டு மென்ற எண்ணங் கொண்டனர். உலக மெல்லாம் தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது ஹிட்லரின் பேரவா. ஜெர்மனியில் ஹிட்லரை எதிர்த்துப் பேசுபவரில்லாமல் செய்து விட்டாலும், அயல் நாடுகளில் ஹிட்லரைக் கண்டிப்பவர்கள் அதிகமாகி விட்டனர். யூதர்களுக்கு ஹிட்லரும் நாஜி கட்சியினரும் இழைத்த அக்கிரமங்கள் ஜனநாயகத்தின் எதிர்ப்பைப் பலப்படுத்தின. ஸ்பெயினில், ஜனநாயகம் குடியரசு கட்சியினரை ஆதரித்தது. ஹிட்லரும் முசோலினியும் பிராங்கோவை ஆதரித்தனர். பிராங்கோ வெற்றிபெற பெரிதும் உதவி புரிந்தனர். பொதுவாக ஹிட்லருக்கு ஜனநாயக நாடுகளை ஒடுக்கி; ஜனநாயகத்தை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. அவ்வெண்ணத்தை நிறைவேற்ற ஆஸ்திரியா, செகோசிலோவேகியா போன்ற நாடுகளைக் கைப்பற்றி, போலந்து மீது ஹிட்லர் நாடு பாய்ந்தது. ஜனநாயகம் போருக்கு முனைந்து பிரிட்டன் பிரான்ஸ் மூலமாகப் போர் தொடங்கியது. பிரிட்டனில் சகல கக்ஷியினரும் ஒத்துழைத்து திரு. சர்ச்சில் தலைமையில் தேசத்திலுள்ள சிறந்த அரசியல் தலைவர்களடங்கிய தேசீய மந்திரி சபை ஏற்பட்டது. பிரஞ்சு ஜெர்மன் யுத்தம் நெருக்கடியான நிலையிலிருக்கும்போது, முசோலினி, ஹிட்லருடன் சேர்ந்தார். பிரான்ஸ் சுதந்தர மிழந்தது. பிரிட்டன் மாத்திரம் தனித்துப் போராடி வந்தது.

அமெரிக்கா ஹிட்லரை எதிர்க்க வேண்டிய தளவாடங்களைக் குவித்து வந்தது. ஜப்பான், ஜனநாயக பிரிட்டன், அமெரிக்கா ஆகியவை மீது போர் தொடுத்தது. ஜனநாயகம் பெரும் ஆபத்திலிருந்தது. ஜனநாயகம் வீழ்ந்து விடுமோ என்ற பயம் கூடத் தோன்றியது, ஆனால், மக்கள் மக்களாகச் சர்வ சுதந்தரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக, நேச தேச மக்களனைவரும் ஒருமுகமாக ஜெர்மானிய ஜப்பானிய எதேச்சாதிகாரங்களை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டனர். ஆப்ரிக்காவிலிருந்து ஜெர்மன் சைனியங்கள் துரத்தப்பட்டன. சிசிலி பிடிபட்டது. சர்வாதிகாரி முசோலினி ராஜிநாமா செய்ய, இத்தாலி படாக்ளியோ அரசாங்கத்தை ஏற்றது. இத்தாலி சரணடைந்தது. ரஷ்ய மக்கள், ஹிட்லர் சைனியங்களைத் தோற்கடித்து ரஷ்யாவிலிருந்து வெளியேற்றி வருகின்றனர். ரஷ்யாவிலும் சைனுவிலும் சாதாரண மக்கள் காட்டும் வீரத்தனம் போற்றத் தக்கது.

தற்போது பிரிட்டன் அமெரிக்கா முதலிய நேச நாடுகள் யுத்தத்தில் வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கையுடன் பொருது வருகின்றன. ஜனநாயக ஆட்சியில் தான் பசிப்பிணி முதலிய மக்களின் பெருங் கஷடங்கள் தொலையும். ஜனநாயகம் தழைக்க வேண்டுமானுல், மக்கள் சுதந்தரத்துடன் வாழ வேண்டுமானுல், அச்சு நாடுகள் பரிபூரணமான தோல்வி அடைய வேண்டியது அவசியம். அச்சு நாடுகள் முறியடிக்கப்படும் வரை, ஜனநாயகம் தளராமல் உழைக்க வேண்டும். யுத்த முயற்சிக்குப் பெரு வாரியான ஆக்கம் தேட வேண்டும். யுத்தம் முடிந்த பிறகு, மற்றொரு முறை ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகா வண்ணம் ஜனநாயகத் தலைவர்கள் முயலுவார்களாக ! ஜனநாயகம் பலமிழந்தால் எதேச்சாதிகாரம் உயரும். எதேச்சாதிகாரம் உயர்ந்தால் யுத்தம் தொடங்கும். யுத்தம் என்றுல் மக்களுக்கு நாச காலம். யுத்தத்தில் மாள்பவர் ஒரு புறம். பஞ்சம், தொத்து நோய்கள் இவற்ருல் மடிபவர் மற்றொருபுறம். யுத்தம் மக்களை மாய்க்கும் கொடிய நோய். ஆக மீண்டும் யுத்தம் தொடங்காத வாறு, சமாதான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்ப் பெருமக்களே ! "விடுதலை" உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றுல், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப்பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24 0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிபபேட்டை, சென்னை.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.